பக்கங்கள்: இருபத்துநான்கு

Registered as a Newspaper

13 FEB 1999

# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2030 மாசி 01 சனிக்கிழமை (13-02-1999) SANJEAVY - Regenerative Tamil Weekly சிகரம்: 38

# பேச்சு மூலம் தீர்வு காண புலிகள் தயார்!

# அரசும் அதற்கு உடன் இணங்க வேண்டும்

## வன்னி சென்று திரும்பிய சர்வமதக்குழு ஜனாதிபதி, ரணிலை வற்புறுத்த முடிவு

கொழும்பு, பெப்ரவரி 13

**"பேச்சு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புலிகள் தயாராக உள்ளனர். அது தொடர்பான சமிக்ஞையை அவர்கள் எமக்குத் தெரியப் படுத்தி உள்ளனர். ஆகவே அரசும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடனடியாக புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்."**

**"ஜனாதிபதியையும் எதிர்க்கட்சித் தலைவரையும் சந்தித்து இது குறித்து தெரியப்படுத்தி பேச்சுக்கு வற்புறுத்தவுள்ளோம்."**

**- வன்னி சென்று புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்துத் திரும்பிய சர்வமதக் குழு கொழும்பில் இவ்வாறு தெரிவித்துள்ளது.**

தென்பகுதியில் உள்ள மத பீடங்களை பிரதிநிதித்துவம் செய்யும் 28 பேர் அடங்கிய சர்வமதக் குழுவினர் கடந்த திங்களன்று வன்னியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு விஜயம் செய்தது தெரிந்ததே. அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்த அவர்கள் விடுதலைப் புலிகள் பிரமுகர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தினர். தமது விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு திரும்பிய இக் குழுவினர் அங்கு செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர்.

அங்குவைத்தே பேச்சு வார்த்தை தொடர்பான புலிகளின் மேற்கண்ட நிலைப்பாட்டை அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் தமது விஜயம் தொடர்பான அறிக்கை ஒன்றையும் குழுவினர் விடுத்தனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

(7 ஆம் பக்கம் பார்க்க)

சர்வமதக் குழுவின் வன்னி விஜயத்துக்கு அனுமதியால்

## புலிகளின் மீதான தடை நீங்கியதாகவே அர்த்தம்

### ஜெயலத் ஜெயவர்த்தனா அறிக்கை

ஜனாதிபதியின் விருப்பத்துடன் பௌத்த உயர்பீடத்தைச் சேர்ந்த பௌத்தகுருமார் சமாதானப பிரதிநிதிகளாக வன்னிசென்று விடுதலைப்புலிகளுடன் பேசியுள்ளனர். இதன்மூலம அந்த இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடை ரத்தாகியுள்ளதாகவே கருதவேண்டியுள்ளது.

ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகளின் செய்திகளின்படி அஸ்கிரிய பீடம், அமரபுரபீடம் ஆகியவற்றைச் சேர்ந்த உயர்மட்ட பௌத்த குருமாரும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த உயர் தலைவர்களும் விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்காக வன்னி சென்றுள்ளனர்.

இந்தக்குழுவினர் ஜனாதிபதியின் விருப்பத்துடன் -- அவருக்குத் தெரியத்தக்கதாக -- வன்னி சென்றுள்ளனர்.

குழுவின் விஜயத்தின் மூலம் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதை நான் வரவேற்கிறேன். விடுதலைப்புலிகளுடன் பேச்சு நடத்தியே தீர்வுகாண முடியுமென்பதால் இந்தக் குழுவின் முயற்சி வெற்றிபெற வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

-- இப்படி அந்தச் செய்திக் குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

## மட்டு.நகரில் நேற்று 'பிக்கப்' கடத்தப்பட்டது!

மட்டக்களப்பு,பெப்.13

மட்டக்களப்பு நகரில் அதிஉயர்பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள நில அளவைத திணைக்களத்தில் இருந்து 'பிக்கப்' வாகனம் ஒன்று நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டுள்ளது. அதன் சாரதியும் வாகனத்துடன் கடத்தப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மேற்படி திணைக்கள அலுவலகத்துக்கு நேற்றுப் பிற்பகல் சென்ற ஐவர் தாம் 'ராஸிக்' குழுவைச் சேர்ந்தவர்கள் என்று தம்மை அறிமுகம் செய்துவிட்டு அங்கு நின்ற 'பிக்கப்' வாகனத்தை சாரதியுடன் தருமாறு கேட்டுப் பெற்றுச் சென்றதாகவும் --

நீண்டநேரமாகியும் அந்த வாகனம் திருப்பி கொண்டுவந்து ஒப்படைக்கப்படாததை அடுத்து திணைக்கள அதிகாரிகள் 'ராஸிக்' குழுவினருடன் தொடர்புகொண்ட போது தாங்கள் எவரும் அந்த வாகனத்தை பெற்றுச் செல்லவில்லை என அவர்கள் தரப்பில் தெரிவிக்கப் பட்டதாகவும் -- கூறப்படுகிறது.

அதனையடுத்து இந்த விடயம் உடனடியாகப் படையினரின் கவனத்

(கக்ாப ங்கக்ப ங்ஓ8)

பளையில் கொடூரம்

## அமுக்க வெடியில் சிக்கி மாட்டு வண்டி சிதறியது!

### மாடுகள் பலி: சாரதி படுகாயம்

யாழ்ப்பாணம், பெப்.13

பளை தர்மக்கேணிப்பகுதியில் நேற்றுக்காலை7 மணியளவில் மாட்டு வண்டில் ஒன்று அமுக்க வெடியில் சிக்கிச் சுக்குநூறாகச் சிதறியது: மாடுகள் இரண்டும் உடல் சிதறிப் பலியாகின. வண்டில் சாரதி படுகாயம் அடைந்தார்.

தோட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட கச்சானை ஏற்றிவருவதற்காக வண்டிலைப் பூட்டிக்கொண்டு வீட்டில் இருந்து வீதிக்குவந்த சிறிது நேரத்தில் வண்டில் அமுக்கவெடியில் சிக்கியதாகக் கூறப்படுகின்றது.

பளை, பேராலையில் இருந்து இடம்பெயர்ந்து தர்மக்கேணியில் வசிக்கும் அருளம்பலம் சுதாகரன் (வயது 32) என்பவரே உடல் முழுவதும் படுகாயமடைந்தார். இவரது கண்களிலும் பலத்த காயம் ஏற்பட்டு உள்ளது. பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கிருந்து யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவரது சகோதரரான அருளம்பலம் யோகலிங்கம் (வயது 36) என்பவர் வண்டிலின் பின்பக்கத்தில் நின்றிருந்த போதும் தெய்வாதீனமாகக் காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்படும் இரு காளை மாடுகளும் உடல்சிதறி சதைத் துண்டங்களாக அப்பகுதி எங்கும் காணப்பட்டன. (ஐ-15-139)

## 7 படையினர் காயம்

யாழ்ப்பாணம், பெப்.13

ஒட்டுசுட்டான் வடக்குப்பகுதியில் உள்ள பாதுகாப்பு நிலைகள் மீது கடந்த புதன்கிழமை காலை 10.15 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் 7 படையினர் காயமடைந்ததாக யாழ். படை வட்டாரங்கள் விடுத்த செய்திக் குறிப்பு தெரிவித்தது.

படையினர் நடத்திய பதில் தாக்குதலில் விடுதலைப்புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஷெல் வீச்சு

யாழ்ப்பாணம்,பெப்.13

யாழ்.குடாக் கடற் பகுதியை நோக்கி நேற்று முற்பகல் தொடர்ச்சியாக ஆட்டிலறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

முற்பகல் சுமார் 10 மணிக்கு ஆரம்பமான இத்தாக்குதல் விட்டு விட்டு சில மணிநேரம் நீடித்தது.

இத் தாக்குதலினால் யாழ்.நகரப் பகுதியும் அதிர்ந்தது.

இதேவேளை -

குருநகர், பாசையூர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் நேற்றுக்காலை தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப் படவில்லை.(ஐ-3-15-51-139-173-180)

செம்மணி விவகாரத்தில்

## நீதிமன்ற நடவடிக்கைகள் அரசினால் புறக்கணிப்பு!

### யாழ். நீதிவான் முறைப்பாடு

யாழ்ப்பாணம், பெப்.13

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக வெகுஜனத்தொடர்பு சாதனங்களில் அரசுத் தரப்பினால் வெளியிடப்பட்ட தகவல்கள் குறித்து யாழ் மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் நீதிச்சேவை ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்.

செம்மணிப புதைகுழிகளை தோண்டுவது தொடர்கான இரகசியப் பொலிஸாரின் மனு கடந்த மாதம் 29 ஆம் திகதி யாழ் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது செம்மணிப் பிரதேசத்தில் வெள்ளம் தேங்கியிருப்பதால் புதைகுழிகளை உடனடியாகத் தோண்ட முடியாதிருப்பதாகவும் அதற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றும் பொலிஸார் கோரியிருந்தனர்.

பொலிஸாரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் புதைகுழி தோண்டுவது தொடர்பான அனுமதி வழங்கும் தவணையை மார்ச் 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்பொழுது பத்திரிகைகள்,வானொலி மற்றும் தொடர்பு சாதனங்களில் செம்மணிப் புதைகுழியை தோண்டுவது தொடர்பாக வெளியாகியுள்ள தகவல்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை கவனத்தில் எடுக்காமலேயே வெளியிடப்பட்டுள்ளன என்று யாழ் மேலதிக நீதிவான் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

(இது தொடர்பான தகவல் ஒன்று 'அதிரடி அரங்கு' பத்தியில் வெளியாகி உள்ளது.) (ஐ-5)

## பயணிகளுடன் 'லங்கா முடித்த' இன்று வந்து நாளை திரும்பும்

### டிக்கட் பெற்றோருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப்.13

திருகோணமலையிலிருந்து ஆயிரத்து 270 பேருடன் இன்று மாலை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் 'லங்கா முடித்த' கப்பல் நாளை ஆயிரத்து 200 பயணிகளுடன் மீண்டும் திருமலை செல்ல இருப்பதாக யாழ்.சிவில் நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திருகோணமலை செல்வதற்கு டிக்கட் பெற்றவர்களை இன்று காலை

(8ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மறியா சுலோசனா யோசவ்

பண்டத்தரிப்பைப்பிறப்பிடமாகவும் நீர்கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மறியா சுலோசனா யோசவ் 11-02-99 இல் நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் திரு. ஜி. எம். ஜே. ஜோசவ் அவர்களின் அன்பு மனைவியும் டிலக்ஷன், டயானி ஆகியோரின் அன்புத் தாயாரும் திரு திருமதி சூசைப்பிளளை அல்போன்சஸ் மேரிதிரேசா தம்பதிகளின் அன்பு மகளும் திரு. திருமதி வி. எம். ஜோசவ் (மாட்டீன் ஒழுங்கை. யாழ்ப்பாணம்) அவர்களின் மருமகளும் றோகினி (லண்டன்), குணம் (பிரான்ஸ்), சாந்தினி (லண்டன்), றோகான் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அன்ரன் (நியூசிலாந்து), ஜெயம் (கனடா), குமார் (கனடா), ராஜன் (புனித வளனார் அச்சகம், யாழ்ப்பாணம்), அருட்சகோதரி பிரான்சிஸ் (தி.கு.க. மடம், இந்தியா), திருமதி ஜோசப்பின் செபரட்ணம் (ஆசிரியை, தி. கு. க. மடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. அல்போன்சஸ்
(தகப்பன்)

பொத்தி ஒழுங்கை,
பண்டத்தரிப்பு.

(63065)

## அருணாசலம் சேதுராஜா
(மணியம்)

கொட்டடியைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் சேதுராஜா [(மணியம்) - வவுனியா இரணையிலுப்பைக்குளம் தபால் அலுவலக இளைப்பாறிய தபால் ஊழியர்] அகால மரணமாகிவிட்டார்.

இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் மோனகாதேவி, புஸ்பலிங்கம்(வர்த்தகர்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் சண்முகநாதனின் மாமனாரும் விநோதன், ஜசிந்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அராலி புனாவடை மயானத்தில் இன்று (13-02-1999) காலை 10,00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
புஸ்பலிங்கம் (குட்டி)
(வர்த்தகர்)
[மகன்]

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.
(63074)

## திருமதி பூரணம் வைரமுத்து

இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி பூரணம் வைரமுத்து (மலாயன் பென்சனர்) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை வைரமுத்துவின் (மலாயன் பென்சனர்) அன்பு மனைவியும், சிவம், சிவனேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மணிவதனம், ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுகனி (சுவிற்சலாந்து), சிவகஜனி, பிரதீபன், பிரதீபா, பிரசாந்தி, கஜராம், கஜனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் தேவராஜா (ஓய்வு பெற்ற பிரதி அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி), இணுவை சுப்பிரமணியம் (அதிபர், கட்டுடை சைவ வித்தியாசாலை), செல்வானந்தராஜா, தேவராணி (கொழும்பு), கமலராணி (கொழும்பு), தர்மகுணராணி, அருந்தவராணி ஆகியோரின் சிறியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14-02-99) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வ. சிவம்
(மகன்)

''வைரபதி''
இணுவில் மேற்கு,
இணுவில்.

(63066)

## குமாரசாமி வினாயகமூர்த்தி
(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் C. E. B)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கு, பலாலி றோட்டை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய குமாரசாமி வினாயகமூர்த்தி லண்டனில் 08. 02. 99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சங்கானை சோதிடர் குமாரசாமி - முத்தம்மா ஆகியோரின் மூத்த புதல்வரும் சர்வலோகேஸ்வரியின் அன்புக்கணவரும் செந்தில்குமரன் (U. K), ஸ்ரீ ரஞ்சினி, கந்தையா (அவுஸ்திரேலியா)), தசரதகுமார்(U K), ஜெயக்குமார்(U K), சிவகுமார் (U. K) ஆகியோரின் அருமைத் தந்தையாரும் பாலசுப்பிரமணியம், சோமசுந்தரம், காலஞ்சென்ற பஞ்சரத்தினம், சிவசுந்தரம், தியாகேஸ்வரி, சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. ருபசிங்கம்
(மைத்துனி)

''முருகன் பதி''
வளாக வீதி,
திருநெல்வேலி.

(63075)

## இளைஞர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை

யாழ்ப்பாணம், பெப் 13

யாழ். வெலிங்டன் சந்தியிலுள்ள கடையொன்றில் கடந்த 10 ஆம் திகதி தேநீர் அருந்திக் கொண்டிருந்த போது சந்தேகத்தின் பேரில் படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களில் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கணேஷ் செல்வகுமார் (வயது 29, ஓட்டுமடம் யாழ்ப்பாணம்) என்ற இளைஞரே தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகிறார். இடது கண்ணை ஏற்கனவே இழந்துள்ள இவரது கைது தொடர்பாக உறவினர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர். (ஐ-5)

## விபத்தில் நால்வர் காயம்

யாழ்ப்பாணம். பெப். 13

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோயிலடிக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

சுன்னாகத்தைச் சேர்ந்தவரும் மோட்டார்சைக்கிளை ஓட்டிவந்தவருமான வல்லிபுரம் தனநாயகம் (வயது49) என்பவரும் சைக்கிளில் சென்றவரும் சண்டிலிப்பாய் தெற்கைச் சேர்ந்தவருமான முருகேசு தெய்வேந்திரம் (வயது 35) என்பவருமே காயமடைந்தவர்களாவர்.

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணம் செய்த மோட்டார் சைக்கிள் செலுத்தியவரின் மனைவியும் காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை காரைநகரில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் மகாலிங்கம் ரதிமல (வயது 11) என்பவரும் காயமடைந்தார். (இ-15)

நாகம்ஸ்
இன்று முதல்
பிரபு, சுகன்யா,
ராதாரவி, விசு
நடித்த
சின்னமாப்ளே
காட்சிகள்: 10-30, 2-30
(63070)

ராஜா
யாழ்ப்பாணம்.
அஜித் - தேவயானி
ஹீரா - மணிவண்ணன்
கரன் நடித்த
காதல் கோட்டை
இன்று காட்சிகள்
10-30, 2-00, 5-00
(சி/6410)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று
விஜய், சிம்ரன்
நடித்த
துள்ளாத மனமும்
துள்ளும்
புதிய வெளியீடு
காட்சிகள் 10.30, 2.30
(புதிய நேரம்)
T. P. No. 070-212223
(62900)

# மரண அறிவித்தல்கள்

## கயித்தார் சூசைப்பிள்ளை
(ஆசைப்பரியாரியார்)

(சித்த ஆயுர்வே , ஹோமியோபதி, விஷகடி வைத்தியர்)

கொழும்புத்துறை ஆனந்தன்வடலி வீதியைச் சேர்ந்த கயித்தார் சூசைப்பிள்ளை காலமாகி விட்டார்

அன்னார் மாகிறேற்றின் அன்புக் கணவரும் மரியலூர்த்துநாயகி (செல்வராணி), பேணடேற், (இந்திராணி). யேசுதாஸ் (யாழ். பல. நோ. கூ. ச. கிளை முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டேவிட் (ஓய்வுபெற்ற புகையிரதப் பகுதி ஊழியர்), ஜோர்ச் (யாழ். மாநகர சபை), மரிஸ்ரெலா (சாரதா) ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்ரன் (லண்டன்), ஜயந்தி (இந்தியா), ஜயக்கொடி, ஜயதீச சூரியா, காலஞ்சென்ற லைனல், டெஸ்சா, டியூக், டிவ்னா, டிமெல் (யாழ். மாநகர சபை), ஜெமெல்டா, ஜென்சலிமா, மயித்ரா, ஜெனஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் நிசந்தலா, மரின் ஆகியோரின் அன்புப் பூட்டனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை, ஆசீர்வாதம், திரேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-2-99) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு (புதிய நேரம்) அன்னாரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித செபமாலை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றி யாழ். புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
எஸ். யேசுதாஸ்
(யாழ். ப.நோ.கூ.சங்கம்)

'றொசாறியன்ஸ்'
ஆனந்தன்வடலி வீதி,
கொழும்புத்துறை.

(சி/6431)

## இரத்தினம் தனபாலசிங்கம்
(N. R ரான்ஸ்போட் உரிமையாளர்)

வேலணை மேற்கைப்பிறப்பிடமாகவும் பிரம்படி லேன் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் தனபாலசிங்கம் (S. M) 11-2-99 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் இரத்தினம் (N. R) ஞானேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வரும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் செல்லமுத்து அவர்களின் அருமை மருமகனும் தனலட்சுமி. பரமேஸ்வரி. தவபாலசிங்கம் (கனடா), மகாலட்சுமி (ஆசிரியர்), கங்காலட்சுமி, துரைராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெயக்குமார் (சித்த மருத்துவத் துறை, யாழ். பல்கலைக் கழகம்), சிவகுமார் (வவுனியா), கமலேஸ்வரி, சிற்றம்பலம், காலஞ்சென்ற சிவநாதன், யோகராஜா (கனடா), கௌரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் வனஜா (ஜேர்மனி), வசந்தன் (ஜேர்மனி), வதனி. மதிவதனி, வக்சலா. வதனா, வக்ஷன், கிரோஸ், சந்தோஸ், லோஜித், செந்தூரன், ஆரூரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கேசவனின் (கனடா) பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-2-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
து. சிவஞானச்செல்வம்
(மாமனார்)

(63077)

## சின்னத்தம்பி இரத்தினசிங்கம் J. P.

துன்னாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரத்தினசிங்கம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், நீர்ப்பாசனத்திணைக்களம்) காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும் பவானிதேவி (கனடா), பரநிருபசிங்கம் (பிராந்திய முகாமையாளர், சாமுவேல் அன்சன் கொம்பனி யாழ்.), யோகசிங்கம் (கனடா), ஜெயசிங்கம் (கனடா). சிவாஜினிதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், திருமதி யோகவதி மகேஸ்வரனின் பாசமிகு சிறிய தந்தையாரும், சிவராமலிங்கம், செல்வராணி, சிறிதேவி, செறில் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சிவகரன், சுதாகரன், பரணிதரன் (இறுதியாண்டு மருத்துவபீட மாணவன் யாழ்.), டுஸ்யந்தன் (HAYLEYS Colombo), கார்த்திகா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆண்டு 12 உயிரியல் பிரிவு மாணவி), அகிலன், நிசந்தன், சாலினி, ராஷா, ஆஸிணி, நத்தாலி ஆகியோரின் அன்புப் பேரனும், ஷிரிகேஸ், அஞ்சலி ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-2-99) சனிக்கிழமை 1-00 மணியளவில் (இலங்கை நேரப்படி) கொழும்புத்துறை வீதியில் உள்ள இலக்கம் 107/13, மொறீஸ் லேனில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
லயன் - இ. பரநிருபசிங்கம்
(மகன்)

107/13, மொறிஸ் லேன்,
கொழும்புத்துறை,
சுண்டுக்குளி.

(63076)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிரடி அரங்கு

செம்மணி புதைகுழி விவகாரத்தைக் குழ குழப்பு எண்டு குழப்பிப் போட்டு அடித்துள்ள அரசு, தனது போக்கிலிருந்து மாறுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டிருப்பது போல் படுகின்றது.

செம்மணி விவகாரம் குறித்து வெளிவிவகார அமைச்சு இரண்டு தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட நீண்ட அறிக்கை அதைத்தான் காட்டுகின்றது!

செம்மணி விடயம் நீதிமன்றத்துக்கு முன்னால் வந்து விட்டது. இதன் பின்னர் அது குறித்து அறிக்கை, கருத்து வெளியிடுவதிலும் பொது நிகழ்வுகளில் உரையாற்றுவதிலும் செய்திகள் வெளியிடுவதிலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் மிக அவதானமாக இருக்க வேண்டும். கண்ணை மூடிக் கொண்டு கதைத்து விட்டு நீதிமன்றங்களிடம் வாங்கிக் கட்டக் கூடாது.

செம்மணி புதைகுழிப் பிரதேசத்துக்கு யாழ். நீதிவான் கடந்த ஜனவரி 8 ஆம் திகதி நேரடியாக விஜயம் செய்து நிலைமைகளைப் பார்வையிட்டார் என்றும் —

புதைகுழி தோண்டும் பணி மார்ச் 5 ஆம் திகதி ஆரம்பமாக வேண்டும் என்று, அத்தவணையின் போது நீதிவான் பணிப்புரை விடுத்தார் என்றும் —

வெளிவிவகார அமைச்சு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது. இந்த அறிக்கை உள்நாட்டு, வெளிநாட்டு வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் பரபரப்பாகப் பிரசுரமாவதையும் வெளிநாட்டு அமைச்சு உறுதிப்படுத்திக் கொண்டது.

ஆனால் மேற்படி இரண்டு விடயங்களும் முற்றிலும் தவறு என்பதோடு நீதிமன்ற நடவடிக்கைகளைத் திரித்து, நீதிமன்றத்தைத் தவறாக வழி நடத்த எடுக்கும் முயற்சி இது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

யாழ். நீதிவான் இன்னும் செம்மணிப் புதைகுழி அமைந்துள்ள பிரதேசத்துக்கு நேரில் செல்லவில்லை. அத்தோடு புதைகுழியைத் தோண்டுவதற்கான உத்தரவு எதனையும் அவர் இன்னும் விடுக்கவில்லை. மேற்படி விவகாரம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் சமர்ப்பித்துள்ள மனுவை ஆராயும் விடயத்தையே மார்ச் 5 ஆம் திகதிக்கு அவர் ஒத்திவைத்திருக்கின்றார்.

அப்படியிருக்க, முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக்கொண்டு தான் நினைத்தபாட்டில் பத்திரிகை அறிக்கை வெளியிட்டிருக்கின்றது வெளிவிவகார அமைச்சு.

இதே தொனிப்பட, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோனும் கொழும்பில் பத்திரிகையாளர்களுக்குத் தகவல் சொல்லியிருக்கின்றார்.

இந்த விடயத்தைக் கையாளும் நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன், கொழும்பு ஹல்ஸ்டோர்ப் நீதிமன்றங்களில் பல்வேறு தரத்திலும் பணியாற்றியவர்; சட்டத்துறையில் தேர்ச்சியும் அனுபவமும் மிக்கவர்.

நீதிமன்ற விடயங்களில் தலையிடும் போக்குக்கு, அடுத்த தவணையின் போது பகிரங்கமாக நீதிமன்றத்தில் அரசுத் தரப்பு வாங்கிக் கட்டிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

★ ★ ★ ★ ★

கடந்த வாரம் தென்னாபிரிக்க பத்திரிகையாளர் குழு இங்கு வந்தது. இராணுவத்தினர் எல்லா இடங்களுக்கும் 'கூடவே' சென்று யாழ்ப்பாணத்தைச் சுற்றிக் காட்டினர்.

படையினர் 'கூடவே' வந்தால் தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்களுக்கு உண்மை நிலையைக் கூற முடியாத இக்கட்டு இங்குள்ளோருக்கு. உதாரணத்துக்கு — சாம்பிளுக்கு — ஒன்று!

சுன்னாகம் மின் நிலையத்துக்குச் சென்ற தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்கள், மின் நிலையமும் அதன் சுவர்களும் குண்டு வெடிப்புக்களினால் சேதமுற்றிருப்பதைக் காட்டி ''யாருடைய வேலை இது?'' என்று கேட்டார்களாம். அங்கு இருந்த மின்சார சபை அதிகாரிகள், படையினரை முன்னால் வைத்துக்கொண்டு உண்மை கூற முடியாத நிலையில் — பதில் பேசாமல் — அசட்டுச் சிரிப்புச் சிரித்து சமாளித்தனர். ஆனால் படை அதிகாரி ஒருவர் முந்திக் கொண்டு ''புலிகள் நடத்திய தாக்குதல்களில் இவை சேதமடைந்தன'' — என்று பதில் கூறினார். புருவத்தை நெரித்து, சந்தேகப் பார்வையுடன் பதிலை செவிமடுத்தனர் பத்திரிகையாளர்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் இருந்த சமயம், விமானத் தாக்குதல் நடத்தி சுன்னாகம் மின் நிலையத்தை தாங்கள் அழித்ததை படைத் தரப்பு, முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைத்த மாதிரி மறைத்து விட்டது!

பத்திரிகையாளர்களைக் 'கூடவே' கூட்டி வந்து, 'கூடவே' கூட்டிச் செல்வதன் இரகசியம் இதுதான்!

★ ★ ★ ★ ★

நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த மூத்த பிரமுகர் ஒருவர் வேதனையுடன் சுட்டிக்காட்டிய தகவல் இது:—

குடாநாட்டில் சுமுக நிலை இருப்பதாகப் பீற்றிக் கொள்கின்றார்கள். ஆனால் எதுவும் இங்கு நடைமுறையில் இல்லை.

வடபகுதியிலிருந்து வெளியிடங்களுக்கான போக்குவரத்துக்கு வழி ஏற்படுத்திக் கொடுப்பதில் அரசுத் தரப்புக்கு — படைத்தரப்புக்கு — நெருக்கடியிருப்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் அப்படிப் பயணம் செய்வதற்கு ஆள்களுக்கு அனுமதி வழங்குவதற்கு ஏன் அதிக கெடுபிடி — நெருக்குதல் — காட்டுகின்றார்கள் என்பதைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை,

கப்பல் மூலமோ விமானம் மூலமோ வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெறுவதற்குக்கூட தேவையற்ற கட்டுப்பாடு ...... கெடுபிடி ...... அலைச்சல்.

எமது பகுதியில் (நல்லூரில்) ஒரு நாளைக்கு ஐந்து பேருக்கு மட்டுமே விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. 'முதல் வருவோருக்கு முதலில்' என்ற அடிப்படையில் இது வழங்கப்படுவதால் அதிகாலையில் — ஊரடங்கு நீக்கப்பட முன்னரே — விளக்குப் பிடித்துக் கொண்டு முகாமுக்குச் செல்ல வேண்டிய நிலை. இரண்டொரு தினங்களுக்கு முன்னர்கூட இளம் பெண் ஒருவர் அதிகாலை 3.30 — 4.00 மணிக்கு விளக்குடன் முகாமுக்குச் சென்று நான்காவது ஆளாக விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுத் திரும்பினார். அதன் பின்னர் முற்பகல் ஒரு மணி நேரம் முகாமில் விசாரணை. அதற்குப் பின்னர் அனுமதி வழங்கும் நடைமுறையாக படிவம் அடுத்த கட்டத்துக்கு ஒப்படைக்கப்படும்.

இப்படி வேதனையுடன் சுட்டிக்காட்டினார் அந்தப் பிரமுகர்.

அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு ஆதரவாகக் கையை உயர்த்திக் கொண்டு — அல்லது எதிர்த்து வாக்களிக்காமல் — கொழும்பிலும், வெளிநாட்டுச் சுற்றுலாக்களிலும் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கும் — தங்களை யாழ். மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் பிரகிருதிகளுக்கு இத்தகவல் சமர்ப்பணம். இங்கு மக்கள் படும் கஷ்டங்களுக்கு இது ஒரு 'சாம்பிள்'. அவ்வளவே!

★ ★ ★ ★ ★

ஏழாலைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் அப்பகுதியில் பரவலாகப் பொதுமக்கள் தாக்கப்பட்டதாகப் பலத்த பேச்சு.

இராணுவ உயர் பீடத்தின் கவனத்துக்கு இதைக் கொண்டு வந்தால் ''எப்போது? எங்கு? யாருக்கு? யாரால்?'' எனக் கேட்கின்றார்கள். ''ஓரிரு தகவலையாவது தாருங்கள். சம்பந்தப்பட்டோரைப் பிடித்து கடும் நடவடிக்கை எடுக்கின்றோம். ஓரிரு தடவைகள் நாம் நடவடிக்கை எடுத்தால் மீண்டும் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறமாட்டா. இதைக் கவனத்தில் எடுக்காமல் — நடவடிக்கை எடுக்காமல் — விட்டால் இதுவே தொடர்கதையாகிவிடும். எனவே விவரங்களைத் தாருங்கள். புலிகள் எம்மீது தாக்குதல் நடத்துவதன் முக்கிய நோக்கங்களில் ஒன்று அதன் மூலம் பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையிலான நல்லுறவைக் குழப்புவதே ஆகும். அந்த இலக்கை அவர்கள் அடைவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. தவறாக நடந்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். விவரங்களைத் தாருங்கள்.'' — என்று இராணுவ உயரதிகாரிகள் விடாப்பிடியாகக் கேட்கின்றார்கள்.

ஆனால் வெள்ளி நண்பகல் வரை தாக்குதலுக்கு இலக்கான பல டசின் கணக்கானோரில் ஒருவர் கூட உதயனுக்கோ அல்லது மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கோ அல்லது சம்பந்தப்பட்ட எந்த அமைப்புகளுக்கோ முறைப்பாடோ, தகவலோ கொடுக்கவில்லை.

பலர் தாக்குதலுக்கு இலக்கானது சர்வ நிச்சயம். ஆனால் பயத்தில் முறைப்பாடு செய்ய எவரும் தயாரில்லை.

இப்படி எல்லோரும் Safe Side இல் நின்று விளையாட முயற்சித்தால் ஒருவரும் Safe Side இல் இருக்க முடியாது.

தயவுசெய்து பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பாதிப்புக்களை அம்பலப்படுத்த முன்வரவேண்டும்.

— மின்னல்

## சமய நிகழ்வில்

கொழும்புத்துறை, பெப். 13

தொல்புரம் 'கொட்டடியம்பதி' அருள்மிகு ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹா சிவராத்திரி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணியளவில் அம்பிகைக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து நான்கு சாமப் பூஜைகள் நடைபெற்று மறுநாள் திங்கட்கிழமை காலை 8-00 மணியளவில் வசந்தன் கம்பு (கோலாட்டம்) தேவஸ்தான முன்றலில் நடைபெறும்.

(ஐ–30)

★ ★ ★

மாதகல் புனித லூர்து அன்னை கெபி திருவிழாவில் இன்று சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு திருப்பலியும், நற்கருணை ஆராதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப ஆசீரும் இடம்பெறவுள்ளன.

(க)

★ ★ ★

நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நாளை ஞாயிறு சிவராத்திரி நான்கு சாமப் பூஜை வழமை போல் இடம்பெற உள்ளது.

திருக்கேதீஸ்வரர் ஆலயத்தில் இடம்பெறுவது போன்ற லிங்க வழிபாடும் இங்கு நடைபெறும். (ஐ)

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மகாசிவராத்திரி விழா சிறப்பாக இரவு முழுவதும் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகள் ஆலய பரிபாலன சபையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ-90)

★ ★ ★

கோப்பாய் சாந்திலிங்க சுவாமிகோயிலில்மகாசிவராத்திரி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் நடைபெறவுள்ளது.

விசேட நிகழ்வாக காலை 9 மணிக்கு கோப்பாய் கற்பக விநாயகர்ஆலயத்தில் இருந்து பால் செம்பு எடுக்கும் வைபவமும் இடம்பெறும். (க)

## நியமனங்கள்

வடமராட்சி, பெப். 13

கரவெட்டி பிரதேச சபையின் செயலாளராகக் கடமையாற்றிய எஸ். மகேந்திரன் வடமராட்சி கல்வி வலயத்துக்கும், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எஸ். சிவபுண்ணியம் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கும், கரவெட்டி பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றிய எஸ். பசுபதி பருத்தித்துறை நகரசபைக்கும் அதி சிறப்புத் தரத்துக்கு (சுப்றாகிறேட்) பதவி உயர்த்தப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ–173)

# மின்னைத் துண்டித்து வீட்டில் திருட முயற்சி

## நல்லூர்ப் பகுதியில் சம்பவம்

வீடு ஒன்றிற்குள் சென்று ஒளிந்திருந்த திருடர்கள் வீட்டுக்காரர் படுக்கைக்குச் சென்று உறங்கியதும் வீட்டின் மெயின் சுவிச்சை நிறுத்தி மின்னைத் துண்டித்துவிட்டு திருடுவதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நல்லூர் வைமன் வீதியில் இடம்பெற்றது.

வீட்டிற்குள் ஒளிந்திருந்த திருடர்கள் உறங்கியவர்கள் மீது 'டோர்ச் லைற்' வெளிச்சத்தைப் பாய்ச்சி அவர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரிக்க முயற்சித்த சமயம் வீட்டுக்காரர் திடீரென எழுந்து கூக்குரலிடவே திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

வீட்டுக்குள் கொடியில் தொங்கவிடப்பட்டிருந்த சேர்ட்டின் பொக்ட்டில் இருந்த ஆயிரத்து [illegible] பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு திருடர்கள் [illegible] விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-17)

# பதிவாளர் அலுவலகத்தில் அஞ்சலி

முன்னாள மாவட்ட காணிப் பதிவாளர் அகிலேசர் பொன்னம்பலத்தின் மூன்றாவது ஆண்டு நினைவு தினம் கடந்த புதனன்று யாழ், மாவட்ட பதிவாளர் அலுலகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

மேலதிக மாவட்ட காணிப் பதிவாளர் எஸ். சதாசிவ ஐயர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் அமரர் பொன்னம்பலத்தின் திருவுருவத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-5)

# நயினை இறங்குதுறையில் பயணிகள் தங்க மண்டபம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் முன்பாகவுள்ள இறங்குதுறயில் புதிதாகப்பயணிகள் தங்கும் மண்டபம் அமைக்கப்பட்டு வருகின்றது.

நீண்டகாலமாக இப்பகுதியில் உள்ள துறைமுகங்களில் பயணிகள் தங்கும் மண்டபம் இங்கு இல்லாதிருந்தது குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதனின் முயற்சியினால் ஐ. நா. கருத்திட்டத்தின் கீழ் பயணிகள் தங்கும் மண்டபம் அமைக்க 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டதுடன் நயினாதீவு மக்களின் பங்களிப்பாக 2 லட்சம் ரூபா நிதியும் கிடைத்தது. 51 அடி நீளமும் 26 அடி அகலமும் கொண்ட இந்த மண்டபம் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

## புனரமைப்பு

புன்னாலைக்கட்டுவன் தெற்கில் உள்ள பூதராயர் கோயில் புனரமைக்கப்படுகின்றது இக் கோயில் கடந்த காலவன் செயல்களினால் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்போது ஊர் மக்களின் ஒத்துழைப்புடன் இக்கோயில் புனரமைக்கப்பட்டு வருகின்றது. (ஐ - 13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

49 – 1195 தொடர் இலக்கங்களைக் கொண்ட 135 மொடல் டிராக்டரும் அதனுடன் இணைந்த பெட்டியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 375, காங்கேசன்துறை வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (63037)

யாழ். மருதடி வீதியில் 2 பரப்புக் காணியில் 1100 சதுர அடி அத்திவாரம் போட்டு 7 அடி மட்டம் கட்டப்பட்ட வீடு (பொழி கல்லினால்கட்டப்பட்ட கிணறும் நன்னீர்க் கிணறும் உண்டு) தொடர்பு: எ. ஜெயராஜா 24 / 2A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (63017)

நல் நிலையில் உள்ள முற்றாக உருமறைக்கப்பட்ட மூன்று மடிப்புடைய 10 அடி நீளமுடையதுமான இரும்புக் கேற் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; A.E பாலசிங்கம் (C.T.B சாரதி), சாவற்காடு, ஆனைக்கோட்டை. (63020)

## கிறிஸ்தவர்

பிரத்தியேக வகுப்புக்கள் GAQ 2000 ஆரம்பம் 14-02-99 Sun 11 A M, G.A.Q 99 வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Tue – Thu 4 P M. A/L 99Paper Class நடைபெறுகின்றன A/L2000, 2001 வகுப்புக்களும் நடைபெறுகின்றன. ஆசிரியர் J B. சுனீக்கா B A (Hons) 54, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். (62948)

## O/L MATHS

ஆண்டு 6—11 வரை ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், 34 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 பணித்தியாலங்களில் அதிவிஷேட சித்திக்குக் கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி. (63049)

## ஆங்கிலம்

Spoken English 40 மணித்தியாலங்களில், G.A.Q பட்டப்படிப்புப் பரீட்சையிலும். O/L பரீட்சையிலும் Distinction, Credit பெறுபேறடைய கற்பிக்கப்படும். ஆசிரியர்: 85, சிவன்கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (62985)

## மணமகள் தேவை

36 வயது, 32 வயது பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு படித்த, அழகான ஆசிரியைகளை பெற்றோர் தேடுகின்றனர். விரும்பியோர் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல 844. மே/பா உதயன், யாழ்ப்பாணம். (63051)

## ஆங்கிலக் கல்வி

ஆண்டு 3 இல் இருந்து 10 வரையான வகுப்புகளுக்கு ஆங்கிலத்துடன். ஆங்கிலத்தில் பேசவும் பயிற்சி, ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி; 426 (302), காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். சங்கானை பிரதான வீதி, தபாற்கந்தோர் அருகில் சங்கானை. (63016)

## திருமணசேவை

சகல மதம், உள்நாடு, வெளிநாடு உத்தியோகம் தொழில்சார் மணமக்களுக்கு மான திருமணங்களுக்கு விரும்பியவர்கள் மட்டும சகல விபரங்கள், படங்களுடன் தினமும் சந்திக்கலாம். சேவை நம்பகம் திருமண சேவை, வைமன் வீதி, நல்லூர். (63042)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 – 01 – 1935

மலர்வு 18 – 02 – 1993

## கந்தையா வினாயகமூர்த்தி

(K. V)

(முன்னாள் பிரபல வர்த்தகர், யாழ். — கொழும்பு)

திதி: 13 — 02 — 1999

அன்புச் சுடரே குடும்பத்தின் ஒளிவிளக்கே
எமதினிய அப்பாவே!
அன்பாய் வளர்த்து விட்டு வெகு விரைவில்
சென்றதேனோ?
ஆண்டுகள் ஆறு சென்றாலும் உங்கள் அன்பு
முகம் மாறுமோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளில் வாழும்
குடும்பத்தினர்

கைதடி நாவற்குழி,
கைதடி. (62995)

# 22 ஆம் வருட நினைவு — 33 ஆம் நாள் நினைவு

# கண்ணீர்ப்பூக்கள்



அமரர்
## கந்தையா கருணாநிதி
(ஆறுப்பிள்ளை)
(பொலீஸ் புலனாய்வு உத்தியோகத்தர்,
வித்தகபுரம், தெல்லிப்பழை)



திருமதி
## கருணாநிதி பொன்மலர்
(மலர்)
(தம்பாலை, அச்சுவேலி)

அன்பின் கருணை நிதியே! பண்பு நிறை பாசமலரே
உன்னை விட்டுப் பிரிந்து இருபத்து இரண்டு வருடமானதே!
ஆருயிர்த் தாயாரே! எமைப்பிரிந்து இன்று முப்பத்துமூன்று நாளானதே!
எங்கள் நெஞ்சில் நீங்கள் என்றென்றும் உதிராத முத்தாக ஒளிர்ந்திருப்பீர்கள்
அம்மா!
உள்ளத்தில் மகிழ்ந்திருந்து எமையெல்லாம் விட்டு எங்கு பிரிந்து சென்றீர்கள்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய குருநாதரை வேண்டுகின்றோம்.

குடும்பத்தினர்.

செ. நம்பியாரூரன்,
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில். (63036)

# கண்ணீர் அஞ்சலி

எமது உயிர் நண்பர்

## V. M. K. குலேந்திரன்

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

சி. இ. முத்துக்குமாரசாமி
குடும்பத்தினர்,

கைதடி. (63050)

# வீடு ஏல விற்பனை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திற்குச் சொந்தமான மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பணிமனைக்கு அருகில் உள்ள வீடு 7 – 03 – 99 ஞாயிறு காலை 10-00 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும். இந்த ஏலவிற்பனையில் பங்குகொள்ள விரும்புவோர் 5 - 03 - 99 வெள்ளிக்கிழமை பி. ப 5-00 மணிக்கு முன் ஆலய காரியாலயத்தில் ரூபா 5,000 (ரூபா ஐயாயிரம்) வைப்புப்பணமாகக் கட்டி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும். ஏல விற்பனையில் பங்குபற்றி வீடு கொள்வனவு செய்ய முடியாதவர்களுக்கு வைப்புப் பணத்தில் ரூபா 4,500 (ரூபா நலாயிரத்து ஐந்நூறு) மட்டும் மீளளிக்கப்படும.

தர்மகர்த்தா சபை,
மானிப்பாய் மருதடி விநாயகர்
ஆலயம்.

(62959)

# 16-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
## யோகாம்பாள் இராஜசிங்கம்
(தேவி ரீச்சர்)
(யாழ்ப்பாணம் — கொழும்புத்துறை)

மலர்வு: 03 – 04 – 1930

உதிர்வு: 29 – 01 – 1999

பண்பின் உறைவிடமாய், பாசத்தின் திருவுருவாய்
பல விரதம் நீ இருந்து பார் புகழ எம்மை வாழ
வைத்தாய்
உன் இதயத்தில் சத்திர சிகிச்சை என்றதும் — எம்
இதயம் துடித்ததம்மா. புத்தாண்டு வாழ்த்து
மடலினை
எமக்களித்து புது உலகம் நீ சென்றாய்.
எங்கு நீ சென்றாலும் உன் இனிய நிகழ்வுகள்
எம் இதயத்தில் நீங்காது நிலைத்து நிற்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

திருமதி தெ. மனோகரன்
'உமாபதி'
87/1, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம். (63044)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நல்லூர் பிரதேச நூலகம்.

# ஒபடகே 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்

வடமாகாண மீள்குடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபைத் தலைவர் என். ஒபடகே, பொது முகாமையாளர் என். வாபதேவா ஆகியோர் எதிர்வரும் 17 ஆம் திகதி உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்கள் தங்கவுள்ள இவர்கள் 17 ஆம் திகதி பகல் 2. 00 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச திணைக்களத் தலைவர்களைச் சந்தித்து 1998, 99 ஆம் ஆண்டு அபிவிருத்தித் திட்டங்கள குறித்து கலந்துரையாடுவர்.

18 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரி, கொடிகாமம் சந்தை, சாவகச்சேரி சந்தை போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்வர். அன்று மாலை 5 மணியளவில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் இவர்கள் நடத்துவர்.

19 ஆம் திகதி திருநெல்வேலிவிவசாயப் பாடசாலை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டை போன்றவற்றுக்கு இவர்கள் விஜயம் செய்துவிட்டு அன்று மாலையே கொழும்பு திரும்பவுள்ளனர்.

இவர்கள் தமது விஜயத்தின் முதல் நாளில் பலாலியில் யாழ். மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தனாவுடனும் பேச்சு நடத்துவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5)

# வடக்கு-கிழக்கு அபிவிருத்தி தொடர்பான மாநாடு

திருகோணமலை. பெப். 13

வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் மாநாடு ஒன்று எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

உள்ளூராட்சி, மாகாண சபைகள அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் வடக்கு-கிழக்கு ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தன மற்றும் வடக்கு-கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்வர்.

வடக்கு-கிழக்கு மாகாண அபிவிருத்திப் பணிகளைமேற்பார்வைசெய்யபுதிய அமைச்சு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக இந்த மாநாட்டில் ஆராயப் படவிருக்கின்றது. (ஐ-3)

# ஜெனரேட்டரில் பழுது; ஊரெழுவில் மின் துண்டிப்பு

ஊரெழு, புன்னாலைக் கட்டுவன் சந்திப் பகுதிக்கு கடந்த சில நாள்களாக மின் கிடைக்கவில்லை.

ஊரெழுவில் உள்ள ஜெனரேட்டர் பழுதடைந்தமையே இதற்குக் காரணம் ஆகும்.

ஜெனரேட்டருக்குரிய உதிரிப்பாகங்கள் கொழும்பில் இருந்து வரவேண்டி இருப்பதால் இப்பகுதிக்கு மீண்டும் மின் வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்று தெரியவருகிறது.

பொதுமக்கள் கூடிய வலுவுள்ள இயந்திரங்களை இயக்க இந்த மின்னைப் பயன்படுத்தியதாலேயே ஜெனரேட்டர் பழுதடைந்ததாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

## வாசகர் திருமுகம்

# மகாசிவராத்திரி விரதத்தை விழாவாகக்கொண்டாடாதீர்!

மகா சிவராத்திரி விரதம் மிகவும் மகிமை நிறைந்த விரதம். பக்தி சிரத்தையுடன் அனுஷ்டிக்கபபடவேண்டியது இவ்விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் திரயோத தினத்தில் ஒருபொழுதுண்டு சதுர்த்தசியில் உபவாசம் இருந்து துயில கொள்வதை நீக்கி நான்கு சாமங்களிலும் சிவபிரானை வழிபட்டு அடுத்தநாள் அடியார்களுக்கும் பிராமணர்களுக்கும் அன்ன தானம் செய்து பாரணம் பண்ணுதல் வேண்டும்.

மகா சிவராத்திரி விரதத்தை தெய்வ சிந்தனையோடு வேத பாராயணங்கள் தேவார திருவாசக புராணங்களை பிரசங்கங்கள் ஓதியும் நிகழ்த்தியும், சேட்டும் தெய்வீகத்தில் உறைவதற்கு உகந்த இடங்கள் ஆலயங்களே யாகும். எனினும் தற்கால சூழ் நிலைக்கமைய இரவில் ஆலயம் செல்ல அஞ்சுபவர்கள் மேற்சொன்ன நடைமுறைகளுக்கு ஏற்ப வீடுகள் மற்றும்பிரார்த்தனை மண்டபங்களிலும் அடியார்கள் ஒன்று கூடியும் தனித்தும் அனுஷ்டிக்கலாம்.

நம்மவர்கள் பலர் முக்கிய காலங்களில் செயற்பட்டது போலன்றி எப்படியென்றாலும் சிவராத்திரியன்று நித்திரை விழித்தால் போதும் தானே என்ற உணர்வோடு நித்திரை விழிக்கக் கூடாது. அன்றைய கண் மூடித்தனமான நிகழ்வுகளின் பலாபலனை அனுபவரீதியாக இன்று நாம் அனுபவிக்கின்றோம். எனவே சினிமாக்கள் பார்ப்பது, தெருவீதிகளில் மேடைகள் அமைத்து அதை ஒரு விழாவாக நடத்துதல் என்பன நிறுத்தப்பட வேண்டும். இப்படியான முறையில் ஒரு மகத்துவமான விரதத்தின் மகத்துவத்தைக் கெடுக்கக் கூடாது. சமய தத்துவத்தை கொச்சைப் படுத்தக் கூடாது.

திருநந்திதேவர், நாவலர் பெருமான் போன்ற மகான்கள் சொன்ன அருள் வாக்கிற்கமைய மகா சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும்.

தெய்வீக சிந்தனையோடு தெய்வீக வழிபாட்டோடு அனுஷ்டிக்கப்பட வேண்டிய மகத்துவமான விரதத்தை, மகான்கள், ஞானிகள், யோகிகள், அறிஞர்கள் சொன்ன வார்த்தைகளிற்குப் புறம்பான முறையில் அனுஷ்டிப்பது குளிக்கப் போய் சேற்றை அள்ளிப் பூசிய நிலைக் கொப்பானதாகும்.

**நயினை. நா. கோபாலகிருஷ்ணன்.**
(தலைவர். சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாஜம்)

# சாயி சமித்தியில் சிவராத்திரி நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை சிவராத்திரி நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன.

காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணிவரை இலட்ச அர்ச்சனை, சிவ பூசை, சிவபுராணம், பஜனை என்பனவும் விசேட நிகழ்ச்சியாக பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் 'ஹிருதய வாசி சத்திய சாயி' என்ற தலைப்பில் இசை மழை நிகழ்ச்சியை வழங்குவார். (ஐ)

# வாசிகசாலை கட்டடம்

திருநெல்வேலி, பெப். 13

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம் தற்போதுள்ள சங்க கட்டடத்திற்குப் பக்கத்தில் புதிய வாசிகசாலைக் கட்டடம் ஒன்றை அமைத்து வருகின்றது இந்த வாசிகசாலைக் கட்டடத்தை அமைப்பதற்கான நிதியை நல்லூர் பிரதேசசபை வழங்கியுள்ளதாக சங்கத் தலைவர் ச. சிவராசா தெரிவித்தார். (ஐ-135)

# இலவச வைத்திய முகாம்

யாழ்ப்பாணம், பெப் 13

பி. ஜே பெர்னாண்டோ நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் லயன்ஸ் கழகமும் யாழ் வட்ட லியோக் கழகமும் இணைந்து இலவச வைத்திய முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணியளவில் ஆத்திசூடி வீதியில் அமைந்துள்ள கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் இம்முகாம் நடைபெறவுள்ளது

வைத்தியநிபுணர்கள், யாழ் மருத்துவபீட மாணவர்கள் கண், பல் மற்றும் நீரிழிவு. இரத்த அழுத்த நோய்களுக்கான சிகிச்சையை வழங்குவர். (ஐ-க)

# கரப்பந்தாட்ட மத்தியஸ்த சங்க கலந்துரையாடல்

கரபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு புதிய செம்மணி வீதியில் உள்ள சங்கத் தலைவர் எஸ். கே. மனோகரனின் இல்லத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கண் பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், பெப் 13

மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகமும் வலி.மேற்கு பிரதேச சபையும் இணைந்து நடத்தும் கண் பரிசோதனை முகாமும் வைத்திய பரிசோதனையும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன

பரிசோதனைகளை எஸ். எம். பெர்ணாண்டோ மற்றும் டாக்டர் ரி. அருமைத்துரை, யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பகுதி மாணவர்கள் ஆகியோர் மேற்கொள்வர்.

பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புவோர் இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு வட்டு. இந்துக் கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மானிப்பாய் கோவில்பற்று லயன்ஸ் கழகத் தலைவர் கேட்டுள்ளார். (ஐ-க)

# சத்திர சிகிச்சைக்கு நிதிஉதவி

யாழ்ப்பாணம், பெப் 13

இருதய நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞன் அலெக்சாண்டர் சாம்ராஜனின் சத்திர சிகிச்சைக்காக யாழ் றோட்டறிக் கழகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட நிதி சேகரிக்கும் திட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலர் அலுவலக ஊழியர்களும் கிராமசேவை உத்தியோகத்தர்களும் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ஐ)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 06 | 13 |
| 09 | 02 |
| 1916 | 1984 |

அமரர்

**S. செபஸ்தியாம்பிள்ளை**

உங்கள் நினைவுகளில் வாழும்

அன்பு மனைவி
ஜெயராணி செபஸ்தியாம்பிள்ளை

86, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(63003)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பண்டிதர், சைவப்புலவர்

**அமரர் க. சபா. ஆனந்தர்**

B A (London), B O. L (Madras)
(இளைப்பாறிய அதிபர், இணுவில்)

மலர்வு 06 - 10 - 1910
உதிர்வு 16 - 02 - 1996

திதி- துவாதசி: 13 - 02 - 1999
சனிக்கிழமை

ஏற்றமிகு வாழ்வு தந்து
ஈடிணையிலா வாழ்த்துக் கூறி
போற்றுதற்குரிய தந்தையாகி
எம்மை யெல்லாம் விட்டகன்ற அப்பா!

இனியும் எம்மை
இறையருளோடு ஆசி கூறி
வழி நடத்தும் எண்ணம்
பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

**மகள்: திருமதி தே. அருந்ததி ஆனந்தகௌரி, மகன்மார், மருமக்கள், பேரர்கள், உறவினர், நண்பர்கள்.**

சாலினி தொலைத் தொடர்பு சேவைகள்,
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

''ஸ்ரீசாலினி'',
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.
(62971)

தொலைபேசி — 07 021 2367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளின் நிலை குறித்து அரசிடம் எடுத்துரைப்போம்

## மடுவில் சர்வமதக்குழுவினர் தெரிவிப்பு

மன்னார், பெப். 13

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களின் அவலங்களையும், துன்பங்களையும் அரசிடம் எடுத்துக் கூறி நிவாரணம் கிடைக்க முயற்சிப்பதாக மடுவில் சர்வமதக்குழுவினர் உறுதி அளித்தனர்.

மல்லாவி செல்லும் வழியில் இவர்கள் கடந்த செவ்வாயன்று மடு வந்திருந்தனர்.

மடுவில் தற்காலிகமாக இயங்கிவரும் 13 பாடசாலைகளுக்கு இந்தக் குழுவினர் விஜயம் செய்தனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக இயங்கும் இந்தப் பாடசாலைகளுக்கு குழுவினர் சென்ற சமயம், பாடசாலை மாணவர்கள், பெற்றோர் வீதிகளில் இருமருங்கிலும் நின்று வரவேற்றனர்.

பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளைக் கேட்டறிந்த குழுவினர் அரசிடம் பேசி மாணவர் கல்விவிருத்திக்கு உதவுவதாக உறுதி கூறினர்.

இதையடுத்து வன்னி பிரஜைகள் குழு, வன்னி அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் குழுவினர் பேச்சுநடத்தினர்.

மக்களின் உணவு, சுகாதார, இருப்பிடப் பிரச்சினை, கல்விப்பாதிப்பு ஆகியன குறித்து அவர்களிடம் எடுத்துக் கூறப்பட்டது.

தச்சனார்மருதமடுவில் உள்ள திறந்த நிவாரண நிலையத்துக்கும் குழுவினர் சென்றனர்.

பொருளாதரத் தடை காரணமாக தாம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், உணவு, சுகாதார, போசாக்குப் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துக் கூறிய அகதிகள் பொருளாதார நிலை குறித்து விளக்கினர்.

''மக்களின் துன்ப துயரங்களை நாம் உணர்கிறோம். உங்கள் அவலங்களை அரசிடம் தெரிவிக்கிறோம்'' என்று அகதிகளிடம் அக்குழுவினர் உறுதி கூறினர்.

யுத்தம் காரணமாக அவயங்களை இழந்த 20 பேரை மடுத்தேவாலயத்தில் குழுவினர் பார்வையிட்ட பின்னர் அங்கு சர்வமதப் பிரார்த்தனை ஒன்றையும் நடத்தினர்.

இக் குழுவினர் மடுவிலிருந்து மல்லாவி சென்று விடுதலைப்புலிகள் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியது தெரிந்ததே.

(இ-3)

## கஜுத்துறை சிறைக்கு அதிகாரிகள் குழு விஜயம்

கொழும்பு, பெப். 13

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விசாரணைகளைத் துரிதப் படுத்துவது தொடர்பாக ஆராய அதிகாரிகள் குழு ஒன்று நேற்று முன்தினம் மாலை அங்கு சென்றது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அங்கத்தவரான ரி. சுந்தரலிங்கம் அந்த ஆணைக் குழுவின் அதிகாரியான செல்வி கௌரி, சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த கமலத் ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றனர்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விசாரணைகளை எந்த வகையில் விரிவு படுத்துவது என்பது தொடர்பாகச் சிறைச்சாலை அதிகாரிகளுடன் குழுவினர் ஆராய்வர்.

(இ-3)

## இன்று

வடமராட்சி, பெப். 13

கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராகக் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் கலந்து கொள்வார். (ஐ-173)

## கல்வி வலயத்துக்கு நியமனங்கள்

டமராட்சி, பெப். 13

வடமராட்சி கல்வி வலயத்துக்கு ஆங்கில உதவிக்கல்விப் பணிப்பாளராகப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி உப அதிபர் எஸ். சுந்தரமூர்த்தியும்—

அழகியற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக யாழ். கல்வி வலயம் இரண்டில் பணியாற்றிய எஸ். சிவசுப்பிரமணியமும் (ரணி) —

உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராக ஆசிரியர் கல்வி ஆலோசகராகக்கடமையாற்றிய எஸ். பாலசுப்பிரமணியமும் —

திட்டமிடல் உதவிக்கல்விப் பணிப்பாளராக எஸ். சேது ராஜாவும் —

கல்வித் திணைக்கள[illegible]ள்ளனர்

(ஐ-173)

---

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

### செல்லையா சின்னத்துரை

(சின்னத்தம்பி)

மலர்வு 1920 - 09 - 15 உதிர்வு 1996 - 02 - 17

தீதி 1999 - 02 - 13

மூன்று ஆண்டுகளாக மௌனித்த எங்கள் இதயங்கள் உங்களின் நினைவு நாளில் கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்கி நீங்கள் காட்டிய பாதையில் முன்னேறும் ஒவ்வொரு பாதச்சுவடும் உங்கள் இனிய நினைவோடு......

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், உறவினர்.

'குமுதினி இல்லம்',
நீர்வேலி வடக்கு.

(63062)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

### சுந்தரம் செல்லத்துரை

அன்னை மடியில்: 09 — 11 — 1924
முருகன் திருவடியில்: 14 — 01 — 1999

சோர்வின்றி ஓய்வின்றி உழைத்தாரே— அப்பாவே!
எங்களையே கலங்க வைத்து மின்னாமல் முழங்காமல்
அதிகாலை வேளையிலே முருகன் நாமம் கேட்டபோது
பொங்கலுக்கு ஆயத்தங்கள் நடக்கும் வேளையிலே
திரியோதசி திதியிலே புன் சிரிப்புடன் வேம்படி முருகன்
திருவடி சேர்ந்தீர்களே— அப்பாவே!

அப்பா! உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

" பார்வதி பவனம் "
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(63058)

---

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து பொன்னுத்துரை

(ஓய்வு பெற்ற P. W. D. ஓவசியரும், துறட்டிப்பளை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தாவும்)

வட்டு. கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த மாரிமுத்து பொன்னுத்துரை 11 - 2 - 99 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து வள்ளியம்மை ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனும், சிவயோகத்தின் அன்புக் கணவரும், நவரட்ணராஜா, தவலட்சுமி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாதேவி, செல்வச்சந்திரன், கணேசலிங்கம், சிவனேசம், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் வசந்தன், உதயன், விமலன், ஜெனந்தன், கிருசாந்தி ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற குமாரவேலு, சிதம்பரநாதன் ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.2.99) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறுகேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி.

(63041)

---

## குமாரசாமி விநாயகமூர்த்தி

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், மின்சார சபை, சுன்னாகம்.)

சங்கானையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியைப் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி விநாயகமூர்த்தி 11 - 02 - 99 இல் லண்டனில் காலமானார்.

இவர் சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் கோயிலடியைச் சேர்ந்த காலஞ் சென்ற சாத்திரியார் குமாரசாமி - முத்தம்மா தம்பதிகளின் அன்பு சிரேஷ்ட புத்திரனும், சர்வலோகேஸ்வரியின் [லண்டன்] அன்புக் கணவரும், செந்தில் குமரன் [பொறியியலாளர், லண்டன்], தசரதகுமாரன் [பொறியியலாளர், லண்டன்], ஜெயக்குமாரன் [பொறியியலாளர், லண்டன்], சிவக்குமார் [பொறியியலாளர், லண்டன், ஒக்ஸ்போட் பல்கலைக் கழகம் ], ஸ்ரீ ரஞ்சினி [ஆஸ்திரேலிய ] ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசுப்பிரமணியம் [ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளர் மின்சாரசபை சுன்னாகம்], சோமசுந்தரம். [பிரபல சோதிடர், கொழும்பு], சிவசுந்தரம் [ஓய்வு பெற்ற காப்பாளர், இ. போ. ச.], காலஞ்சென்ற பஞ்சரத்தினம் [முதியோர் கல்வித்திட்ட அதிகாரி, வவுனியா], தியாகேஸ்வரி [சங்கானை], சண்முகரத்தினம் [வருமான மேற்பார்வையாளர், வலி. மேற்கு பிரதேசசபை, உப அலுவலகம், சங்கானை] ஆகியோரின் அன்புச் சகோதரனும், த. நவரத்தினம் [ஓய்வுபெற்றபொலீஸ்சர்ஜன்ட்], த. தேவராசா [அரச வரக் கூட்டுத்தாபனம், நல்லூர்] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
கு. சிவசுந்தரம்
(சகோதரன்)

அம்மன் கோயிலடி, பொன்னாலை.
சங்கானை.

(63043)

---

## கணபதி சீவரத்தினம்

(புடைவைக்கடை உரிமையாளர்,
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்)

சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட கணபதி சீவரத்தினம் 11-2-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி- தங்கச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகனும் பறுவதத்தின் அன்புக்கணவருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-2-99) காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

சுன்னாகம்.

(63060)

---

## திருமதி நாகலிங்கம் சிவகாமசுந்தரியம்பாள்

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் சிவகாமசுந்தரியம்பாள் (சாஞ்சு) 12- 02- 99 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் ஞான அம்பலவாணர் தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகுமகளும் அமுதலிங்கம், சொர்ணலிங்கம், சிவனேஸ்வரி, இராசேஸ்வரி, சிவகுமார், உதயகுமார் (சலூதி), கெங்கேஸ்வரி (கெங்கா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாரதாதேவி, சிவஞானம், ஐயாத்துரை, தம்பிராசா, செல்வரதி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக இன்று (13- 02- 99) சனிக்கிழமை நண்பகல் 12. 00 மணியளவில் சோனகம் புலம் மயானத்திற்குப் பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
S. நாகலிங்கம்
[கணவர்]

புகையிரத நிலையவீதி,
கொடிகாமம்.

(63064)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 ஆம் ஆண்டு நினைவு

மண்ணில்
16 — 02 — 1911



விண்ணில்
13 — 02 — 1974

திருமதி


## செபஸ்ரியாம்பிள்ளை றோசம்மா

பாசமிகு அன்னையாக பேத்தியாக இருந்து எம்மைத் தாலாட்டி அமுதூட்டி வளர்த்த அன்பு உள்ளமே! அன்பு வழி நடவுங்கள் என்று நீர் மொழிந்த வழி நடக்கின்றோம் உம் ஆன்ம சாந்திக்காக அனுதினமும் இறைவனை வேண்டிநிற்கும்

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

இல. 9, விதானையார் வீதி,
ஈச்சமோட்டை.
(63068)

# கண்ணீர் அஞ்சலி



## இரத்தினம் தனபாலசிங்கம்

(உரிமையாளர், N. R. ரான்ஸ்போட்)

எமது குடும்ப நண்பரான இரத்தினம் தனபாலசிங்கம் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**சதாஸ் குடும்பத்தினர்.**

இல. 105, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(63067)

# மரண அறிவித்தல்

## திருமதி தங்கரத்தினம் பொன்னம்பலம்

கொக்குவில் மேற்கு அரசடியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கரத்தினம் பொன்னம்பலம் 12-02-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற இராமுப்பிள்ளை பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் சிவப்பிரகாசத்தின் அன்பு சகோதரியும், சுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற படவரைஞர்), காலஞ் சென்ற அன்னலட்சுமி, இராமச்சந்திரன் (கலைவாணி ஆடையகம், யாழ்ப்பாணம்), பாலச்சந்திரன், தனபாலச்சந்திரன் (பிரான்ஸ்), விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்), தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலறஞ்சினி, பாக்கியலட்சுமி, அருந்ததி, சத்தியாதேவி, நித்தியறஜனி, பாலசுப்பிரமணியம் (ஆனந்தகி புடைவையகம் - சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மாமயாரும் வினோதினி, சுகன்யா, சாந்தறூபி, சுபகாந்தன், கலைவாணி, மதனகாந்தன், விஷ்ணுகாந்தன், கலையமுதன், ஸ்ரீபிரசாத், றவிசங்கர், சஞ்சீவன், சிந்துஜா, கெவின், கீர்த்தனா, சுவிதா, வினோஜன், ரூபிகா, ரூபினி, ஐங்கரன், துஷ்யந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-2-99) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**பொ. இராமச்சந்திரன்** (மகன்)
(கலைவாணி ஆடையகம், யாழ்ப்பாணம்)

அரசடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(63059)

# சடலம் இன்று வரும்

யாழ்ப்பாணம், பெப். 13

கடந்த திங்களன்று வவுனியா குருமண்காட்டுப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இடையில் சிக்கி உயிரிழந்த கரவெட்டியைச் சேர்ந்த கி. ராஜ்குமாரின் சடலம் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது.

இவரது சடலம் நேற்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவிருந்ததாக முன்னர்தெரிவிக்கப்பட்டிருந்தது.

(ஐ-7)

# வீதி சேதம்

வடமராட்சி பெப், 13

பருத்தித்துறை - மருதங்கேணி பிரதான வீதி நீண்ட காலமாகப் பழுதடைந்துள்ளது.

(ஐ-173)

## பேச்சு மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்)

★ இனப்பிரச்சினைக்குச் சமாதான வழிகளில் தீர்வு ஒன்றைக் காண்பதை பெரும்பான்மையான பௌத்த சமூகம் எதிர்க்கிறது என்றவாறாக தமிழர்கள் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயத்தை நீக்குவதும் இந்த நல்லெண்ண விஜயத்தின் நோக்கம் ஆகும்.

★ இந்த விஜயத்தின் போது குழுவினர் சில அகதி முகாம்களுக்கும் விஜயம் செய்து அங்குள்ள மக்கள் படும் துன்பங்களையும், அவர்களின் கருத்துக்களையும் ஆர்வமுடனும், அனுதாபத்துடனும் கேட்டறிந்தனர்.

★ தமிழர்களின் பிரச்சினை பேச்சு மூலம் தீர்க்கப்படுவதை பெரும்பான்மை பௌத்தர்கள் எதிர்க்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தை இப்பகுதி மக்கள் மத்தியில் இருந்து போக்க குழுவினர் முயன்றுள்ளனர்.

★ தென்னிலங்கையில் உள்ள சில சக்திகள் இந்த யுத்தத்தை முன்னெடுப்பதற்கு ஆதரவாகச் செயற்படுவது குறித்து இக்குழுவினரிடம் விடுதலைப் புலிகள் தங்கள் கவலையை வெளியிட்டனர்.

★ இலங்கையின் அனைத்து மக்களுக்கும் — குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு — இந்த யுத்தத்தின் மூலம் ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்திற்கொண்டு பிரச்சினைக்குச் சமாதான வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் பெரும்பான்மைப் பௌத்தர்கள் கொண்டுள்ள விருப்பத்தை இந்த விஜயத்தின் போது தெளிவுபடுத்தினர்.

★ ஐக்கிய இலங்கைக்குள் அனைத்துப் பிரசைகளும் அவர்கள் சிங்களவர்களாகவோ, தமிழர்களாகவோ, முஸ்லிம்களாகவோ அல்லது வேறு மதத்தவர்களாக இருந்தாலோ சம உரிமையுடையவர்களாகவும் சமத்துவமாக நடத்தப்படவும் வேண்டும். தலதா மாளிகை மற்றும் ஸ்ரீ மகாபோதி ஆகியவற்றில் இடம்பெற்ற கவலை தருகின்ற சம்பவங்களுக்கு மத்தியிலும் இந்தக் கருத்து பௌத்த குருமாரால் முன்வைக்கப்பட்டது.

★ விடுதலைப் புலிகள் வடக்கு - கிழக்கில் வணக்கத்துக்குரிய பல தலங்கள் அழிக்கப்பட்டு வந்ததைச் சுட்டிக் காட்டினர். என்றாலும் பௌத்த தூதுக்குழு சுட்டிக் காட்டிய மேற்படி விடயங்கள் குறித்து தங்கள் கவலையை வெளியிட்டனர்.

★ நாட்டுக்குப் பெரும் பொருளாதார இழப்பையும் கஷ்டத்தையும் தருகின்ற போருக்கு முடிவுகட்டி நிரந்தர சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு தொடர் பேச்சுவார்த்தைகள் மூலமே முடியும் என்ற எதிர்பார்ப்பை இருதரப்பும் வெளிப்படுத்தியது.

(ஐ-உ-3-21)

# வடக்கு-கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்களின் கொடுப்பனவை வழங்குக

## 'புளொட்' கோரிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 13

வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார் ஊழியர்களுக்குரிய 1997 ஆம் ஆண்டுக்கான இடர்காலக்கொடுப்பனவையும், இம் மாகாணத்தைச் சேர்ந்த அதிபர்களுக்குரிய 1995 ஆம் ஆண்டுக்கான சம்பளநிலுவையையும் உடன் வழங்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சு. டிவகலாலாவிடம் கோரி உள்ளார்.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு அவர் பக்ஸ் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

'அதிபர், ஆசிரியர்களால் முன் வைக்கப்பட்டுள்ள மேற்படி கொடுப்பனவுக் கோரிக்கைகளுக்கு எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் தீர்வு காணப்படாவிட்டால் பாடசாலைகளைப் பகிஷ்கரித்து சாத்வீக முறையில் போராட்டம் நடத்தப் போவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், ஸ்ரீலங்காமுஸ்லிம்ஆசிரியர் சங்கம் கல்முனைக் கல்வி மாவட்ட அதிபர்கள் சங்கம் ஆகியன கூட்டாக அறிவித்துள்ளதாக அறிகிறோம்.

மேற்படி மூன்று சங்கங்களாலும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள சாத்வீகப் போராட்டத்துக்கு 'புளொட்' அமைப்பு பூரண ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது. வடக்கு—கிழக்கின் கல்வி மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு துரித நடவடிக்கை எடுப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அந்தப் பக்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# விளையாட்டு

வலிகாமம் கல்வி வலயத்தின் பிரிவு ஒன்றுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று வட்டு இந்து மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

வட்டு. இந்துக் கல்லூரி மற்றும் சங்கானை சிவப்பிரகாச ம. வி., விக்ரோறியாக் கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் ம. வி., சித்தன்கேணி ஸ்ரீ கணேசா ம. வி. ஆகியவற்றில் இந்தச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை நடைபெறும்.

பிரிவு ஒன்றின் உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் விளையாட்டுச் செயலாளர் நா. தனபாலசிங்கம் போட்டிகளை ஒழுங்கமைத்துள்ளார்.


யாழ்ப்பாணம் - திருநெல்வேலி
பழங்கிணற்றடி

**வீரகத்தி விநாயகர் ஆலய**

**புதிய சப்பற வெள்ளோட்டம்**

மேற்படி ஆலயத்துக்கென திருநெல்வேலி, ஆடியபாத வீதியில் உள்ள சின்னையா இரும்புத் தொழிற்சாலை உரிமையாளர் ச. சின்னையா மற்றும் அவரது தொழிற்சாலை ஊழியர்கள் ஒன்று சேர்ந்து அமைத்த முற்றிலும் இரும்பினால் ஆன சகடையுடன் கூடிய

புதிய சப்பற வெள்ளோட்டம்
**இன்று முற்பகல் 11.30 மணிக்கு**
இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சப்பறத்தை உருவாக்கிய சு சின்னையாவும் அவரது குழுவினரும் பாராட்டிக் கௌரவிக்கப்படுவர்.

★ இலங்கையிலேயே முற்றிலும் இரும்பில் அமைக்கப்பட்ட சகடையுடன் கூடிய முதலாவது சப்பறம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**சப்பறத் திருவிழா உபயகாரர்கள்**
திருநெல்வேலி.
((சி/6486)



**வெள்ளோட்ட விழா**
சிறப்புற
**வாழ்த்துகின்றோம்**

திருநெல்வேலி பழங்கிணற்றடி வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் இன்று முற்பகல் இடம்பெறும் இரும்பினால் அமைக்கப்பட்ட சகடையுடன் கூடிய புதிய சப்பற வெள்ளோட்டம் சிறப்புற நடைபெற மனமார வாழ்த்துகின்றோம்.

**தேவி தொலைத்தொடர்பு நிலையம்.**

ஆடியபாத வீதி,
திருநெல்வேலி.
(சி/6487)



**தவறிவிட்டன**

கந்தர்மடம் சந்தியிலிருந்து அரசடி வீதி, கோயில் வீதி, நாவலர் வீதி, றக்கா றோட் ஆகிய வீதிகளால் 4 ஆம் குறுக்குத்தெருவுக்கு வரும்போது லக்ஸ்பிறே பையுடன் இரு கோர்வை திறப்புகள் தவறி விழுந்து விட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் 106, 4ஆம் குறுக்குத்தெருவில் கையளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். இதற்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

-- க. தருமராசா
(சி/6482)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ'புர நீதிமன்றில் ஐவருக்குப் பிணை

கொழும்பு. பெப்.13

குடாநாட்டில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறையில் மூன்று மாதங்களுக்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று பெண்கள் உட்பட ஐவர் நேற்று அனுராதபுரம் நீதிமன்றில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வரணியைச் சேர்ந்த -- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த -- தில்லைநாதன் தவச்செல்வி, தில்லைநாதன் தவறஞ்சன், தில்லைநாதன் தவறாணி ஆகியோரும் --

தம்பிராசா கலைமகள், வீரசிங்கம் சிவராசா ஆகியோரும் --

நேற்று அனுராதபுரம்நீதிவான முன் ஆஜர் செய்யப்பட்டனர். ஐவரையும் சரீரப்பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

இவர்கள் சார்பில் மனித கௌரவத்துக்கான அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி ரெணி வார்டன் ரஜனி ஆஜரானார் (ஐ-3)

## ரெலோ அலுவலகம் தீக்கிரை

வவுனியா,பெப்.13

வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள ரெலோ அமைப்பு அலுவலகம் நேற்று அதிகாலை 3 மணியளவில் இனந்தெரியாதவர்களால் தாக்கி எரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலால் அந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த ஆவணங்களும், தளபாடங்களும் நாசமாகியதாகக் கூறப்பட்டது.

தாக்குதல் நடந்த சமயம் அங்கு எவரும் தங்கி இருக்கவில்லை.

இதேநேரம், நேற்று முன்தினம் வேப்பங்குளத்தில் 'புளொட்' அலுவலகம் தாக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஐ-3-க)

## தடை

வவுனியா,பெப்.13

வவுனியாவில் இயங்கும் மூன்று தமிழ் குழுக்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் எவரும் ஆயுதங்களுடன் வெளியில் நடமாடக் கூடாது என்று படையினர் கண்டிப்பான உத்தரவை நேற்று விடுத்துள்ளனர்.

புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை தமது முகாமுக்கு அழைத்து படைஅதிகாரிகள் இந்த உத்தரவை விடுத்ததாகத் தெரிய வருகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இதேவகையான உத்தரவைப் படையினர் விடுத்திருந்த போதும் சம்பந்தப்பட்டவர்கள் அந்த உத்தரவை மதிக்காது செயல்பட்டதால் மீண்டும் நேற்று கண்டிப்பான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-3-164)

## பயணிகளு....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

7மணிக்கு யாழ் ரயில் நிலையத்திற்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

இன்று காலையும் ஒரு தொகுதி டிக்கட்டுகள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் எனவே இக்கப்பலில் பயணம் செய்ய விரும்புவோர் நேரகாலத்துடன் வந்து அவற்றைப் பெற்றுக்கொண்டு பிரயாணத்தை மேற்கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமலையிலிருந்து வரும் பயணிகளும், யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பயணிகளும் காங்கேசன்துறையில் ஒரே நேரத்தில் தங்கவேண்டிய நிலை ஏற்படவுள்ளதால் யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பயணிகள் தமக்குத் தேவையான உணவு வகை களை போதியளவு எடுத்துச் செல் லுமாறு சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி ஆலோசனை வழங் கியுள்ளார். (ஐ-3-15-139)

## யாழ்ப்பாண எழுத்தாளருக்கு "சார்க்" விருது



யாழ்ப்பாணம், பெப்.13

"சார்க்" பெண்கள் (இலங்கைப் பிரிவு) சங்கத்தின் பெண் எழுத்தாளர்களுக்கான விருது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசத்துக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

"உணர்வின் நிழல்கள்" என்ற இவரது சிறுகதைத் தொகுதியில் இடம்பெற்றுள்ள "சோகங்களும் சுமைகளாகி.." என்ற சிறுகதையே இவ்விருதுக்கான தெரிவில் இடம் பெற்றுள்ளது.

"சஞ்சீவி" வார மலரிலும் சிறுகதைகளை எழுதியுள்ள திருமதி சிவப்பிரகாசம் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளை முகாமையாளராகப் பணிபுரிகிறார்.

எழுத்துத்துறையில் ஆற்றல் மிக்க பெண்களை இனங்கண்டு ஊக்குவிக்கவும் மும்மொழிகளையும் சேர்ந்த பெண் எழுத்தாளர்களிடையே நல்லெண்ணத்தையும், கலாசாரத் தொடர்புகளையும் வளர்க்கும் நோக்குடனும் "சார்க்" பெண்கள் சங்கம் இவ்விருதை வழங்க முடிவு செய்துள்ளது.

இலங்கையில் இவ்விருது வழங்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய ஏனைய இரு மொழிகளிலும் எழுதிய பெண் எழுத்தாளர்களுக்கும் தனித்தனியே இவ்விருது வழங்கப்படுகிறது.

பெண் எழுத்தாளர்களால் அச்சில் புத்தகமாக வெளியிடப்பட்ட படைப்புக்கள் இவ்விருதுத் தெரிவுக்காக பரிசீலனை செய்யப்பட்டன. (ஐ)

## மட்டு. நகரில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்குக் கொண்டுவரப்பட்டது. காணாமற்போன வாகனத்தைத் தேடும் முயற்சியில் படையினர் ஈடுபட்ட போது அது நகருக்கு வெளியே கடத்தப்பட்டுவிட்டது என்ற தகவல் அவர்களுக்குத் தெரிய வந்ததாகத் கூறப்படுகிறது.

நீண்டகால இடைவெளியின் பின் மட்டு.நகரில் இருந்து வாகனம் ஒன்று துணிகரமாகக கடத்திச் செல்லப்பட்டிருப்பது படைவட்டாரங்களுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. (ஐ-3-21)


WEEK-END COURSES
COMMENCE ON 27TH FEBRUARY 1999

**Microsoft Applications**

**Diploma in Ms windows 98 applications**

Modules

Ms Windows 98
Ms Word 97
Ms Excel 97
Ms Access 97
Ms Power point 97

Duration: 6 Months

**Certificate course in**

Ms Windows 98
Ms DOS
Ms Power point 97
Ms Excel 97
Ms word 97
Pascal
Ms Access 97
Visual Basic 5.0

Duration: 2 Months

For further details contact the undersigned

DCS,
P.O Box 144
Jaffna

Director (Ad)
DCS
College of computer Technology,
124/2, Palaly Road,
Thirunelvely.

(63024)



GOLDEN EAGLE SECURITY SERVICE

Provides
Security Guards
* Immediate short Periods.
* Long Periods.
For
Residence - Bare Land -
Shops - Factories - Govt. & Private Institutions.
* Intergrity * Efficiency * Discipline
By
Hand Picked And Well Trained Personnel
Round the Clock Service.

**Golden Eagle Security Service**
347,Kasthuriar Road [Top Floor],
Jaffna.


## திருமண நன்றி நவிலல்

திரு.திருமதி முத்துக்குமார்

வெகுதானிய வருடம் தை மாதம் 24 ஆம் நாள் (07-02-1999) ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடந்தேறிய எமது திருமண வைபவத்தில் கலந்து கொண்டு ஆசீர்வதித்தும், வாழ்த்துரை வழங்கியும், அன்பளிப்புச் செய்தும் மகிழ்வுற வைத்த உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும். இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும், வெளி நாடுகளில் இருந்தும் வாழ்த்துமடல், தொலைபேசி, பக்ஸ் (Fax), தந்தி, கடிதம் மூலம் வாழ்த்துக்கள் நல்கிய உறவினர்கள், நண்பர்கள் அன்பர்கள் யாவருக்கும் எமது மனமார்ந்த நண்றியைக் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

திரு. முத்துக்குமார்
(குமார் ஏஜென்ட்)
திருமதி. இரட்னேஸ்வரி முத்துக்குமார்
(ஆசிரியை)

535 A, பரமேஸ்வரா சந்தி,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6478)

## OUR GRATEFUL THANKS!

**V.M.K. KULENTHIRAN**

We wish to express our deepest gratitude and thanks to all who shared our sorrow and rendered timely help and assistance at the demise of Late Mr. V.M.K. Kulenthiran on 09-02-1999. We wish to specially thank the Thenmaradchy Traders Union, the public of Thenmaradchy, the customers and the government officials who assisted immensely in facilitating transport of relatives from outstations, those who sent messages of condolence and those who made funeral notice.

*Ohm Shanthi, Shanthi, Shanthi,*

**V.M.K. Family**
Duch Road,
Chavakachcheri.

(63046)

## நன்றி நவிலல்

**V.M.K.** குலேந்திரன்

09-02-1999 அன்று உயிர் நீத்த அமரர் **V.M.** கணபதிப்பிள்ளை குலேந்திரன் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கும், அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் அச்சிட்டு வழங்கியவர்களுக்கும், கொழும்பிலிருந்து உறவினர் வருவதற்கான பிரயாண ஒழுங்குகளைச் செய்தவர்களுக்கும், அஞ்சலி உரையினை நிகழ்த்தியவர்களுக்கும், 11-02-99 அன்று வணிக ஸ்தாபனங்களைப் பூட்டி அஞ்சலி தெரிவித்த வர்த்தக உரிமையாளர்களுக்கும் இன்றும் தோளோடு தோள் நின்று பல்வேறு வழிகளிலும் உதவி புரிகின்ற அனைவருக்கும் **V.M.K.** குடும்பத்தினரின் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

டச்சு வீதி,
சாவகச்சேரி.

**V.M.K.** குடும்பத்தினர்

(63047)


எமது
வெளியீடு
விஜய்--சிம்ரான்
நடிக்கும்
துள்ளாத
மனமும்
துள்ளும்
(11 மணிக்குப் பின்
பிரதிகள் பெற்றுக்
கொள்ளலாம்)
வீடியோ
விமல்
யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-02-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்.

சஞ்சீவி
சஞ்சிகை

13 - 02 - 1999 சஞ்சீவி

உங்கள் ஆடை அழகின் எண்ணம்
கோபிகாவின்
ஆடைகளின் வண்ணம்
வாடிக்கையாளர் உள்ளம் கொள்ளை கொள்ளும் ஆடைவகைகள் அத்தனைக்கும்
கோபிகா ஆடையகம்
இல. 5/4, நவீன சந்தை,
(உட்புறம்)
யாழ்ப்பாணம்.
T. P. No- 2377 (C/6447)

# கருத்துக் கலசம்

கூஜா

## யார் காரணம்?

இன்றைய எமது வாழ்க்கை, துன்பம் நிறைந்ததாகவே காணப்படுகிறது. ஒவ்வொருவர் குடும்பத்திலும் ஏதோ ஒரு பிரச்சினை. எதனைச் செய்ய முயற்சித்தாலும் இடையில் ஏதோ ஒரு தடங்கல் அல்லது தடை. இவற்றால் மனக் கவலையும் அது பெருகி சலிப்பாகவும் மாறுகிறது.

இத்தகைய நிலைக்கு இன்றைய சமூகச் சூழலும் வாழ்க்கைச் சூழலுமே காரணம் என்று எண்ணுகிறோம். இப்போது எங்கும், எதிலும், எப்போதும் அவலம், அல்லல் என்றாகிவிட்டது.

வாழ்க்கைச் சூழல் எப்போதுமே ஒரே மாதிரி இருப்பதில்லை. காலம் சுழல்வது போலவே வாழ்க்கை நிலையும் மாறுகிறது. அத்தகைய மாற்றங்களின் போது புதிதாகக் கஷ்டங்கள் வருவது இயல்பு.

அந்த மாற்றங்களுக்கு ஏற்றவாறு நாம் எம்மை சரிசெய்து கொள்ளாவிடில், மாற்றாவிடில் அவலங்கள், கஷ்டங்கள், துன்பங்கள் தவிர்க்க முடியாதவை ஆகி விடுகின்றன.

இவ்வாறு கஷ்டங்கள், துன்பங்களை அனுபவிப்பதற்கும் அல்லற்படுவதற்கும் யார் காரணம்? இப்போது பொதுவாக, அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணம் என்று பலரும் கருதுகிறார்கள். சிலர் தமது கஷ்டங்களுக்கு மற்றவர்களே காரணம் என்று எண்ணுகிறார்கள். இன்னும் ஒரு சாரார் கடவுள் காரணம் என்று நினைப்பதுண்டு. அவரவர் பாவ புண்ணியம், முன்வினையே இன்றைய அவலங்களுக்குக் காரணம் என்று கருதுவோருமுளர்.

வெளித் தோற்றத்துக்கு வேறு யாரோ, வெளியிலிருந்து எம்மை அவலப்படச் செய்வதாக, அலைக்கழிப்பதாக, துன்பம் தருவதாகத் தெரிகிறது. ஆனால் ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தானே அலைக்கழித்துக் கொள்கிறான் என்பதே கசப்பான உண்மை. ஒவ்வொரு மனிதனும் தான் படும் துயரத்துக்குத் தானே பொறுப்பாளியாகின்றான்.

எங்கள் மனம் எவ்வாறு அமைகிறதோ அவ்வாறே வாழ்க்கையும் அமைகிறது. நாம் எதனைச் சதா நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அதனையே நாம் காண்பதாக உணர்கிறோம்.

நாம் எமது சுயத்தை விட்டு வேறாக வடிவம் எடுக்க முயலும் போதும் எங்களுக்குத் துன்பங்கள் வருகின்றன.

சுயத்தைப் பேணி மனத் தூய்மையைப் பேணுபவனுக்குத் துன்பங்கள், அவலங்கள் மிகவும் குறைவு.

# காதல் உலகை அரவணைக்கும் உன்னதமான உணர்ச்சி

ஐரோப்பியர்களின் வாழ்க்கை அகந்தையின் வடிவம். அங்கு காதல் என்பது காமப் பேயாட்டம். காதல் காமத்தில்தானே முடிகிறது. அதனால் காமத்திலேயே உறவை ஆரம்பித்துவிடுவோமே என்று ஐரோப்பியர்கள் நினைக்கிறார்கள்.

உணவு. எல்லா உணவும் மலமாகிறது என்பதால் மலத்தை யாரும் தின்ன முடியுமோ? ஆனால் மலம் மண்ணாகி, மண் உரமாகி, உரம் தாவரத்தின் வழியே உணவாகிறது.

காமம் ஓர் அடி உரம். காதலின் விளைவு. காதலை வெளிப்படுத்தும் வகை.

மரியாதை இல்லாமல் பரிமாறப்பட்ட எந்தக் காமமும் ருசிக்காது. எல்லா விஷயங்களிலும் ஒரு ருசியோடு — ஒரு ரசனையோடு — வாழ்க்கை நடத்த முயற்சிக்கிறவர்களுக்கு காதல் மிக முக்கியமான விஷயம். மிருக புத்தி கொண்ட போதுதான் காமம் ஆட்டம் போடுகிறது; கற்பழித்தல் நடக்கிறது. பரஸ்பரம் ஏமாற்றவும் முற்படுகிறார்கள்.

நீயும், நானும் சேர்ந்து வாழ்ந்தால் நன்றாகத்தானிருக்கும். விவரமே தெரியாமல் கழுத்தை நீட்டுவதற்கு பதிலாக, விரும்பிப் பழகித் திருமணம் செய்து கொள்வது மேல். ஆனால், இயலாது. இதற்கு பெரும் விலை கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்த தேசத்தின் பெண்களின் உடைகள் மாறினாலும், கல்வி அறிவு உயர்ந்தாலும், எங்கேயாவது வேலை செய்து இரண்டாயிரம் ரூபாய் சம்பாதித்தாலும் காதல் எனபது அனுமதிக்கப்பட்டதில்லை.

காதலிக்கின்ற பெண்ணுக்கு மரியாதை இல்லை. காதல் என்பது கள்ளத் தனமாகப் போய்விட்டது.

அன்பு செய்வது யாருக்கும் தெரியாமல் செய்யும் அசிங்கமாக மாறி விட்டது.

ஒரு பெண் நள்ளிரவில் நிறைய நகைகள் பூண்டு தன்னந்தனியாய் எந்தத் தேசத்தில் நடந்துவர முடியுமோ அந்தத் தேசம்தான் அற்புதம் என்கிறார்கள். அதைத்தான் ராம ராஜ்யம் என்கிறார்கள்.

இதில் ஒரு பெரிய தவறு இருக்கிறது. பெண்ணின் நகைகளுக்கும் உடம்புக்கும் மட்டுமே பாதுகாப்பு தருவது பற்றி யோசிக்கிறார்கள். அவளுக்கு மனம் என்று ஒன்றிருக்கும் என்பதை மறந்து விட்டார்கள்.

இந்த வாக்கியத்தை மாற்றி எழுத வேண்டும்.

எந்த தேசத்தில் ஒரு கன்னிப் பெண் அச்சமின்றி தன் புருஷனை அவளே தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியுமோ — அப்படி தேர்ந்தெடுத்துக் கொள்ள அறிவுபூர்வமாய் சிந்திக்க எந்தத் தேசம் ஒரு பெண்ணை தயார் செய்கிறதோ — அந்தத் தேசமே முன்னுக்கு வரும்; முழு மகிழ்ச்சியோடு இருக்கும்.

பெண்களை இழிவுபடுத்திய தேசத்தில் போர் நிகழ்ந்தவண்ணமிருக்கும்; கலவரம் அதிகமாகும்.

பெண் சுதந்திரம் மிக்கவள். தனக்கு அடங்காத ஆணை அவள் தூண்டி விட்டு, இன்னொரு ஆணோடு போர் செய்யச் சொல்லுகிறாள். போரில் ஜெயித்தவன் போரில் மடிவான். போர் என்பது சுவரில் எறிந்த பந்து; கிளை நுனியில் உட்கார்ந்து கொண்டு வெட்டும் முட்டாள்தனம்; குரங்கு அசைத்த ஆப்பு.

பெண்ணுக்குத் துரோகம் இழைத்த ஆண்கள் போரில் தண்டிக்கப்படுகிறார்கள்.

காதல் என்பது உலகம் முழுவதையும் அரவணைத்துக் கொள்ளும் மலர்ச்சி. அந்த மலர்ச்சிபெற பெண் ஒரு பயிற்சிக்கூடம்; பள்ளிக் கூடம்.

பெண் காதல் பள்ளிக்கூடமெனில் குடும்பம் சர்வகலாசாலை.

நல்ல பெண்ணை நல்லவிதமாய் காதலித்தவன் நல்ல குடும்பஸ்தனாக இருக்கிறான்; நிறைவான வாழ்க்கை வாழ்கிறான்.

''காதல் செய்வீர் உலகத்தீரே! காதல் செய்வீர்'' என்று யார் கூவினாலும் காதில் விழுவதே இல்லை.



காரணம் காமத்தைக் காதல் என்று பொய்சொல்லிப் பரிமாறி விட்டு பெண்ணை ஆணோ ஆணைப் பெண்ணோ ஏமாற்றிப் போய்விடுவது இடைவிடாது நடப்பதால்தான்.

**நாளை சர்வதேச காதலர் தினர். அதையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

**இந்தக் காதல் எண்ணங்களுக்குச் சொந்தக்காரர் பிரபல தமிழக எழுத்தாளர் பாலகுமாரன். இது அவர் வரைந்த தனிக் கட்டுரையல்ல. 'இனிது; இனிது; காதல் இனிது' என்ற தலைப்பில் அவர் வரைந்த தொடர் நவீனம் ஒன்றில் காதல் குறித்து அவர் ஆங்காங்கே தொட்டுச் சென்ற கருத்துக்களில் ஒரு பகுதி இங்கு தொகுக்கப்பட்டுள்ளது.**

நூறுபேர் உள்ள கிராமத்தில் இரண்டுபேர் ஏமாற்றினால் கூட அந்த கிராமத்திலுள்ள எல்லோரும் காதலை எதிர்க்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

எனவே வாழ்ந்து காட்டுபவர்கள் வேண்டும். வாழ்ந்து காட்டுதலுக்கு அடிப்படை நேர்மை, பொறுமை, தெளிவு தேவை.

'காதலா? கூடவே கூடாது' என்று கூறும் காலம் தமிழ் நாட்டிலிருந்து போய்விட்டது. காதலிக்கலாம், இதில் தவறில்லை' என்று பேசும் காலம் வந்துவிட்டது.

ஆனால் காதலிக்கத் தெரியாதவர்கள் அதிகம்பேர் இருக்கிற காரணத்தால், காதலிக்கிறவர்களைக் கண்டால் காதலிக்கத் தெரியாதவர்களுக்கு ஒரு பொறாமை ஏற்பட்டு விடுகிறது.

''அட... இவங்க ரெண்டு பேரும் லவ்வர்ஸா? இவங்க ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் தொட்டுக்குவாங்க இல்ல... ஒருத்தரையொருத்தர் விழுங்கற மாதிரி பார்த்துக்குவாங்க இல்ல... சினிமாப் பாட்டுக் கேட்டு உருகுவாங்க இல்ல...''

''நானும் ஒரு பார்ட்டிய பிடிக்கணும் என்று பார்க்கிறேன்... முடிய மாட்டேங்குதப்பா......... நம்மளப் பார்த்தாலே பொண்ணுங்க ஓடுதுங்க. இவன்லாம் எப்படி மடக்கறான்னே தெரியலையே?'' — இப்படி ஒரு பத்து சதவிகிதம் ஆச்சரியப்படும்.

''லவ்வுங்கறதெல்லாம் ஒண்ணுமில்லம்மா. எல்லாம் கரென்ஸிதான். வெள்ளைச் சட்டையில தெரியறாப்பல ஒரு ரெண்டாயிரம் ரூபா முடிச்சு வச்சுக்க. அப்பவே உன்னை உத்துப் பார்ப்பாங்க''

''உன்னிடம் சொத்து இருப்பதாகத் தெரிந்தால் உன்னை நெருங்கி வந்து அணைத்துக் கொள்வார்கள்.'' —காதலைக் கொச்சையாக்கி, கேவலமான வியாபாரமாக்கி பத்து சதவிகிதத்தினர் இப்படிப் பேசுவார்கள்.

''காதலுங்கிறது ஆரம்பத்துல நல்லாயிருக்கும் ஸார். வளர்த்து ஆளாக்கின அப்பா, அம்மாவை விட்டுட்டு புதுசா வந்த பொண்ணுக்கு ஏதாவது மயக்கத்தில் சத்தியம் கொடுத்திடுவோம். அந்தச் சத்தியம் நம்ம வீட்டுக்கு ஒத்துவராது சத்தியத்தை நிறைவேற்றா விட்டால் அந்தப் பெண்ணிடம் நமக்கு மரியாதை இருக்காது.''

''எதுக்கு ப்ராப்ளம்? பெற்றோர்கள் யாரைச் சொல்றாங்களோ அவங்களையே கல்யாணம் பண்ணிக்கலாம்.''

''அப்படி கல்யாணம் பண்ணிண்ட பிறகும் 'லவ் யூ'ன்னெல்லாம் சொல்லக்கூடாது, முதல் இரவன்றே எனக்குப் பிடித்தமா நடந்துக்கறதை விட, எங்கப்பாம்மாவுக்குப் பிடித்தமா நடந்துக்கோ. அதான் எனக்கும் நல்லது; உனக்கும் நல்லதுன்னு சொல்லிடணும்.''

''லவ்வுல்லாம் டேஞ்சரஸ் சார். வாழ்க்கையை நாசம் பண்ணிடும்.''

—முப்பது வயதாகியும் அம்மாவின் பால்குடி மறக்காத முட்டாள்கள் ஒரு பத்து சதவிகிதத்தினர், இப்படி பேசுவார்கள். பௌருஷம் என்கிற கம்பீர சால்வையைக் களைந்து விட்டு, கல்யாணத்தன்றும் வெறும் கௌபீனதாரியாய் நிற்பார்கள்.

கோழைகளுக்கு வாழ்வுமில்லை; வாக்குமில்லை. உலகம் காதலைப் பற்றி பல நூறு விதமாய் அபிப்பிராயம் சொல்லிக் கொண்டுதான் இருக்கும்.

வாழ்க்கை அனுபவம் ஒருவருக்கு கிடைப்பதுபோல், மற்றவருக்கு கிடைப்பதில்லை. காதலால் வாழ்ந்தவரும் உண்டு; தீய்ந்தவர்களும் உண்டு.

எதற்காக இங்கு பிறந்திருக்கின்றோம். காதலிப்பதற்குத்தானே?

காதலிப்பதற்கு முன்னர் அது பற்றி நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். காதல் ஒரு நல்ல அனுபவம். அது முழுமையாக இருந்தால் வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

மறுபுறத்தில் காதல் தோற்றால்...

கலியாணத்தில் முடிவடையா விட்டால்......

காதல் முழுமையடையவில்லை

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டைகளால் யாருக்குப் பாதுகாப்பு?

# யாழ்.வந்த பத்திரிகையாளருக்கு ஏற்பட்ட சந்தேகம்!

தமிழரசுக் கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரும் ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கழகத்தின் நிறுவுனருமான அமரர் வ. நவரத்தினம்—

தேசிய அடையாள அட்டை என்பது தமிழர்களுக்கு இலங்கை அரராங்கம்கட்டப்போகும் நாய்ப்பட்டி— என்று சுமார் முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வர்ணித்திருந்தார்.

மாநகரசபைப் பகுதிகளிலுள்ள வீட்டு நாய்களுக்கு, அவற்றைத்தெரு நாய்களில் இருந்து வேறுபடுத்துவதற்காக, இலக்கம் பொறித்த தகடுகள் வழங்கப்படுவது உண்டு. அந்தத் தகடுகளை வீட்டுக்காரர்கள் அழகிய பட்டிகளில் கட்டி நாய்களின் கழுத்துக்களில் தொங்கவிடுவர்.

1970 முற்பகுதியில் ஆள்களைப் பதிவு செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே அவர், தமிழர்களை இனங்காட்டும் நோக்குடனும், அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக நடத்தவுமே அடையாள அட்டைமுறை கொண்டு வரப்படுவதாகத் தெரிவித்தார்.

வீட்டு நாய் ஒன்று இலக்கப் பட்டி அணியாமல் தெருவில் இறங்கிவிட்டால், மாநகரசபை ஊழியர்கள் அதனைக் கம்பி போட்டு இழுத்துப் பிடித்து வண்டிக்குள் அடைத்துக் கொண்டு போவார்கள்.

அதே போன்ற நிலைமையே இப்போது தமிழர்களுக்கு. அமரர் நவரத்தினத்தின் வர்ணனை எவ்வளவு பொருத்தமானது; அவரது அரசியல் தீர்க்க தரிசனம் எத்தகையது என்பதனை இப்போது ஒவ்வொரு தமிழரும் உணர்வர்.

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கையின் எந்தப் பகுதியிலும் தமிழர்கள் தேசிய அடையாள அட்டை இன்றிப் பயணம் செய்ய முடியாது; வீட்டில் தானும் இருக்க முடியாது. இலங்கை அரசாங்கத்துக்கும் அதன் ஆயுதப் படைகள் மற்றும் பொலீஸாருக்கும், அடையாள அட்டையைத் தற்செயலாகக் கைவசம் வைத்திருக்கத் தவறிய எந்தத் தமிழரும் சந்தேகத்துக்கு உரியவர் ஆகிறார். அவர் எந்த வயதினர், என்ன அந்தஸ்து உள்ளவர், எங்கே பணிபுரிகிறார், அரசுக்கு என்ன தொண்டாற்றுகிறார் என்பது குறித்துத்தானும் அவர்கள் பொருட்படுத்துவது இல்லை. அவர் இரண்டாந்தரப் பிரஜை என்ற அளவு கோலுடன் நாடா பிடிக்கப்பட்டு வேண்டாத தொல்லைகள், வேதனைகளுக்குஆளாக்கப்படுகிறார்.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணத்திலோ நிலைமை படுமோசம். ஒருநாளைக்குஉணவு இல்லாமல் பட்டினி கிடந்தாவது உயிர் வாழலாம். ஆனால் நின்றும் நடந்தும் இருந்தும் அவன் தாள் நினைப்பதுபோல, எங்கு சென்றாலும், எங்கு இருந்தாலும், எந்த நேரத்திலும், அடையாள அட்டைகளை வைத்திருக்கவேண்டும்!

தொழில் பார்ப்பவர்கள், ஒன்றல்ல; இரண்டல்ல; மூன்று அடையாள அட்டைகளையும் கைவசம் வைத்திருந்தால்தான் தடங்கல், தாமதம் இன்றி தொழில் நிலையத்துக்குப் போய்ச் சேரலாம். ஆள் அடையாள அட்டை, விசேட அடையாளஅட்டை, தொழில் தருநர் அடையாள அட்டை ஆகிய மூன்றையும் எடுத்துச் செல்வதுதான் புத்திசாலித்தனம் என்பதால் அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள்.

காவல் அரண்களைத் தாண்டிச் செல்லுப்போது அங்கு கடமையில் ஈடுபட்டுள்ள சிப்பாய்களின் மனநிலைக்கு ஏற்ப மூன்று அடையாள அட்டைகளின் முக்கியத்துவமும் மாறுபடும்! ஒருவேளை, இராணுவ (விசேட) அடையாளஅட்டை எடுக்கவில்லையா என்று கேட்பவர்கள் மறுவேளை தேசிய அடையாள அட்டைதானே முக்கியமானது அது எங்கே என்று கேட்பார்கள். ஒருவர் தாம் அரசாங்க உயர் அதிகாரி, அலுவல்களின் நிமித்தம் அவசரமாகப் போக வேண்டும் என்றால் தொழில் தருநர் அட்டையைக் காட்டினாலேயே காவலரண் படையினரை திருப்தி செய்யலாம்.

இத்தகைய சூழ்நிலையில் நாய்களுக்கு ஒரேயொரு கழுத்துப்பட்டி; தமிழனுக்கோ மூன்று கழுத்துப்பட்டி என்றாகி விட்டது!

வாழ்க்கை ஓடவேண்டுமே, காரியம் ஆக வேண்டுமே, யாழ்ப்பாணத்தில் — சொந்த மண்ணில் — வாழ வேண்டுமே என்பதால் மூன்று அடையாள அட்டைகளையும் குடாநாட்டு மக்கள் ''தொங்கவிட''ப் பழக்கப்பட்டு விட்டார்கள். அதனை தவறாக் கடமையாக வழக்கப்படுத்திக் கொண்டார்கள்.

எதற்கும் வளைந்து கொடுக்கக் கூடியவர்கள், தருணம், சூழ்நிலை அறிந்து தாமாகவே வளையக் கூடியவர்கள் என்ற ''பெருமைகள்'' குடாநாட்டு மக்களுக்கு உண்டல்லவா? அதனால் இப்போதெல்லாம் அடையாள அட்டைகளை அடுக்கிக் கொண்டு செல்வது அவர்களுக்குப் பாரமாகத் தெரிவதில்லை!

இந்த அடையாள அட்டைகள் தமக்குப் பாதுகாப்புக்காகவா, அல்லது படையினரின் பாதுகாப்புக்காகவா என்று சிந்திக்கவும் அவர்கள் தலைப்பட்டதில்லை.

ஆனால், கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த தென்னாபிரிக்க பத்திரிகையாளர் குழுவினருக்கு ஒருவர் மூன்று அடையாள அட்டைகளை காவிக் கொண்டு திரிவது பெரும் விநோதமாக இருந்தது. அதனால் அந்தப் பத்திரிகையாளர் குழுவைச் சேர்ந்த ஒருவர், யாழ். செயலகத்தில் அரசாங்க அதிகாரிகளைச் சந்தித்த வேளை, உயர் அதிகாரி ஒருவரிடம் மூன்று அடையாள அட்டைகளையும் காண்பிக்குமாறு கேட்டுத் தமது ''வீடியோ'' கமெராவுக்குள் அவற்றை அடக்கிக் கொண்டார்.

## செஞ்சிலுவை கப்பற் சேவைக்கு அரசின் பச்சைக்கொடி எப்போது?

அத்தோடு நிற்கவில்லை. அந்த மூன்றின் ''புதுமை'' கண்டு அதே பத்திரிகையாளர் கேட்டாரே ஒரு கேள்வி, அந்த உயர் அதிகாரியிடம்!

''இத்தனை அடையாள அட்டைகளும் யாரைப் பாதுகாப்பதற்காக? மக்களையா அல்லது பாதுகாப்புப் படையினரையா?'' என்பது தான் அந்தக் கேள்வி.

சம்பந்தப்பட்ட அதிகாரி என்ன பதிலைக் கூறமுடியும்! தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்களுடன் இராணுவ அதிகாரிகளும் கூட வந்திருந்தனர் என்பது தெரிந்ததே.

தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்கள் தாங்கள் சந்தித்த பிரமுகர்களை விட்டு வைக்கவில்லை. குடைந்து குடைந்து கேட்டார்கள். ஆனால் பிரமுகர்கள் சொல்ல விரும்பியதைச் சொல்ல முடியவில்லையாம். அதனை வந்திருந்த பத்திரிகையாளர்களும் உணர்ந்திருக்க வேண்டும்.

வலிகாமம் வடக்கின் பல பகுதிகளில் வீடுகள் சேதமடைந்திருப்பதையும். அங்கெல்லாம் காடு மண்டியிருப்பதையும், மக்கள் நடமாட்டம் இல்லாதிருப்பதையும் பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் வரும்போது அவர்கள் அவதானித்திருக்கிறார்கள்.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற சந்திப்பில் அதனை அவர்கள் புட்டுப் புட்டுக் கேட்டார்கள். தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர்களில் ஒருவர் (மொத்தம் 11 பேர்) பின்வருமாறு வினவினார்.

யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு வந்த வீதியோரங்களில் பற்றைகளும், காடுகளும் வளர்ந்துள்ளனவே. ஆனால் இந்தப் பகுதிகளில் முன்பு ஒரு காலத்தில் மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்களைக் கண்டோம். வீடுகள் உடைந்த நிலையிலும், தரைமட்டமாக்கப்பட்டும் காணப்படுகின்றன—

சில இடங்களில் வீடுகள் அப்படியே இருக்கின்றன. அவற்றைச் சுற்றி பற்றைகள் வளர்ந்துள்ளன. இன்னும் சில பகுதிகளில் வீட்டுச் சுவர்கள் இருக்கின்றன; கூரைகள், ஜன்னல்கள், கதவுகளைக் காணவில்லை. இதற்கு யார் காரணம்? ஏன் அந்தப்பகுதிகளில் இப்போது மக்கள் வசிக்கவில்லை?

—இவ்வாறு அவர்களுக்கு யாழ்ப்பாணத்தைப் பார்த்த பின்னர் பல சந்தேகங்கள் வந்தன. பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அவர்களுடன் வந்திருந்த இராணுவ அதிகாரிகளே பதிலளித்தனர்.

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

**யாழ். திறந்த சிறைச்சாலை**

யாழ்ப்பாணத்தில் நிலைமை குறித்து நகரில் சந்தித்தவர்களிடம் இருந்து பதில் விவரமாகப் பெறமுடியவில்லை என்றாலும் அவர்கள் முக்கிய விடயங்களை கிரகித்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்து மக்கள் திறந்த சிறைச்சாலையில் உள்ள கைதிகளின் நிலையிலேயே வாழ்கிறார்கள் என்பதைத் தாம் உணர்ந்து கொண்டதாக அவர்கள் செயலகத்தில் நடைபெற்ற உரையாடலின்போது நாசுக்காக வெளிப்படுத்தினர்.

தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர் குழு யாழ். பல்கலைகழகத்துக்கும் சென்றிருந்தது. அங்கு நடைபெற்ற கலந்துரையாடல் குறித்து பத்திரிகையாளர்களில் ஒருவர் —

இராணுவ அதிகாரிகளும் கூட இருந்தமையால் அங்கிருந்தவர்களால் சுதந்திரமாகத் தமது கருத்துக்களையும், உண்மையான நிலைமைகளையும் தெரிவிக்க முடியவில்லை என்பதனை நாம் உணர்ந்து கொண்டோம் — என்றார்!

யாழ். ஆயர் இல்லத்துக்கும் சென்ற பத்திரிகையாளர் குழு இங்கு வரும் வழியில் காங்கேசன்துறையில் உள்ள ''கூல் எயர்'' மின்சார உற்பத்தி நிலையத்தையும் பார்வையிட்டதாகக் கூறினர்.

இவர்கள் தாம் பலாலியில் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதாகவும் தெரிவித்தனர். கொழும்பிலும் தமிழ்ப் பிரமுகர்கள் மற்றும் அரசியல்வாதிகளையும் சந்தித்துப் பேசியிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் ஒரு சில மணி நேரத்தையாவது கழிப்பதற்கு அவர்களுச்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆனால் வன்னிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

தென்னாபிரிக்காவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தூதுக்குழுவுக்கே அனுமதி வழங்காத அரசாங்கம் பத்திரிகையாளருக்கு எவ்வாறு அங்கு செல்ல அனுமதி தரும்?

தென்னாபிரிக்கா ஆகக் குறைந்தது இன விவகாரத்தில் ஒரு தொடர்பாளராகவோ அல்லது அனுசரணையாளராகவோ தற்செயலாகப் பணியாற்ற வந்தாலும், வன்னியைப் பார்த்து நிச்சயமாக தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளை ஆதரிக்க வகை செய்யக்கூடாது என்பதில் கொழும்பு அரசுக்கு அத்தனை அக்கறை!

★ ★ ★

**யாழ்ப்பாணத்தின் நிலை**மையை அறிவதற்காக, தென்னாபிரிக்கப் பத்திரிகையாளர் குழுவைத் தொடர்ந்து, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான தலைமைப் பிரதிநிதி மக்ஸ் ஹடோன் இவ்வாரம் இங்கு வந்திருந்தார்.

குடாநாட்டின் பல பிரமுகர்களையும் அதிகாரிகளையும் அவர் சந்தித்தார். உதயன் — சஞ்சீவி பணிமனைக்கும் விஜயம் செய்தார்.

குடாநாட்டின் இன்றைய நிலையை அறிவதில்—மக்களின் கஷ்டங்களைத் தெரிந்து கொள்வதில்— அவர்களின் வாழ்க்கை நிலையை அறிந்து கொள்வதில்— செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பங்கு பணிகளை விவரிப்பதில் — அவர் மிகுந்த ஆர்வம் கொண்டவராக விளங்கினார்.

மக்ஸ் ஹடோன் யாழ்ப்பாணம் உப அலுவலகத்தில் 1991, 1992 ஆம் ஆண்டுகளில் பணியாற்றியதால் குடாநாட்டின் ஊர்கள், மக்களின் சுபாவம், அவர்களின் வாழ்க்கை முறை என்பன அவருக்கு அத்துப்படி. அதனால் ஏனைய வெளியாரைவிட, இன்றைய நிலையை முந்திய நிலையுடன் இவரால் சரியாக ஒப்பிட்டு மதிப்பிட முடியும்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பாதுகாப்பு வலயமாக்கப்பட்டுச் செஞ்சிலுவை அதனைக் கண்காணித்தமை, உணவுப் பொருள்களை ஏற்றி வந்த கப்பலில் செஞ்சிலுவைக் கொடியேற்றிப் பாதுகாப்பு வழங்கியமை, அதற்காக அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்று உண்டானமை ஆகியவற்றை அவர் வரிசைப்படுத்தி ஞாபகப்படுத்தினார்.

**செஞ்சிலுவைக் கப்பற் சேவை**

யாழ்ப்பாண மக்களுக்குப் பாதுகாப்பான சீரான போக்குவரத்துச் சேவை ஒன்றை, குறிப்பாகப் பயணிகள் கப்பற் சேவையை நடத்துவதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு எந்தளவில் உதவமுடியுமெனக் கேட்டோம்.

இது சம்பந்தமாகத் தமது குழு தொடர்ந்து பலவகையான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கூறிய அவர்—

பயணிகள் கப்பற் சேவை ஒன்றை நடத்துவதற்கு முன்னேற்பாடாக அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் ஏற்கனவே பேசியுள்ளதாகத் தெரிவித்தார்.

அதன் பின்னரும் தேவையான செயற்பாடுகள் தொடர்ந்ததாகவும், அடுத்ததாக கப்பற் சேவையை நடத்துமாறு அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமான சமிக்ஞைகிடைக்க வேண்டியதுதான் தாமதம் என்றும் மக்ஸ் ஹடோன் தெரிவித்தார்.

அந்த சமிக்ஞை கிடைத்ததும் கப்பற்போக்குவரத்து சம்பந்தமாக அரசு –விடுதலைப் புலிகள் — செஞ்சிலுவை முத்தரப்பு விதிமுறை (Modalities) ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும் என்றும் அதன் பின்னர் கப்பற் சேவையை ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்கள் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

மனிதாபிமான உதவியாக செஞ்சிலுவைக் குழு குடாநாட்டு மக்களுக்கான கப்பற் சேவையை நடத்த முன்வந்ததாக அவர் தெரிவித்தார். எனினும் செஞ்சிலுவைக் குழுவிடம் போதிய நிதிவளம் இல்லை என்பதனை அவரது பதில்களில் இருந்து ஊகிக்க முடிந்தது. இதற்கான நிதி உதவியை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவுக்கு உதவும் நாடுகளில் ஒன்றிடம் பெற முடியும் என்று அவர் மிக நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

குடாநாட்டு மக்கள் எல்லோரிடமும் விமானப் பயணம் செய்யக் கூடிய நிதி நிலைமை இல்லை. ஒழுங்கான, சீரான, நியாயமான கட்டணத்துடனான கப்பற் சேவையே குடாநாட்டு மக்களில் பெரும்பாலானோருக்கு உதவியாக இருக்கும் என்று அவரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

கொழும்பு செல்வதற்கும் அங்கிருந்து வருவதற்கும் சுமாராக நாளாந்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு நெருக்கடியை உருவாக்கும் தேர்தல்

மறுபக்கம் வாரவிமர்சனம்

நல்லூர் தாஸ்

கூட்டு நடவடிக்கைகள் சபையின் (ஜே. ஓ. பி,) தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் றொஹான் தளுவத்த தனது வெளிநாட்டுப் பயணத்தின் ஒரு கட்டமாக அமெரிக்கா போய்ச் சேர்ந்துள்ளார். கடந்த புதனன்று பாரிஸில் இருந்து லொஸ் ஏஞ்சல்ஸ் போய்ச் சேர்ந்த அவரும் அவரது குழுவினரும் அமெரிக்க இராணுவத்தின் பயிற்சி வளாகம் ஒன்றுக்கு விஜயம் செய்து பயிற்சி முறைகளை நேரில் பார்வையிட்டனர்.

மேற்குலக நாடுகளில் — அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டனில் — உள்ள உயர் பாதுகாப்புக் கட்டளை அமைப்புகள் குறித்து அறிந்து கொள்ளவதற்காக மேற்கொள்ளப்படும் இந்த மூன்று வாரகால விஜயத்தில் மிகக் கூடிய நாள்களாக — 10 தினங்கள் — இக் குழுவினர் அமெரிக்காவில் தங்க உள்ளனர். தளுவத்தவும் அவரது குழுவினரும் ஹவாய்த் தீவில் உள்ள அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிராந்தியத்துக்கான கட்டளைத் தலைமையகத்துக்கும் விஜயம் செய்ய ஏற்பாடாகி இருந்தது. அங்கு அவர்கள் சிரேஷ்ட படைத் தளபதிகளைச் சந்திப்பதுடன் பசுபிக் தளத்தில் அமெரிக்க முப்படையினரின் கூட்டுச் செயற்பாடுகளையும் நேரில் பார்வையிடுவர். நிகழ்ச்சி அட்டவணைப்படி அடுத்த வாரம் மேலும் பல இடங்களுக்கும் அவர்கள் செல்ல ஏற்பாடாகி உள்ளது. பின்னர் அங்கிருந்து டோக்கியோ ஊடாக குழுவினர் கொழும்பு திரும்புவர் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

பயணத்தின் தொடக்கமாக தளுவத்த குழுவினர் கடந்த 3 ஆம் திகதி லண்டன் சென்றனர். வைற்ஹோலில் உள்ள பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகத்தில் பிரிட்டிஷ் படைகளின் பிரதம தலைமை அதிகாரி சேர் ஜெனரல் சார்ள்ஸ் கதரி அவர்களை வரவேற்றதாகத் தெரிய வருகிறது.

பி. ஜே. எச். ஓ (Permanent Joint Headquarters) என அழைக்கப்படும் பிரிட்டனின் பிரதான கூட்டுப்படைத் தலைமையத்துக்கும் குழுவினர் விஜயம் செய்தனர். லண்டனுக்கு வெளியே நோத் வூட் (North Wood) என்னும் இடத்தில் அமைந்துள்ள இந்தத் தலைமையகம் ஈராக் மீதான அமெரிக்க — பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலின் போது படுபிஸியாகச் செயற்பட்டது. ஜெனரல் தளுவத்தவும் குழுவினரும் அங்கு சிரேஷ்ட படைஅதிகாரிகளைச் சந்தித்தனர். ஆனால் இந்தத் தலைமையகத்தின் தளபதியான சேர் ஜெனரல் கிறிஸ்தோபர் வேல்ஸ் அச்சமயம் அங்கு தங்கியிருக்கவில்லை என்றும் அதனால் அவரைச் சந்திக்க முடியாது போனதாகவும் கூறப்படுகிறது.

பிரிட்டனின் பாதுகாப்புக் கற்கைகளுக்கான றோயல் கல்லூரி, பிரதம அலுவலர்களுக்கான பயிற்சிக்கல்லூரி, உட்பட பல இடங்களுக்கும் குழுவினர் நேரில் சென்றனர். ஆனால் இந்த விஜயத்தின் முக்கிய பகுதியாக இடம்பெற்றிருந்த வட அயர்லாந்துக்கான பயணம் கைகூடவில்லை. பிரச்சினைக்குரிய பகுதியாக விளங்கும் வட அயர்லாந்தில் உள்ள பாதுகாப்பு ஒழுங்குகளைச் சென்று பார்வையிட குழுவினர் விடுத்த வேண்டுகோளை பிரிட்டிஷ் அதிகாரிகள் ஏற்கவில்லை என்று ஊர்ஜிதப்படுத்தப்படாத பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட அயர்லாந்து பாதுகாப்பு நிலைவரத்தை நேரில் அவதானிப்பது ஓர் அனுபவமாக இருப்பினும் அது இலங்கை நிலைவரத்துடன் சிறிதளவுதானும் ஒப்பிட முடியாதது.

பிரிட்டிஷ் இராணுவம், றோயல் கடற்படை, விமானப்படை, பொலீஸ் என்பன நேரடியாகத் தலையிட்டிருந்த போதிலும் அங்கு யுத்தம் நடைபெறவில்லை; விமானத் தாக்குதல்கள் இல்லை; ஷெல்களும், பீரங்கிகளும் முழங்கவில்லை; காடுகளுக்குள் படையெடுப்புகள் நிகழவில்லை.

இந் நிலையில் வட அயர்லாந்து அனுபவம் இலங்கை யுத்தத்துக்கு எந்த வகையில் உதவ முடியும் எனக் கேள்வி எழுப்புகின்றனர் சிலர்.

பல லட்சம் ரூபா அரசபணத்தை செலவிட்டு மேற்கொள்ளப்படும் இந்த வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக இது போன்ற பல கேள்விகளும் சந்தேகங்களும் தெற்கு விமர்சகர்களால் எழுப்பப்பட்டு வருகின்றன.

கூட்டுப்படை நடவடிக்கைச் சபை அமைக்கப்பட்டு ஒரு மாதம் பூர்த்தியான நிலையில் — புதிய படை நகர்வு எதுவும் திட்டமிட்டு நடத்தப்படாத நிலையில் — அதன் தலைவர் நீண்டகால வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்வது படை வட்டாரங்களில் கூட அதிருப்தியை உருவாக்கிஇருப்பதாகத்தெரியவருகிறது.

மாங்குளம் — ஒட்டுசுட்டான் பகுதிகளில் உள்ள படைநிலைகள் மீது புலிகள் பெரும் தாக்குதல் நடத்தும் சாத்தியம் இருப்பதாகப் புலனாய்வுத் தகவல்கள் படையினரை எச்சரித்துள்ள சூழ்நிலையில் கூட்டு நடவடிக்கைக்குப் பொறுப்பான உயர் அதிகாரி நாட்டில் இல்லாமல் இருப்பது கவலைக்குரியது என்று தென்பகுதி பாதுகாப்புச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனரல் தளுவத்தையின் விஜயத்தை அடுத்து அவரது இடத்துக்கு இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய பதில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ★ ★

"யாழ். குடாநாட்டைப் பாதுகாக்கும் பணியிலும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதிலும் கவனம் செலுத்தும் பாதுகாப்புப் படையினரைத் தேர்தல் பணிக்காக வாபஸ் பெறுவது உசிதமானதல்ல...''

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கடந்த ஆண்டு ஒகஸ்ட் 5 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்திருதார்.

அவசரகாலச் சட்டத்தை நாடு முழுவதும் அமுல் செய்யும் ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியாகி அதன் மூலம் தெற்கில் நடைபெற இருந்த மாகாண சபைத்தேர்தல்கள் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் அனுருத்த இவ்வாறு கூறியிருந்தார்.

தேர்தல்களுக்குப் பாதுகாப்புவழங்குவதில் எதிர் நோக்கும் சிக்கல்கள் காரணமாகவே தேர்தல்கள் ஒத்திவைக்கப்படுவதாக அரசாங்கம் கூறி இருந்தது.

சப்ரகமுவ, ஊவா, மேல், தென், வடமத்தி ஆகிய ஐந்து மாகாண சபைத் தேர்தல்களுமே திகதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டன. ஆனால் இந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டது அரசமைப்புக்கு முரணானது என்று உயர் நீதிமனறம் விடுத்த அறிவிப்பு அரசுக்கு ஒரு பின்னடைவாகவும், அதேசமயம் புதிய நெருக்கடியை ஏற்படுத்துவதாகவும் அமைந்துவிட்டது.

இந்த ஐந்து மாகாணத் தேர்தல்களும் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி நடைபெறவுள்ளன. தேர்தல் ஆணையாளர் அதற்கான அறிவிப்பை விடுத்துள்ளார்.

மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அரசாங்கத்தரப்பினரே ஏற்றுக்கொண்டுவிட்டனர்.

வெளிநாடுகள் தலையிட்டுகருத்து வெளியிடும் அளவுக்கு நிலைமை மோசமாகி ராஜீக விரிசல்கள் ஏற்பட்டிருப்பதும் தெரிந்ததே. இந்நிலையில் தலைநகர் கொழும்பையும் உள்ளடக்கிய இந்த ஐந்து மாகாணசபைகளுக்கான தேர்தல பிரசாரத்தில் ஆளும் கட்சியினரும், எதிர்க்கட்சிகளும் குதிக்க உள்ளன. தென்பகுதியைப் பொறுத்தவரை அடுத்துவரும் வாரங்கள் முக்கியத்துவம் பெற உள்ளன.

### சர்வதேச கவனம் தேர்தல்மீது

வடமேல் மாகாண சபையில் ஏற்பட்டமோசமான அனுபவம் காரணமாக நாட்டு மக்களும், சர்வதேச சமூகத்தினரும்ஏப்ரல் முதல்திகதிவாக்களிப்பை மிகுந்த ஆர்வமுடன் உன்னிப்பாக அவதானிக்கக் காத்திருக்கின்றனர்.

அரசாங்கத்தைப்பொறுத்தவரை இந்த மாகாணத் தேர்தல்களில்வெற்றியீட்டுவதைவிடவும் அரச தரப்பு ஆதரவாளர்கள் வன்செயல்களில் இறங்காமல் இருப்பதை உறுதி செய்யவேபடாதபாடுபடவேண்டியிருக்கும் அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் தேர்தல்கள் தொடர்பாக அதிக அக்கறை செலுத்தத் தொடங்கியிருப்பது அரசுக்கு அரசியல்ரீதியான ஒரு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமைகளைப் பொறுத்தவரையில் இத்தேர்தல் காலம் அரசுக்குப்பெரும் சவாலாகவே இருக்கும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

கடந்த ஆண்டு இந்தத் தேர்தல்கள் நடைபெற இருந்தவேளையில் வெற்றி வாய்ப்புக்கான சூழ்நிலை அரசதரப்புக்குச் சாதகமாக காணப்படவில்லை. எனவே பாதுகாப்பு என்ற காரணத்தைக் காட்டி — அவசரகாலச் சட்டவிதிகளைப் பயன்படுத்தி — தேர்தல்களை சுலபமாக ஒத்திவைத்தது அரசு. ஆனால் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அரசுக்கு தர்மசங்கடமான நிலையைத் தாற்றுவித்துவிட்டது. இந்தத் தேர்தல் காலத்தில் நாட்டின் பாதுகாப்பை — போர் முனையிலும் ஏனைய இடங்களிலும் — எவ்வாறு உறுதிசெய்வது எனத்தெரியாமல் பாதுகாப்புத்தரப்பினர் தலையில் கைவைக்கின்றனராம்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின் வெற்றிக்காக தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்று தெற்கில் அரசு பிரசாரம் செய்தது.

> "...யாழ். குடாநாட்டைப் பாதுகாக்கும் பணியிலும் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுவதிலும் கவனம் செலுத்தும் பாதுகாப்புப் படையினரை தேர்தல் பணிக்காக வாபஸ் பெறுவது உசிதமானதல்ல...''
>
> — நாடாளுமன்றில் அமைச்சர் அனுருத்த —

வடமேல் மாகாணசபைத் தேர்தலால் எழுந்த வன்செயல்கள், எதிர்ப்புணர்வு, அரசுக்கு ஏற்பட்ட அபகீர்த்தி என்பன அடங்குவதற்கு முன்பாசவே அடுத்த தேர்தல் திருவிழா தொடங்கிவிட்டது.

எதிர்காலத்தில் தேர்தல் எவ்வாறு அமையும் என்பதற்கு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்து விட்ட வடமேல் மாகாணசபைத் தேர்தலில் முறைகேடுகளும், அத்துமீறல்களும் அரச தரப்பு ஆதரவாளர்களால்

ஆனால் 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை இடைநடுவில் கைவிடப்பட்டது. படையினரின் அடுத்த நடவடிக்கை என்ன என்பது தெரியாதநிலை வன்னிப்போர் முனையில் நீடிக்கிறது.

### சுதந்திர தினம் சோபிக்கவில்லை

கடந்த 4 ஆம் திகதி 51 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் மிகவும் அடக்கமான முறையில் இடம்பெற்றன. வழமையாக இடம் பெறும் முப்படை அணிவகுப்பு கூட இம்முறை நடைபெறவில்லை. 21 பீரங்கி வேட்டுக்களைத் தீர்க்கும் மரியாதை நிகழ்ச்சியை கடற்படையினர் நடத்தினர்.

யுத்த தாங்கிகளையும். படையினரையும் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் இருந்து கொழும்புக்குக் கொண்டு வர விரும்பவில்லை என்று அரசாங்க வட்டாரங்கள் காரணம் தெரிவித்தன.

கடந்த ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் பொன் விழாவின் போது ஆயிரக்கணக்கான துருப்புகளும், யுத்த தாங்கிகளும் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால் இந்த ஆண்டு அத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறவில்லை.

ஆனால் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் தலைநகரில் படையினரும் பொலீஸாரும் அதி உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர். சுதந்திர தின வைபவம் நடைபெற்ற சுதந்திரச் சதுக்கம் மீது புலிகள் மோட்டார் தாக்குதல் நடத்தக்கூடும் என கடைசி நேரத்தில் கிடைத்த புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்து வைபவம் நடப்பதற்கு முந்திய 24 மணிநேரமும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இரட்டிப்பாக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சுதந்திரதினம் நெருங்கிக் கொண்டிருந்த சமயம் கொழும்பில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்ட சம்பவங்கள் அடுத்தடுத்து இடம்பெற்றிருந்ததால் உயர் அதிகாரிகளிடையே நகரின் பாதுகாப்புக் குறித்த கவலை எழுந்திருந்தது.

### 1,400 மின்மாற்றிகளை பாதுகாப்பது எப்படி?

கொழும்பையும் அதனை அண்டிய பகுதிகளிலும் மின்சார சபைக்குச் சொந்தமான சுமார் ஆயிரத்து 400 மின்மாற்றிகள் உள்ளன. இவை அனைத்துக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய அவசியம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளது. விசேட பொலீஸ் குழுக்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதும் மின்மாற்றிகளுக்கு 24 மணிநேரமும் பாதுகாப்பு வழங்குவது சாத்தியப்படாது. எனவே பிரதேச பொது மக்களை உள்ளடக்கிய விழிப்புக் குழுக்களை அமைத்து அவற்றைப் பாதுகாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மின்மாற்றிகளைத் தொடர்ந்து தலைநகரின் தொலைத் தொடர்புச் சேவையை முடக்கும் நோக்கில் 'ரெலிக்கொம்' பரிவர்த்தனை நிலையங்களைத் தாக்குவதே புலிகளின் அடுத்த இலக்காக இருக்கும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வட அயர்லாந்துசெல்ல தளுவத்த குழுவினர் அனுமதிக்கப்படவில்லை

இதன்மூலம் பொருளாதார ரீதியில் அரசுக்கு இழப்பை ஏற்படுத்துவதுடன் உள்ளூர் பாதுகாப்பு கடமைகளில் பெரும் எண்ணிக்கையான படையினரையும். பொலீஸாரையும் ஈடுபடுத்த வேண்டிய கட்டாயத்தை உருவாக்குவதும் புலிகளின் நோக்கம் என்றும் —

இதன் மூலம் போர் முனைகளில் இருந்து படையினரையும் பொலீஸாரையும் வாபஸ் பெறும் நிலையை ஏற்படுத்த புலிகள் முயற்சிக்கின்றனர் என்றும் —

பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### புதியபடை நகர்வுக்கு வாய்ப்பில்லை

வன்னியில் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் புதிய படை நகர்வுகளை மேற்கொள்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்ற போதிலும் கூட்டுப்படை நடவடிக்கைச் சபையின் தலைவர் நாட்டில் இல்லாத சமயம் பெரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் சாத்தியம் இல்லை என்றே பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் கூறுகின்றன.

முக்கிய ஐந்து மாகாணங்களிலும் ஒரே நாளில் நடைபெறவுள்ள தேர்தல் வாக்களிப்புக்கு முன் எப்போதும் இருந்திராத வகையில் பாதுகாப்பு வழங்கவேண்டியிருக்கும். ஏப்ரல் முதல் திகதி வாக்களிப்பு இடம் பெற உள்ளது. எனவே அதற்குமுந்

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வி சனி | | | |
| சூ வெ புத | இராசிச் சக்கரம் | | ரா |
| கே | | | |
| சந் | | செ | |

# இந்த வார இராசி பலன்

## [13 - 02 - 1999 முதல் 19 - 02 - 1999 வரை]

மாற்றம்:

13 - 2 - 1999 இல் பூராடம் நட்சத்திரம் சந்திரன் தனுசு இராசியில் நிற்கும். 18 - 2 - 1999 இல் சுக்கிரன் (வெள்ளி) மீனம் இராசிக்கும் மாறும்.

**அரசியலில் — அரசியல்வாதிகளின் போக்கால் மக்கள் மனமாற்றம் அடைவர். சமயவாதிகளின் ஆலோசனைகள் அலட்சியப்படுத்தப்படும். மாணவர்கள், புத்திஜீவிகள், தொழிலாளர்கள் என சமுதாய மட்டத்திலுள்ளவர்களால் பலவித அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படும். எதிர்க்கட்சி அரசுக்கு எதிரான கடும் போக்கை அனுசரிக்கும். வெளிநாடுகள் பலவித ஆலோசனைகளைக் கொடுக்கும்.**

**இந்தியாவில் — செல்வி ஜெயலலிதாவின் சாணக்கியப் போக்கால் தமிழ்நாட்டு அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் கருத்து வேற்றுமை அதிகரிக்கும். பலவித தீவிர வாதக் குழுக்களாலும், வெளிநாட்டுச் சக்திகளின் சதியாலும் நாட்டில் பல அழிவுகள் உருவாக இடம் உண்டு.**

**மேற்குலகில் அமெரிக்க ஜனாதிபதிக்கு — இலங்கேஸ்வரன் இராவணனின் நிலை வர இடம் உண்டு. மத்திய கிழக்கில் புதிய திட்டங்களை ஐ.நா. அறிமுகப்படுத்தும். விட்டு விட்டு பதற்ற நிலைகள் உருவாக்கப்படும். கிழக்கு நாடுகளுக்கு பொருளாதார அழுத்தத்தைத் தொடர்ந்து மேற்கு நாடுகள் கொடுத்தபடி இருக்கும் எனக்கிரகநிலைகள் காட்டுகின்றன.**

மேடம்: உங்களுக்குப் பல கசப்பான அனுபவங்கள் ஏற்படும். எதிரியும் நண்பராகலாம்; நண்பர்களும் எதிரியாக மாறலாம். காலத்தின் திசை மாற்றத்தால் எத்தனை சோதனைகள் இவ்வுலகில் நிகழ்கின்றன? எனினும் எதையும் போராடிப் போராடிப் பெறும் இயல்பு உங்களுக்குச் சர்வசாதாரணம். பிடிவாதமும் திட்டமிட்ட செயலும் வெற்றி தரும். எதையும் துணிந்தபின் துயரங்கொள்ளக் கூடாது. தொழில் ஸ்தானத்தில் பணத்திற்காகச் சில பகைமைகள் தலைதூக்கும். சொந்தமென்று வந்ததெல்லாம் சொந்தமல்ல; பந்தபாசத்தைப் பேசி பொறாமையால் போட்டி போடும் உறவுகள் தேடி வரும் காலமாகும். நிதானமாகச் செயற்படவும். வயிற்றுநோ, வாய்வுத் தொல்லை, மூலச்சூடு, நாரிநோ, மனப்போராட்டம், நெஞ்சுப் படபடப்பு இருக்கும். சாப்பாட்டை நிதானமாக வைத்துக்கொள்ளவும். கீரை வகைகளை உணவுடன் சேர்த்துக் கொள்ளவும். இடமாற்றம், பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வெள்ளி.

இடபம்: மற்றவர்களுக்குத் துன்பம், கெடுதல்கள் செய்பவர்கள் தமக்கே பல துன்பங்களுக்கு மூலதனமிடுகிறார்கள் என்பார்கள். எதையும் உள்வாங்கிச் சிந்தித்துச் செயற்படும் உங்களுக்கு இது விளங்காததல்ல. தொழில் ஸ்தானத்தில் கொள்கையளவில் பல எதிர்ப்புகள் வரலாம். சமாளித்துக்கொள்ளுங்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். வயதானவர்களுக்குக் கூட உங்கள் ஆலோசனை பல நன்மைகளைக் கொடுக்கும். நேரம் தவறிச் சாப்பிடாதீர்கள். வயிற்றில் குழப்பம், நெஞ்சுப் படபடப்பு, கைகால் பிடிப்பு, பித்தக் கொதிப்பு, சமியாக்குணம் என்பன அடிக்கடி சிலருக்கு வரலாம். அடிக்கடி பான வகைகளைப் பருகுவதைக் குறைக்கவும். போதைப் பொருள்களைப் பாவிப்பதைத் தவிர்க்கவும். தூரத்துச் செய்திகளால் குடும்பத்தில் பலவித அபிப்பிராய பேதங்கள் ஏற்படலாம்.

★ அதிர்ஷ்டநாள்: சனி. வெள்ளி.

மிதுனம்: பிரச்சினைகள் வரும் பொழுதுதான் பல நியாயங்கள் எழுந்து அப்பிரச்சினைக்கு ஒரு முடிவு ஏற்படும். இக்காலங்களில் நீங்கள புத்திசாதுரியமாக நடந்து கொள்ளவும். குடும்பத்தில் நடப்பது உலகத்தவர்களுக்குத் தெரியாதல்லவா? தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் உருவாகலாம். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஓடி ஓடித் தேடுவதனால் குறையில்லை. ஆனால் ஆடு கடித்தமாதிரி தொட்டுத் தொட்டு எதையும் முற்றாக முடிக்காமல் பல குறைகள் தேடிவர இடம் உண்டு. தலைவலி, வாத உளைவு, மலச்சிக்கல், சளித்தொல்லை, பித்தக் கொதிப்பு என்பன ஏற்பட இடம் உண்டு. வாய்வுத் தொல்லை அடிக்கடி கொடுக்கும். மனச் சஞ்சலம் தீர யாத்திரை செய்யுங்கள். ஆண்டவன் ஆலயங்களில் கொஞ்ச நேரம் தங்கி வழிபடுங்கள். மாதாவை மனதார வணங்குங்கள். மனதில் சாந்தி பரவிப் பரவசம் பிறக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி,

கடகம்: எதிரியை நாம் நண்பர்களாக்கினால் பல காரியங்களைச் சாதகப்படுத்தலாம் என்ற ஞானம் உங்களுக்குவர இடம் உண்டு. பெற்ற தாயும் உடன் பிறந்தசகோதரர்களும் சங்ககாலத்தில் உதவியிருக்கலாம். போற்றியிருக்கலாம். ஆனால் இப்பொழுது கம்பியூட்டர் காலம். தூற்றுவதும் ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டு வருவதும் சகஜமாகும். புத்தி சாதுரியமாகச் செயற்படாவிடில் உதயத்தில் உள்ள ராகுவால் அதிக யோசனை வேதனை தரச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் பொருள் விரயங்கள் கொடுக்கும். காணி, பூமியில் சட்டமொன்று தெய்வ வாக்காக அலை மோதி நிற்கும். தெய்வீகம், அரசியல், இலக்கியம், சட்டம் என மாறி மாறி உள்ளத்தில் வெள்ளமாக சஞ்சலத்தைத் தந்து விடும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

சிங்கம்: எமது செயற்பாடுகள் இயற்கையால் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதற்கு இசைவாக நாம் நடக்காது விட்டால்தான் பல தண்டனைகளை நாம் அடைகின்றோம். தொழில் ஸ்தானத்தில் பல் நன்மைகள் செய்தபடி இருப்பீர்கள். புதிய திட்டங்களைச் சிலர் எதிர்க்கத்தான் செய்வர். இந்த உலகத்தில் சில நல்ல ஆக்கங்களைச் செய்வது சுயநலம் மிக்கவர்களுக்குப் பிடிக்காது என்பது உங்களுக்குத் தெரியாததல்ல. நய, நஷ்டம் பார்த்தால் ஆக்கங்களை உருவாக்க முடியாது அல்லவா? இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். நெஞ்சுநோ, முதுகு—நாரி வலி, மூலநோ, வாய்வுத் தொல்லை என்பன கொடுக்க இடம் உண்டு. தெய்வத் தொண்டு தொடரட்டும். நல்ல உள்ளங்கள் போராடியபடியே இருக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன்.

கன்னி: மனிதர்களை மனிதர்கள் பழிவாங்குவதிலிருந்து மன்னித்து விலகிக் கொள்ள வேண்டும். அல்லது அமைதியாக இருக்க முயல வேண்டும். அதனாலேயே நாம் ஓரளவு தப்பிக் கொள்ளலாம். எல்லோரையும் எதிர்க்கவோ, கோபிக்கவோ முடியாது. அவரவர் புத்திசாலித்தனமாக நடந்து கொள்வதனால் மற்றவர்களின் ஆதரவுகள் இருக்கும். தொழில் ஸ்தானத்தில் போட்டிகள் வரலாம். குடும்பஸ்தானத்தில் கலக்கம் ஒன்று ஏற்படலாம். பெரியவர்கள், நல்லவர்களின் உதவிகளால் சமாளித்துக் கொள்ளுங்கள். வரும்

# ஜோதிட சஞ்சீவி

வெளிநாட்டுச் செய்திகளால் மகிழ்ச்சி அடைவீர்கள். சிரித்துப் பேசிக் கழுத்தறுக்கும் சயமைத்தனம் மிக்க பலர் உங்கள் பக்கத்தில் இருக்கின்றார்கள். நிதானமாக நீங்களும் சிரித்துப்பேசி விலகிக் கொள்ளுங்கள். படபடப்பு, கைகால் விறைப்பு, நரம்புச் சோர்வு, சளித் தொல்லை, மூட்டுவலி, இடுப்புவலி, வாத உளைவு என வருத்த இடம் உண்டு. எல்லாவற்றையும் வேதனையுடன் அனுபவித்து மௌனமாகச் சாதனை படைப்பீர்கள். உலகவியலில் பதவி, பணம் என்பன எப்பொழுதும் போட்டி போட்டபடிதான் இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன், வெள்ளி.

துலாம்: மனித உணர்வுகள் அடங்குமட்டும் எவ்வளவு அகம்பாவச் செயற்பாடுகள் மலிகின்றன எனச் சிந்திக்கிறீர்களா? அடிக்கடி கோபிக்காமல் குடும்பத்தினருக்கு உதவிகள் செய்யுங்கள். தொழில் ஸ்தானத்தில் மனச் சஞ்சலங்கள் ஏற்பட்டுப் பொருள் செலவுகள் கொடுக்கும். எதிர்ப்பாலார்கள் எறிந்து பேசி வேதனை தருவார்கள். தலைவலி, தோல் வியாதி, நாரிவிறைப்பு—கைகால் உளைவு, வாய்வுத் தொல்லை என்பன அடிக்கடி கொடுக்கும். வருங்கால யாத்திரைக்கு சில திட்டங்கள் தீட்டுவீர்கள். நிதானமாகச் செயற்படுங்கள். சொல்வாக்கு செல்வாக்குத் தரும். உதயத்துச் செவ்வாய் சிலருக்கு விட்டு விட்டு உபத்திரவங்களைத் தர இடம் உண்டு. எண்ணக் கருக்கள் வண்ணக் கோலமிட்டு அலை அலையாகக் கற்பனைகள் அலைமோத, திட்டமிட்டுச் செயற்பட, திட்டங்களைத் தீட்டி செயற்படுத்துவீர்கள். அதனால் புகழும் வரும். பொருளும் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, வியாழன், வெள்ளி.

விருச்சிகம்: பலருக்கு இறப்பு வரும் பொழுதுதான் ஞானம் வரும். ஆனால் உங்களுக்கு முன்கூட்டியே ஞானம் வந்து விடும்போல் இருக்கின்றது. உலகத்தவர் தரும் துன்பத்தினாலா அல்லது குடும்பத்தினராலா மனம் வெறுப்படைகிறீர்களா? உங்கள் இராசியை குரு 9 ஆம் பார்வையாகப் பார்ப்பதனால் பல நன்மைகள் ஏற்பட்டபடி இருக்கும். பெரியவர்களின் கருணைப் பார்வையால் பல நன்மைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மனச் சஞ்சலங்கள் தேடி வரும். பொருள் இழப்புக்கள் இடைக்கிடையே வர இடமுண்டு. பொருளுக்காகப் போராடிப் போராடித் தேயும் இவ்வுலகில் இலட்சியத்துக்காக உறுதியுடன் முன்னேறிச் செல்லும் உங்களைப் போன்றவர்களைக் காண்பது அருமைதான். கிருமித் தாக்கம், இரத்த நோய்கள், வயிற்று வருத்தங்கள், அடிகாயங்கள், உஷ்ணபீடைகள் என்பன கொடுக்கலாம். வைத்தியம் செய்யவும்.

அதிர்ஷ்ட நாள்: வியாழன், வெள்ளி.

தனுசு: கண்ட கண்ட பொருட்களுக்கெல்லாம் ஆசைப்பட்டு பொருள் விரயம் செய்வதனால் உங்களுக்குப் பலவிதமாக கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆசைகள் கூடத் தேவைகள் பெருக, துன்பங்கள் மலியும், எனவே எதற்கும் நிதானமாகச் செயற்படுவது புத்திசாலித்தனமாகும். தொழில் ஸ்தானத்தில் படபடத்தபடி இருக்கிறீர்களே? இது ஏன்? பொருள், பொருள் என அலைவதனால் என்ன பயன்? பொருள் தேடுவதற்கு உறுதியான திட்டம், அறிவு (கல்வி)த் தேர்ச்சி இருக்க வேண்டும். உங்களிடம் முயற்சிக்கு ஏற்ப ஆற்றல் இருக்கின்றதை எல்லோரும் அறிவார்கள். நெஞ்சு வலி, வாய்வுத்தொல்லை, உஷ்ண பீடைகள், வாத உளைவு என்பன இருக்கும். வீடு மனையில் வாகனம் சம்பந்தமாக மாற்றங்கள், செலவுகள் ஏற்படும்.

★ அதிர்ஷ்டநாள்: திங்கள், வெள்ளி.

மகரம்: ஞானகாரகனான கேது உதயத்திலிருந்து போககாரகனானஇராகுவால்பார்க்கப்படுகிறான். வாக்குச் சாதுரியத்தால் காரியங்களைச் செயற்படுத்தயோசிக்கிறீர்கள். ஆனால் அவமானப்பட இடம் உண்டு. பொறுமையாக இருக்கவும். உணர்ச்சிவசப்படுவதனால் எதுவும் நடந்து விடாது. தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். பலவித மாற்றங்கள் ஏற்படலாம். அதிக லீவு எடுக்காது இருக்கவும். சிறுகாயங்கள்,

# மகாதேவா ஜோதிடம்

வயிற்றுப் பொருமல், மனக் குழப்பங்கள், மூட்டு வருத்தங்கள், முழங்கால்பிடிப்பு, நெஞ்செரிவு, உஷ்ண—வாதபீடைகளால் வருந்த இடமுண்டு. துக்கச் செய்திகள் வரவும் இடம் உண்டு. தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, திங்கள், வெள்ளி.

கும்பம்: அறிவுக்கிரகம் புதன்; அழகுக்கதிபதி வெள்ளி; ஆற்றல் கிரகம் சூரியன்; மூவரும் உதயத்தில் இருக்கின்றார்கள். உங்கள் அறிவு, அழகால் ஆற்றல் கொண்டு எதையும் சாதித்துக் கொள்ள எண்ணுகிறீர்கள். அதில் தப்பில்லையே. சந்தர்ப்பத்துக்கு ஏற்பசெயற்பட்டு வெற்றியடையுங்கள். சுற்றச்சூழலை அழகுபடுத்தி வைத்திருங்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். எதையும் துருவித் துருவி ஆராயும் மனத்துணிவும் ஏற்படச் செய்யும். தொழில் ஸ்தானத்தில் நல்ல பலாபலன்களை எதிர்பார்க்க முடியாது. ஏட்டிக்குப் போட்டியான சம்பவங்கள் நடக்கும் பலாபலன்கள் காணப்படுகின்றன. நண்பர்கள், அயலவர்கள் உதவுவார்கள். நரம்புச் சோர்வு, நெஞ்சுப்படபடப்பு, வாய்வு—வாதஉளைவுகள் கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஆலயம் சென்று வாருங்கள். பல நன்மைகள் ஏற்பட்டபடி இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

மீனம்: இரவும் — பகலும் மாறிமாறி வரும் உங்கள் வாழ்வில் புத்திரகாரனான வியாழனும்—ஆயுள் காரகனான சனீஸ்வரனும் சேர்ந்து இருக்கிறார்கள். புத்திரர்களுக்காக அதிக பொருள்

(XII ஆம் பக்கம் பார்க்க)

# குறள் வெள்ளம்

### செய்ந்நன்றியறிதல்

மற்றவருக்கு மனிதாபிமானம் கருதி உதவி செய்யும் பண்பு அருகி நிற்கிறது. செய்த உதவி உபத்திரவமாக மாறி தலை வலியைத் தரும் பொல்லாத காலமும் இது.

யாருக்கு, எப்படி உதவுவது? முன்பு கை கொடுத்தவருக்கே துன்ப துயரம் வரும் போது பார்க்காமல் போகும் மனிதர்கள் நிறைந்த உலகமிது.

சிலருக்குப் பிடிக்காதவர்களிடம் கூட உதவி பெற்றுக் கடமைப்பட்டு விட வேண்டிய இக்கட்டான நிலைமைகள் எழுந்து விடுவதுண்டு. இச்சங்கடத்திலிருந்து விடுபட அவருக்கு எப்போது இடைஞ்சல் வரும் —உதவித் தீர்த்துவிடலாம் எனக் காத்திருக்க வேண்டிய நிலைமை.

எனக்கு இன்ன சந்தர்ப்பத்தில் இவ்வளவு கொடுத்தார். அவருக்குக் கொஞ்சம் கூட்டிக் கொடுத்துக் கடமையைக் கழித்து விடலாம் எனக் கருதல் வேண்டா.

செய்த உதவி செய்ததுதான். பட்ட கடன் பட்டதுதான். ஏற்கனவே ஏதும் கடமைப்பட்டிராமல் மனம் வைத்து ஒருவர் உனக்குச் செய்த — பயன் கருதாத உதவி — செய்யாமல் — நீர் உதவி ஏதும் செய்யாமலிருக்கும் போது — அடுத்தவர் செய்த உதவி மிகப் பெரியது.

பதிலுக்கு வையகத்துச் செல்வமெல்லாம் கொட்டிக் கொடுத்தாலும் — வானகத்து இன்பமெல்லாம் அனுபவிக்கக் கொடுத்தாலும் அதற்கு ஈடாகாது.

செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றலரிது. — *101.*

— அம்பிகைபாகன் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ஜேசு நூலகம்.

# கலப்படம்

அரிசியிலோ கலக்கின்றார் கல்லு
ஆறுமோ மனமிதுவே சொல்லு?
மிளகினிலோ பப்பாசி வித்து
மீறுமிவர்க்கோ பணத்தினிலே பற்று!
தூளினிலோ செந்நிறமாய் மாவு
தூயபொருள் இங்குதான் ஏது?
பாலினிலோ நீருக்குண்டு பங்கு
பாவியிவர் பாவமெல்லாம் எங்கு?
முழுவதுமே கலப்படம்தான் என்று
மூடையாய்ச் சுமக்கின்றார் இன்று!
மெச்சுவாரே தம் திறமை கண்டு
மேலுலகில் தீர்ப்பொன்று உண்டு!

— சி. சிவா —

# விளையாட வருவாயா?

வெண்ணிலவே நீ யிறங்கி
விளையாட வருவாயா...?
கடலோரம் நண்டெல்லாம்
கனிவோடு விளையாடும்
காகங்கள் கரைந்தொன்றாய்
கதை சொல்லி விளையாடும்
கருங்குயிலோடு மயில் சேர்ந்து
கவி பாடி விளையாடும்
மலர் மீது வண்டெல்லாம்
தேனுண்டு விளையாடும்
மழையோடு மேகங்கள்
தினம் கொஞ்சி விளையாடும்
நதியோரம் இளந் தென்றல்
பண்பாடி விளையாடும்
பூனை நாய்களெல்லாம்
அன்போடு விளையாடும்
விலங்கு பறவையெல்லாம்
விளையாட நான் கண்டேன்
என்னோடு விளையாட
இவ்வுலகில் யாருமில்லை!

— செ. ரமேஷ் —

# நிலவிற்கு நிகரானவள்

கார்மேகம் குழலானவள் — என்
கவிதைக்குப் பொருளானவள்
பார்போற்றும் தமிழானவள் — பைங்
கிளியதன் நிறமானவள்.

தேனுக்கு சுவையானவள் — தென்றல்
காற்றுக்கு நடையானவள்
மானுக்கு விழியானவள் — வண்ண
மயிலுக்கு உடலானவள்.

குழவிக்கு சிரிப்பானவள் — கூவும்
குயிலுக்கு மொழியானவள்
மலருக்கு மகளானவள் — வான்
நிலவிற்கு நிகரானவள்.

வீணைக்கு இசையானவள் — விடியும்
பொழுதிற்கு ஒளியானவள்
ஆணைக்குப் பணிவானவள் — ஆசை
தோன்றிடத் துணையானவள்.

கடலுக்கு அலையானவள் — காதல்
கலைக்கே உருவானவள்
உடலுக்கு உயிரானவள் — என்
உணர்விற்கு ஊற்றானவள்.

சுருதிக்கு ஸ்வரமானவள் — வாச
மலருக்கு இதழானவள்
விண்ணுக்கு முகிலானவள் – தண்
நீருக்குள் குளிரானவள்.

— தர்ப்பனா சிறிமகாதேவன் —

# வெளிநாட்டான்

பூத்திருந்தாள் எனக்காக
பார்த்திருந்தேன் அவளுக்காக
காத்திருந்த வேளையிலே
நே(ற்)த்து வந்த வெளிநாட்டான்
தூக்கிக் கொண்டு போட்டான் — என்னை
தாக்கி விட்டு போட்டான்
பாக்கியிருந்த பாசமெல்லாம்
சாக்கிலள்ளி முடிஞ்சு கொண்டு
சப்தமின்றி வெளிக்கிட்டாள்
சிற்றிசனாம் சிம்மாசனமாம்
சீதனமும் கொஞ்சம் தானாம்

சிவந்த அந்த மாப்பிள்ளைக்கு
கழுத்தில் நீளச் சங்கிலியாம்
கையில் கைச் சங்கிலியாம்
ஊற வைத்த கடலையைப் போல்
ஊதி அவன் நிற்கிறான்
நாறி மணக்கும் 'சென்ற்'றது
நாலு திக்கும் அடிக்குதாம்

படித்தேன் அன்று பல்கலைக்கழகம்
வடித்தாள் அவள் கடிதம் பல
கொடுத்தாள் இன்றும் கடிதம் ஒன்று
விடுத்தேன் உன் உறவினை என்று

காதல் ஒரு பொழுது போக்கு — இந்த
கன்னியர்கள் உலகத்திற்கு — அந்த
காதலை நீ அழுது போக்கு
காலமெல்லாம் ஆண் இனமே!

— எஸ். கவிதா —

# - இணைப்பும் தீர்வும் -

அரசியல்வாதிகளும் அள்ளி வழங்கும் வாக்குறுதிகளும்
ஆட்சிக் கட்டிலும் அளித்த வாக்கு மீறல்களும்
அரசாளும் அமைப்பும் அயல்நாட்டுக் கடன்களும்
ஆயுதப் போர்முறையும் அரசியல் தீர்வுகளும்
மதபீடத் தலைகளும் மக்களாட்சித் தலைமையும்
மாண்புறு அரசும் இராணுவ மேலாதிக்கமும்
மிதவாதத் தமிழரும் ஆட்சியில் கண்ணான கட்சிகளும்
மிகையான போர்ச் செலவும் மிடுக்கான பட்ஜெட்டும்
ஏற்புடைய ஆலோசனையும் எதிர்க்கட்சிச் சாதுரியமும்
இலங்கைப் பேரினமும் இனவாதச் சிந்தனையும்!
இவற்றைக் கருதியன்றோ தமிழர் தனிவழிதேடி
தமக்குள் திருந்திடல் நன்றென உணர்வோம்.

— விஷ்ணுபிரியா —

# அன்பே அன்பே கொல்லாதே

(ஜி. சி. ஈ (உயர்தர) பெறுபேறுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் ஒரு மாணவன் ''அன்பே! அன்பே!! கொல்லாதே'' என்ற சினிமாப் பாடல் மெட்டில் பாடுவதாக அமைந்த கவிதை இது.)

அன்பே அன்பே கொல்லாதே
என்னை பெயிலெண்டு சொல்லாதே
நீயே உன்னிலிருந்து என்னைப் பிரிக்காதே
இல்லை எனச் சொல்லி என்னை வதைக்காதே
(அன்பே ...)

'றிசல்ட்டே' உனது புன்னகை பார்ப்பேன்
நீதான் எனது செல்வமடி
என்னுடன் உன்னைச் சேர்க்கின்றபோது
நான் தான் உலகில் வள்ளலடி
வானம் என்று உவமானம் செய்வேன்
சூரியன் எழுதிய கவிதையடி
புத்தக வடிவில் உன்னைச் செதுக்கி
மாணவர் செய்த உருவமடி
இதுவரை இங்கு வந்த றிசல்ட்டில்
நீதான் பெண்ணே அழகியடி
'கட்டவுட் மாக்கில்' உள்ளடங்காமல்
வந்துவிட்டால் அது கொடுமையடி
(அன்பே......)

ஊர் ஊராய்ச் சென்று உன்னைச் சொல்லி
புளுகியடித்து நான் திரிவேன்
ஊரவர் என்னைப் 'பாஸ்' என அறிந்தால்
'உதயன்' பேப்பரில் நான் வருவேன்
நிலா ஒளி சேர்த்து மேனியெங்கும் நான்
வெளிச்சம்போல உணர்ந்துகொள்வேன்
வார்த்தைக்கு வார்த்தை உன்பெயர் சொல்ல
கருணை செய்வாய் காதலியே
பல்கலைக் கழகத்துள் நடைபயில
நீதான் எனக்குத் தேவையடி
இத்தனை எண்ணங்கள் உள்ளத்தில் இருக்கு
என்னுயிர் தருவாய் தேவதையே
(அன்பே......)

— அ. சூரியன் —

# எது கவிதை

கருப் பொருள் எதையும் உருப் பொருளாக்கக்
கவர்ச்சியிற் குழைப்பவர் கவிஞர் — அவரது
விருப்புறு கற்பனை, சொல்பொருள் யாப்பணி
வேலியுள் அமைவது கவிதை!

இலக்கியப் பாக்கள் இலட்சண மாகிடும்
இசைவினைத் தருவது ஓசை — பாவில்
அலங்கார உவமை முதலாய அணிகள்
அகத்தே இனித்திடுங் கனிகள்!

மனித வாழ்க்கையில் மாபெரும் பங்கினர்
மங்கையர் என்பது யதார்த்தம் — அந்தப்
புனித வனிதையர் பொற்பையும் பண்பையும்
புகழ்ந்து பாடுதல் தவறோ?

பட்டுக் கோட்டையின் தத்துவப் பாடல்கள்
பாரதி பல்வகை பாடல்கள் — அனைத்தும்
கட்டுக்கடங்கிய ஓசை ஒழுங்கினில்
கவித்துவம் பெற்றன சிறந்தே!

இழவில் அழுதிடும் பெண் கூட
இசையோ டழுவது கண்கூடு — அந்தப்
பழைமை அமைப்பில் உதித்திடும் கவிதைகள்
பல்லாண்டு காலம் வாழும்

உரைவீச் செல்லாம் கவிதை ஆகிடில்
உரைநடைக் குறைவிடம் எங்கே? — அது
நரைதிரை மூப்பில் நம்மைவிட்டகன்று
நமனுல கெய்தி மறையும்

சொன்னதைச் செய்கின்ற செய்வதைச் சொல்கின்ற
சூக்கும நேர்மையர் சிலரே — ஆனால்
தன்னநல ஆசையில் தப்பிதம் செய்வோர்
தரணியில் மிகமிகப் பலரே

கவிதைச் சொல்லில் முதலெழுத் தகன்றால்
கமத்தினில் போடும் ''விதை'' வருமே
கவிதைச் சொல்லில் நடுவெழுத் தகன்றால்
கற்பனை உலகின் ''கதை'' வருமே

கவித்துவ உணர்வின் கற்பனைப் போக்கின்
கற்பகப் பொருளே கவிதை — அது
புவித்துவ மனிதம் போற்றிடும் பண்பைப்
பொலித்து வழுமே இதம்

— க. கிருஷ்ணபிள்ளை —

# உலகினைக் காட்டி வைப்பேன்!

இத்தனை நாளாய் அத்தான்
இனியநற் கனியாம் என்தன்
உத்தமி உனைம றந்தே
ஒதுங்கிய தறியா யோநீ
நித்திரை எனினும் என்தன்
நெஞ்சினில் உறைகின் றாயே
ஒத்திடில் உனக்கே இன்ப
உலகினைக் கட்டி வைப்பேன்!

இன்னரு நலன்கள் தந்தே
இவண்விடுத் தேகி னையே
கன்னலை நிகர்த்த தூய
கன்னியர் திலக மேநீ
என்னிலை உணர இன்னும்
இதயமே இணங்க லையோ
உன்னிலை உணர்ந்து நித்தம்
உறுதுயர் கொள்ளு கின்றேன்!

தோல்வியைக் காட்டி விட்டு
தொடர்ந்தெனைப் பகைத்து விட்ட
வேல்விழி மாதே உந்தன்
வேதனை அறிவேன் கண்ணே
ஆல்புரை தழைக்கும் வாழ்வு
அழிந்திடக் கருதல் நன்றோ
நூல்வலார் புகழ்ந்து ரைக்கும்
நுவலரும் அழகின் மிக்கோய்!

நேர்த்தியை இயற்று விக்க
நினைந்து நான் இருந்தேன்முன்னர்
கார்த்திகைத் திங்கள் என்தன்
கனிவுடை அன்னை யாராம்
கார்த்திகா திவசம் செய்யக்
காத்துநான் இருந்தேன் பின்னர்
ஏர்தரு மலரே தேனே
இங்குவந் துறாத தேனோ'

பாலெர்டு பழங்கள் தந்து
பரிவுடன் அன்னம் ஊட்டி
வேலொடு பொருதி வென்ற
விழியினாய் அன்பு செய்து
நூலொடு பழகும் என்னை
நொந்திடச் செய்து விட்டு
மாலொடு வாழும் இந்த
மர்மமேன் அறியேன் அம்ம!

பொன்னினை நிகர்த்த உன்தன்
பொலிவுறு தோற்றம் எங்கே
என்னிலை உணரா உந்தன்
இனிதுறு இதயம் எங்கே
இன்னிசை நிகர்த்த உன்தன்
இழிவகல் மொழிகள் எங்கே
கன்னிமை கழியா உன்தன்
கனிவுறு காலம் எங்கே!

என்னைநீ அறிவாய் என்றாய்
இன்பமே நீயே என்றேன்
உன்னைநான் அறிவேன் என்றேன
உலகமே நீயே என்றாய்
பொன்னையே பழிக்கும் நல்ல
புனிதையே புகன்ற எல்லாம்
அன்னையே நிகர்த்த தூயோய்
அகன்றதோ உளத்தை நீத்து!

வெறுப்புடன் இருக்கின் றாயோ
வேதனை உறுகின் றாயோ
அறுசுவை உண்டி நீத்தே
அகதியாய் வாழ்கின்றாயோ
செறுநரைச் சார்பு குந்தே
செயலிழந் திருக்கின் றாயோ
உறுவதை உணரா தென்றும்
உருக்குலைந் துழல்கின் றாயோ!

வீட்டினில் இருக்கின் றாயோ
வெளியினில் சென்றிட் டாயோ
நாட்டவர் நகைப்பர் என்று
நாணியே மறைகின் றாயோ
நாட்டமற் றெதிலும் நீயே
நலிவுற வாழ்கின் றாயோ
கேட்பவர்க் கென்சொல் வாயே
கிளர்விழிப் பாவை நல்லாய்!

(ஆல்புரை-ஆல்போல்; மால்-மயக்கம்; கிளர்-ஒளி)

—பொலிகை ச. திருப்பதி—

கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடுப்பாட்டம் அன்றும் இன்றும்

3

சேர் டொனால்ட் பிரட்மன்!

தற்கால இரசிகர்கள் பலருக்கு அதிகம் பரிச்சயமில்லாத—ஆனால் துடுப்பாட்ட உலகினால் என்றுமே மறக்க முடியாதபெயர்இது. கடந்த ஆண்டிற் கொண்டாடப்பட்ட இவரது பிறந்த நாள் விழா காரணமாக இப் பெயர் ஓரளவு காதுகளில் அடிபட்டாலும் இவர் பற்றித் தற்கால இரசிகர்களுக்கு அதிகம் தெரியாது என்பதில் வியப்பில்லை.

ஏனெனில் இவர் தன் கடைசி ரெஸ்ற் பந்தயத்தை விளையாடி ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

1948 இல் நடந்த ஆஸ்திரேலிய—இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரின் ஐந்தாவது ரெஸ்ற் ஆட்டந்தான் பிரட்மனின் இறுதி ரெஸ்ற் ஆட்டம். தன் இறுதி இனிங்ஸில் பிரட்மனுக்குத் தேவைப்பட்டது எல்லாம் 4 ஓட்டங்கள் தான். ஆனால் அந்தோ பரிதாபம்! சுழற் பந்தாளர் எரிக் ஹோலிஸ் வீசிய பந்தில் பிரட்மன் ஓட்டமேதும் பெறாமல் ஆட்டமிழந்தார்.



துடுப்பு மட்டையுடன் பிரட்மன்

அவரது 20 வருடகால ரெஸ்ற் வாழ்வில் ஓட்டமேதும் பெறாமல் அவர் ஆட்டமிழந்தது அது ஆறாவது தடவை.

ஆனால் அன்று அவர் நான்கே நான்கு ஓட்டங்கள் பெற்றிருந்தால்—

அவரது ஓட்ட எண்ணிக்கை ஏழாயிரத்தையும் ஓட்டச் சராசரி நூறையும் எட்டியிருக்கும். பிரட்மன் இருபது வருடங்களில் 52 ரெஸ்ற்களில் 10 ஆட்டமிழக்காத இனிங்ஸுகள் உட்பட 80 இனிங்ஸுகளில் ஆடி 6996 ஓட்டங்களை 99. 94 என்ற சராசரியுடன் பெற்றார். அந்த ஓட்ட எண்ணிக்கையில் 29 சதங்களும் 13 அரைச் சதங்களும் அடங்கியிருந்தன. 32 'கட்ச்' களைப் பிடித்தவரான பிரட்மனது அதி கூடிய ரெஸ்ற் ஓட்ட எண்ணிக்கை 334 ஆகும். இது ஓர் ஆஸ்திரேலிய சாதனை என்பது குறிப்பிடத் தக்கது.

**01 . 01 . 1999 இல் டெண்டுல்கர்**

| | |
|---|---|
| **ரெஸ்ற்கள்:** | 63 |
| ஓட்டங்கள்: | 4753 |
| சதங்கள்: | 17 |
| 50கள்: | 19 |
| சராசரி: | 54.63 |
| **ஒருநாள் போட்டிகள்:** | 207 |
| இனிங்ஸ்கள்: | 200 |
| ஓட்டங்கள்: | 7, 728 |
| சதங்கள்: | 21 |
| 50கள்: | 43 |
| சராசரி: | 42.93 |

1908 ஒகஸ்ற் 27 இல் டொனால்ட் பிரட்மன் பிறந்த போது அவரது பெற்றோர் இந்தப் பிள்ளை பின்னாளிற் தன் துடுப்பாட்டத் திறமைக்காக 'Sir' பட்டம் பெறும் என்று கனவிலும் நினைத்திருக்கமாட்டார்கள். 20 வருடங்களின் பின் 1928 இல் பிரட்மன் ஆஸ்திரேலிய அணிக்காக ஆடத் தொடங்கினார். 1928 — 29 போட்டித் தொடரின் இரண்டாவது ரெஸ்ற்றில் இங்கிலாந்துக்கு எதிராக மெல்பேணில் தன் முதற் சதமான 112 ஓட்டங்களைப் பெற்றார். தன் ஆறாவது, ஏழாவது ரெஸ்ற்களில் 254, 334 ஓட்டங்கள் பெற்றார். இதன் மூலம் தன் ஏழாவது ரெஸ்ற்றிலேயே முதல் 1000 ஓட்டங்களை இவர் பெற்றுக் கொண்டமை ஓர் உலக சாதனை ஆகும்.

ஒவ்வொரு ரெஸ்ற்றிலும் பெற்ற சராசரிஓட்ட எண்ணிக்கை(134.53), சிறந்த சராசரி (99.94), ஒவ்வொரு சதத்திற்கும் எடுத்துக் கொண்ட குறைந்த இனிங்ஸ் எண்ணிக்கை (2. 75) போன்றன எக் காலத்திலும் முறியடிப்பதென்பது அரிதிலும் அரிதானபிரட்மனின்சாதனைகள் ஆகும்.

உண்மையில் பிரட்மனுக்கு

## மங்காப் புகழ் படைத்த கங்காரு நாட்டான்

பிரட்மன் 1934 இல் ஹெடிங்லேயில் இங்கிலாந்திற் கெதிராகப் பெற்ற 304 அவரது இரண்டாவது முறையான முச்சதமாகும். இதுவரை ஒன்றுக்கு மேற்பட்ட ரெஸ்ற் முச்சதங்களைப் பெற்ற ஒரேயொரு துடுப்பாளர் பிரட்மன்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் மூன்று முச்சதங்களைப் பெற்றிருக்க வேண்டியவரெனினும் அதனை ஓர் ஓட்டத்தினாற் தவற விட்டிருக்கிறார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக அடலெய்ட் மைதானத்தில் நடந்த போட்டியில் பிரட்மன் 299 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். ஆனால் அணி ஆட்டமிழந்து விட்டது.

ரெஸ்ற் போட்டிகளில் இரு முச்சதங்களையும் 10 இரட்டைச் சதங்களையும் பெற்றவரான பிரட்மனின் மாபெரும் சாதனை அவரது ஓட்டச் சராசரிதான். அவரது ஓட்ட எண்ணிக்கையினைப் பலர் தாண்டி விட்டனர். ஆனால் அவரது ஓட்டச் சராசரியான 99. 94 என்பதனை எவராலும் கனவிற் கூட நினைத்துப் பார்க்க முடியவில்லை. ரெஸ்ற் போட்டிகளில் பத்தாயிரத்துக்கும் அதிகமாக ஓட்டங்களைக் குவித்த அலன் போடர், சுனில் கவாஸ்கர் போன்றோரது சராசரி ஏறத்தாழ 51 தான். ஏன்? இன்று முன்னணித் துடுப்பாளராகத் திகழும் டெண்டுல்கரின் சராசரியே வெறும் 55 தான்.

பிரட்மனது காலத்தில் சிறந்த பந்தாளர்கள் இல்லை. அதனாற்தான் அவர் இவ்வாறு அற்புதமாக ஓட்டங்களைப் பெற்றார் என்று சில இளையவர்கள் கருதுவது தவறானது. பிரட்மன் காலத்தவரான இங்கிலாந்தின் மிகச் சிறந்த துடுப்பாளரான வாலி ஹாம்மொண்டின் சராசரி கூட 58 தான்.

**பிரபலங்களின் பிறந்த திகதிகள்**

| | |
|---|---|
| சச்சின் டெண்டுல்கர் | 24-04-1973 |
| பிறயன் லாறா | 02-05-1969 |
| மார்க் வோ | 02-06-1965 |
| அரவிந்த டி சில்வா | 17-10-1965 |
| அர்ஜுனா ரணதுங்கா | 01-12-1963 |
| சனத் ஜெயசூரியா | 30-06-1969 |
| மார்க் ரெய்லர் | 27-10-1964 |
| மொகமட் அஸாருதீன் | 08-02-1963 |

### முதற்றர ஆட்டங்களில்...

பிரட்மன் முதற்றரத் துடுப்பாட்டங்களில் 43 ஆட்டமிழக்காத இனிங்ஸ்கள் உட்பட 338 இனிங்ஸ்களில் ஆடி 28 ஆயிரத்து 67 ஓட்டங்களை 95. 14 என்ற சராசரியுடன் பெற்றார். இந்த எண்ணிக்கையில் 117 சதங்களும் அடங்கியுள்ளன. முதற்றரத் துடுப்பாட்டத்தில் 37 தடவைகள் இருநூறுக்கும் அதிக ஓட்டங்கள் பெற்ற பிரட்மனின் அதி கூடிய ஓட்ட எண்ணிக்கை 452ஆகும். பிரட்மன் 1929 — 30 காலத்தில் நியூ சவுத் வேல்ஸ் அணி சார்பாக குயீன்ஸ்லாண்ட் அணிக்கெதிராக சிட்னியில் ஆட்டமிழக்காமல் 452 ஓட்டங்களைப் பெற்றார்.

இனி மீண்டும் பிரட்மனது ரெஸ்ற் ஆட்டங்களை நோக்கினால்...

பிரட்மன் ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடிய காலத்தில் அவர் சதம் அடிக்காமல் நான்கே நான்கு பந்தயங்களில்தான் ஆஸ்திரேலியா வென்றிருக்கிறது. ஏனைய வெற்றிகளெல்லாம் பிரட்மனின் சதங்கள் கைகொடுத்திருக்கின்றன. மேலும் பிரட்மன் அணித் தலைவராக ஆடிய ஐந்து பந்தயத் தொடர்களிலும் ஒரு முறை கூடத் தொடரைக் (Rubber) கோட்டை விட்டதில்லை.

இணையானவர் என்று எந்தவொரு துடுப்பாளரையுமே கூறமுடியாது தான். எனினும் காலத்திற்குக் காலம் இந்தியாவின் பிரட்மன், பம்பாயின் பிரட்மன், கறுத்த பிரட்மன் எனப் பலர் பிரட்மனுக்கு இணையானவர்களெனக் கூறப்பட்டுள்ளனர். ஆனால் அவ்வாறு கூறப்பட்டவர்களே அவ்வாறு கூறுவதைப் பெருந்தவறாகக் கண்டார்கள் என்பது வேறு விடயம்.

**- கோபி -**

அவ்வகையில் கடந்த ஆண்டில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் வோ (ஒரு நாள் போட்டிகளிற் தலைவர்) இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கரை பிரட்மனுக்கு இணையானவர் என்று சிறப்பித்துக் கூறினார்.

சச்சினை பிரட்மனுடன் ஒப்பிடுவதனை விடுத்து தற்கால வீரர்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்...

பிறயன் லாறா, மார்க் வோ, அரவிந்த டி சில்வா எனப் பல சிறந்த வீரர்கள் இருந்தாலும் சச்சின் டெண்டுல்கரின் சிறப்பம்சம் அவரது வயதுதான்.

### குறைந்த வயதில் நிறைந்த அனுபவம்

சுமார் 9 வருட சர்வதேச துடுப்பாட்ட அனுபவங் கொண்ட சச்சின் டெண்டுல்கருக்கு இப்போது வயது 25 தான். 1989 இல் பாகிஸ்தானுக்கெதிராகத் தன் முதற்ரெஸ்றில்ஆடிய போது இவரது வயது 16 ஆண்டுகளும் 201 நாட்களும் மட்டுமே. இதன் மூலம் ரெஸ்ற்றில் ஆடிய வயதிற் குறைந்த இந்தியர் என்ற பெருமை பெற்ற டெண்டுல்கருக்கு மேலும் 36 நாள்களில் ஒருநாள் போட்டியொன்றில் ஆடும் சாதனைக்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

1990 இல் மான்செஸ்ரரில் இங்கிலாந்திற்கெதிராகத் தன் முதற் ரெஸ்ற் சதத்தைப் பெற்றபோது டெண்டுல்கருக்கு வயது 17 ஆண்டுகளும் 112 நாட்களும். இதுவும் ஓர் இந்தியச் சாதனையே ஆகும்.

இவ்வாறு மிக இளவயதிற் பல சாதனைகளைப் படைத்ததனால் அற்புதப் பையன் எனப்பட்ட டெண்டுல்கர் இப்போது இந்திய அணியின் நம்பிக்கை நட்சத்திரம். (99 தொடக்கத்தில்) சுமார் 21 ஒருநாள் சதங்களையும் 17 ரெஸ்ற் சதங்களையும் பெற்ற டெண்டுல்கர் மொத்தமாக அதிக சதங்களைப் பெற்றவர் (38) என்ற சாதனைக்குமுரியவர்.

1999 ஆரம்பத்தில் பாகிஸ்தானுக்கெதிராகச் சென்னையில் டெண்டுல்கர் பெற்ற 136 அவரது 18 ஆவது ரெஸ்ற் சதம் ஆகும். இதன் மூலம் ரெஸ்ற் சதம் பெற்ற இந்தியர் வரிசையில் மூன்றாமிடத்திற்கு இவர் முன்னேறியிருக்கிறார். சுனில் கவாஸ்கர் (34), மொகமட் அஸாருதீன் (21) வெங்சர்கார் (17) ஆகியோர் அதிக சதங்களைப் பெற்ற ஏனைய இந்திய வீரர்கள்.

09-09-1994 இல் கொழும்பில் தன் 78 ஆவது ஆட்டத்தில் (75 ஆவது இனிங்ஸ்) ஆஸ்திரேலியாவுக்கு எதிராகப் பெற்ற 110 ஓட்டங்கள்தான் டெண்டுல்கரின் முதல் ஒரு நாள் சதம். அதன் பின் அவராற் பெறப்பட்ட 20 ஒரு நாள் சதங்களில் 9 சதங்கள் 1998 இல் பெறப்பட்டவை!

### 98 என்ற பொன்னாண்டு

1998 இல் சச்சின் டெண்டுல்கர் ரெஸ்ற்களில் ஆடி 3 சதங்கள் உட்பட 647 ஓட்டங்களையும் (சராசரி 80,87), 34 ஒரு நாள் ஆட்டங்களில் ஆடி 9 சதங்கள், 7 அரைச் சதங்கள் உட்பட 1894 ஓட்டங்களையும் பெற்றார் என்பதிலிருந்து அவ்வாண்டு அவருக்கு எத்தகையதொரு சிறப்பான ஆண்டாக அமைந்தது என்பதனை ஊகிக்க முடிகிறது. 1998 இல் டெண்டுல்கரின் ஒரு நாள் சதங்கள் இலங்கை (128), கென்யா(100) ஸிம்பாப்வே (127, 118, 124), ஆஸ்திரேலியா (100, 142, 134, 141) ஆகிய நாடுகளுக்கெதிராகப் பெறப்பட்டன.

இது தவிர 7-7-98 இல் கங்குலியுடன் இணைந்து கொழும்பில் இலங்கைக்கெதிராக முதலாம் விக்கெட்டுக்கான இணைப்பு ஆட்டமாகப் பெற்ற 252 ஒரு சாதனை ஆகும். இதற்கு முன் முதலாம் விக்கெட்டுக்கான இணைப்பு ஓட்டச் சாதனை கென்யாவின் தீபக் சுடசாமா, கென்னடி ஒற்றியானோ ஆகியோர் இணைந்து பெற்ற 225 ஓட்டங்களாகவே இருந்தது.



பிரட்மன்

1998 இல் பாகிஸ்தானின் சாயிட் அன்வருடனான போட்டியிலும் டெண்டுல்கருக்கு வெற்றி கிடைத்தது. 1998 இன் ஆரம்பத்தில் ஒரு நாள் போட்டிகளில் டெண்டுல்கர் 12 சதங்களையும் அன்வர் 15 சதங்களையும் பெற்றிருந்தனர். இவர்களில் யார் முதலில் மேற்கிந்திய வீரர் டெஸ்மண்ட்ஹெயின்ஸின் 17சதங்கள் என்ற சாதனையை அடைவார் என்ற போட்டிதான் அது. டெண்டுல்கர் முந்திக்கொண்டு செப்ரெம்பரில் ஸிம்பாப்வேக்கு எதிராகப் பெற்ற 127 மூலம் ஹெயின்ஸின் சாதனையை முறியடித்தார்.

கடந்த ஆண்டில் டெஸ்மண்ட் ஹெயின்ஸியின் இன்னொரு சாதனையும் பறிபோனது.

### அஸாருதீனின் சாதனைகள்

இந்திய அணித் தலைவரான மொகமட் அஸாருதீனுக்கும் கடந்த ஆண்டு சிறப்பாகவே அமைந்தது. ஏனெனில் அதுவரை ஒரு நாள் போட்டிகளில் அதிக ஓட்ட எண்ணிக்கையாக இருந்த ஹெயின்ஸின் 8.648 என்பதனை அஸாருதீன் தாண்டினார். அதிக ஒரு நாள் போட்டிகளில் பங்கு பெற்றவர் என்ற பெருமையினை அலன் போடரைத் (273 போட்டிகள்) தாண்டிப் பெற்றதோடு 300 போட்டிகளில் ஆடிய

(XII ஆம் பக்கம் பார்க்க)



"வென்ற சந்தோஷத்தில், 'சாம்பியன் கப்' பைத் தூக்கிக் கொண்டு கப்டன் கிரவுண்டைச் சுற்றி ஓடுறார் பாருங்க!"

"யோவ்! அது கப்டன் இல்லேய்யா! எவனோ 'கப்' பைத் திருடிக் கொண்டு ஓடுறான்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

ஜெனா வீட்டைவிட்டு ஓடி விட்டான். அவன் ஒரு விசரன். நேற்றுப் பின்னேரம் அவன் வீட்டை திரும்பி வரவில்லை. எங்கடை அப்பா -- அது தான் என்ர இவர் -- அவருக்கும் சரியான கவலை. நாங்கள் ரெண்டு பேரும் ராத்திரி சாப்பிடவே இல்லை. நித்திரை கூட வரமாட்டன் எண்டுட்டுது.

ஜெனா கொஞ்சம் வளர்ந்த பெடியன்தான். ஆனாலும் இரவிலை தனியப் படுக்கப் பயம். அம்மாவோடைதான் படுக்க வேணும் எண்டு கத்துவான். அப்பா, இவன் கத்துகிறதை பார்த்துப்போட்டு எங்கடை பெட்றூமுக்குள்ளை ஒரு சிங்கிள் பெட்டைப் போட்டு படுக்க விட்டிருக் கின்றார். அவனுக்குப் படுக்கிறதுக்கு இரண்டு பில்லோக்கள் வேண்டும். அந்தப் பில்லோக்களைப் பார்த்து அப்பா ராத்திரி அழுதுவிட்டார். எனக்கோ சரியான கவலை. எனக்கு ஆறுதல் சொல்லாமல் அவர்தான் அழுகிறார். எனக்கு எப்படி இருக்கும்? ஆம்பிளையள் அழமாட்டினம் எண்டு சொல்லுறதெல்லாம் விசர்க் கதை. எனக்குக்கூடி இவ்வளவு கண்ணீர் வராது. விடியக் குளிச்சிட்டுத் தேத் தண்ணி குடிக்க வந்திருந்தார்.

இதற்கிடையில் உங்களுக்குச் செல்லம்மாவைத் தெரியுமே? எங்கடை வீட்டுக்கு கிட்டத்தான் இருக்கின்றவள். காலமை நேரத்தோடை வந்திடுவாள். சமையல் பாத்திரம், சாப்பிடுகிற பாத்திரம் எல்லாம் கழுவித் தருவாள். பிறகு முத்தம், வளவு எல்லாம் கூட்டி அள்ளிக் கொட்டுவாள்.

அவளுக்கும் என்ரை வயதுதான். ஆனால் என்னளவு வடிவில்லாதவள். என்ரை நிறம் செவ்விளநீர் நிறத்துக்கு சமன் எண்டு இவர் சொல்லுகிறவர். செல்லம்மா நாவல் பழத்தின்ரை நிறம். அவளின்ரை நாலாவது பிள்ளை நல்ல குண்டுப்பிள்ளை. கொஞ்சம் பொதுநிறம். தாய் வரேக்கை அவளையும் தூக்கிக் கொண்டு வருவாள்.

எங்கடை ஜெனாப்பிள்ளைக்கு அவளிலை நல்ல விருப்பம். ஆனால் அவளோடைசேர நான் விடுறேல்லை. கண்டதுகளோடையும் சேரவிட்டால் கெட்ட பழக்கந்தான் பழகுவான்.

நான் கதையை விட்டுட்டு வேறை என்னத்தையல்லோ அலம்புறன். எங்கை விட்டனான்?

**சு.சிவராசா**

மேசையிலை அப்பா வந்திருந்தார். தேத்தண்ணியை வைச்சன். அவர் அதை எடுத்துக் குடிக்கேல்லை. ஜெனாவின்ரை சில்வரைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஜெனா தனக் கெண்டு எல்லாம் புறம்பாய் வைச்சிருக்கின்றான். வேறை எதுக்குள்ளேயும் மாத்திக் குடுத்தா போச்சுது. கத்துகத் தெண்டு கத்துவான்.

காலமை அப்பா வடிவாய்ச் சாப் பிடவில்லை. ரெண்டு சிலைஸ் பாணை மட்டும் சாப்பிட்டார். இண்டைக்கு கந்தோருக்குப் போகாததால் எங்கையெண்டாலும் போய் ஜெனாவைப்பற்றி விசாரிக்கப் போறன் எண்டு சொன்னார். நான் ஒண்டும் பறையேல்லை. அவர் பிறகு வெளிக்கிட்டுக் கொண்டு போயிட்டார்.

செல்லம்மாவுக்கு வேலை ஒன்பது மணிக்குள்ளை முடிஞ்சுபோம். அவள் ஏதும் சாப்பாடு தண்டாமல் போக மாட்டாள். உந்தச் சனங்களோடை தொடுத்துக் கொண்டால் பெரிய கரைச்சல். வெக்கமில்லாமல் எல்லாம் கேக்குங்கள். பாவாடைதா, சீலைதா, உப்புத்தா,புளிதா எண்டு கேட்ட படிதான். என்ன செய்யிறது? இந்த நாளையிலை வேலைக்கு ஆட்களைப் பிடிக்கிறது பெரிய கஷ்டம். சும்மா வெளி வேலையள்தான் செய்விக் கிற னான். வீட்டுக்குள்ள விடுறேல்லை. உதுகள் பெரிய அரியண்டம். ஒரு சோப்பைக் கீப்பை வாங்கிக் குளிக் கவும் பஞ்சி. வெறும் சோம்பேறியள்.

பத்து மணியாச்சு. சமைக்கவேணு மெண்டு போனன். ஜெனாவின்ரை யோசினையால் சமைக்க மனமே யில்லை.

உங்களுக்குத் தெரியுமே கந்தையா கடை?

உந்த வாசிகசாலைக்கு அங்காலை கிடக்குது. அங்கைதான் மரக்கறியள் வாங்கப் போறனான். ஜெனா வீட்டிலை நிண்டானேயெண்டால் கடை யாலை வந்ததைக் கண்டதும் பாக் கைப் பிடிச்சு இழுத்துக் கத்துவான். கடலைப் பைக்கற் இப்பிடி என்னெண்டாலும் குடுக்க வேணும். இல்லாட்டி நிலத்தில விழுந்துகிடந்து கத்துவான். சமைக்கத்தானே வேணும். வயிறு என்று ஒண்டு இருக்குதெல்லே!

உலையை மூட்டுவம் எண்டு மூட்டினன். கேற்றிலை "அம்மா" எண்டு ஆரோ கூப்பிட்டுக் கேட்டுது. ஜெனா சின்னப் பெடியன்தானே. ஆரும் அவனைக் கண்டு கூட்டிக்கொண்டு வருகினமோ எண்டு அந்தப் பக்கமாக ஓடிப் போய்ப் பார்த்தேன். ஆரோ தண்டல்காரராம். கோயிலைச் சாட்டிக் கொண்டு கௌரவமாக சிலபேர் திரியினம். இப்ப உள்ளநாட்டுப் பிரச்சினைக்கை கோயில்கள் எங்கே நடக்குது? ஆனால் என்ன செய்யிறது? ஒண்டும் குடுக்காட்டி அடுத்தடுத்த வீடுகளுக்குப் போய் சொல்லிப் போடுங்கள். அதுக்காக ஏதும் குடுத்து அனுப்பி விடுகிறனான். அதுவும் ஒரு ரூபா, ரெண்டு ரூபா எண்டு குடுத்தா வேண்டாமெண்டெல்லே சொல்லு கினம். ஐஞ்சு இல்லாட்டி பத்து ரூபா குடுக்க வேணும். உப்பிடிவாறவை போறவை எல்லாருக்கும் விடை குடுத்துச் சமைச்சு முடிக்க ரெண்டு மணி செல்லும். இவரும் போயிடுவார். வேலையாலை வர பின்னேரம் அஞ்சு மணியாவது செல்லும். சிலநேரம் ஓவர் ரைம் செய்துபோட்டு வர ஆறு மணியும் செல்லும். என்ன செய்யிறது? இந்த நாளையிலை சிலவுகளுக்கு உப்பிடி ஓவர்ரைம் ஏதாவது செய்தால் தான் கட்டும்.

ஜெனாவையும் சேர்த்து மூண்டு பேர். எப்பிடியெண்டாலும் மாதம் ஐயாயிரத்துக்கு மேலை முடியுது. இதுக்கிடையிலை இவருக்கு ஒரு தங்கச்சிக்காறி இருக்கிறா. மாதத திலை எப்படியும் தமயனிட்டை நானூறு, ஐந்நூறு வாங்காமல் விட மாட்டாள். நான் அறிஞ்சால் பேசுவன் எண்டு தெரியும். எனக்குத் தெரியாமல் ஒளிச்சுக் குடுத்திடுவார். நாங்கள் உவையிட்டை போறமோ? உந்த மனிசன்ரை உழைப்பெல்லாம் உப் பிடித்தான் வீணாய்ப் போகுது. எங்களுக்குச் சுவறுவது அரைக்கரை வாசிதான்.

ஆரோ வாசலிலை பிறகும் கூப்பிடு கினம். "கௌரி" எண்டு என்ரை பேரைச்சொல்லிக் கூப்பிடுகினம். அது எங்கடை அம்மா. ஜெனா ஓடிப் போட்டான் எண்டு விசாரிக்க வந்தவ.

"என்ன கௌரி, ஜெனா ஓடிட் டானாம். உவன் உப்பிடிச் செய்வா னெண்டு கனவிலும் நினைக் கேல்லை.." எண்டா அம்மா.

"உங்களுக்குத் தெரியும்தானே அம்மா. உவன் சரியான குழப் படிக்காரப் பெடியன்தானே" எண்டு நான் சொன்னன்.

## சஞ்சீவி சிறுகதை

நான் அவனுக்குச் செல்லம் குடுத்துப் பழுதாக்கிப் போட்டனாம். குழந்தைகளுக்கும் குட்டிநாய்க்கும் செல்லம் கொடுக்கப்படாதாம். ஏன் சொல்ல மாட்டியள்? பெடியன் வயதுக்கு மிஞ்சினவளத்தி. யாரோ எளிய சனங்களின்ரை கண் பட்டுட்டுது. அது தான் அவன் வீட்டைவிட்டு ஓடிப் போட்டான். அம்மா சொன்ன மாதிரி செல்லம் மிஞ்சியே ஓடினவன்? அவவுக்கு விசர் சும்மா வயது போனது தான், ஒரு மண்ணும் தெரியாது. என்னை ஆரும் திருத்திக் கொண்டு வந்தினம் எண்டால் கெட்டகோபம் வரும்.



உவவோடை மினக்கெட்டா நேரம் தான் போகும். இதுக்கிடையிலை கசெற்றிலை நாலு பாட்டு கேட் டிருப்பன். எனக்குப் பாட்டு எண்டால் நல்ல விருப்பம். ஆனால் இண்டைக்கு பாட்டுக் கேட்கிற மூட்டில்லை. சிலபேர் மூட் அவுட்டான நேரம்தான் பாட்டுப் போட்டுக் கேப்பினம். ஏதோ ஒருபடியா வந்த ஆக்களையும் சமாளிச்சு, இரண்டு மணிக்குள்ள ஓடி ஓடிச் சமைச்சுப் போட்டன். வழக்கமாக அடுப்படி வேலைகளை முடிச்சுக் கொண்டுதான் குளிக்கிறனான். அதுக் குப்பிறகு சாப்பிட்டுட்டு ஒரு சின்ன நித்திரை கொள்ளுவன். நாலு நாலரைக்கு எழும்பி தேத்தண்ணி மூட்டினால் அண்டைய பொழுது கணக் காய்ப் போய் முடியும். அப்பா வரத் தேத்தண்ணி தயாராய் இருக்கும்.

குளிப்பம் எண்டு வாளியைத் தூக்கினால் ஜெனாவின்ரை ஞாபகம் தான் வருகின்றது. ஜெனாவுக்கு தண்ணி அலம்புறதெண்டால் நல்ல விருப்பம். எத்தினை வாளி அள்ளி ஊத்தினாலும் சம்மதம்தான். எந்த வேலையைச் செய்யப்போனாலும் அவன்ரை ஞாப கம்தான் வருகுது. இந்தப் பெடியன் இப்பிடி என்னைத் தவிக்க விட்டுப் போயிட்டானே. கெதியிலை எனக்கு உவன்ரை யோசினையாலை விச ராக்கிப்போடும் போலை கிடக்குது. உவனாலை றோட்டு றோட்டா விசராடிக் கொண்டுதான் திரியப் போறன். சனமெல்லாம் பார்த்துச் சிரிக்கப் போகுதுகள். விசருகளுக்கு மற்றவை என்ன செய்தாலும் ஒண்டும் தெரியாதாம். மற்ற மற்ற ஆக்களைப் பாக்கத்தான் விசர் மாதிரித் தெரியும். அப்பிடி விசராக்கிப்போட்டுது எண்டா லும் நல்லதுதான். எந்தக் கவலையும் இல்லாமல் நிம்மதியாய் சிரிச்சுக் கொண்டிருக்கலாம். கடவுளே எனக்கு விசர் வரட்டும், விசர் வரட்டும். நான் கவலை தெரியாமல் இருக்கவேணும். ஆ! ஹா...ஹா... என வாய் விட்டுச் சிரிக்க வேணும். கவலை இல்லாமல் கை தட்டி சிரிக்க வேணும்.

சாப்பிடுவம் எண்டு சோத்தைப் போட்டால் எங்கை, சாப்பிடுகிறது? ஏதோ நஞ்சுமாதிரிக் கசக்குது. அவன் வீட்டிலைதான் இல்லை. என்ரை நெஞ்சுக் குள்ள நிண்டுகொண்டு என்ன பாடு படுத்துகிறான்? மச்சம் இல்லாட்டி பெடியன் சாப்பிடவே மாட்டான். ஒண்டும் இல்லாட்டிக் கடைசி கருவாடு எண்டாலும் தணலிலை வாட்டிப் போட்டுக் கொடுக்க வேணும். அப்பா கூடி என்னைப் பேசுவார் உப்பிடிப் பழக்கினால் கரைச்சல் எண்டு. இப்ப சாப்பிட்டிட் டானோ, இல்லாட்டிப் பட்டினிதான் கிடக்கிறானோ? ஆர் அறிவார்? என்ரை ஜெனா என்னை விட்டுட்டு எங்கயடா போட்டாய்? வாடா... அம்மாட்டை ஓடி வாடா?

என்ரை பாட்டுக்கு கத்திப் போட்டு போய்ப்படுத்தன். அப்படியே அயர்ந்து நல்ல நித்திரையாய் போனன். வெளியாலை அப்பா வந்து கௌரி, கௌரி எண்டு கூப்பிட்ட சத்தத்திலைதான் முழிச்சுப்பாத்தன். பொழுதுபட்டுப் போச்சுது. வெளியாலை நாய் குலைக்கிற சத்தம் கேட்டது. அது, அம்மா, அம்மா எண்டு ஜெனா கூப்பிடுகிறமாதிரி இருந்தது. என்ரை ஜெனாவின் குரல் எனக்குத் தெரியாதே? வெளியாலை ஓடிவந்து பாத்தன். என்ரை கண்ணையே என்னாலை நம்பமுடியவில்லை.

கேற்றைத் திறந்து கொண்டு அப்பா உள்ளே நுழையிறத்திற்கு ஒரு போராட்டமே நடத்திக் கொண்டிருந்தார். ஒரு கையிலை சையிக் கிளும், மற்றக் கையிலை ஒரு பொமனேரியன் நாயுமாக அவர் அவதிப் பட்டுக் கொண்டு நிற்கின்றார். பஞ்சுப் பொதி போன்ற அந்த வெள்ளை நிற நாய் அவருக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டு நிக்குது. அவர் உள்ளை வந்தா அது வெளியாலை ஓடுது. அவர் வெளியாலை வந்தா உள்ளை ஓடுது.. கழுத்திலுள்ள சங்கிலியை விட்டால் போதும். எங்கையாவது ஓடிவிடப் போகுதே எண்ட பயம்.

அவருக்கு பயமும் கோபமும் எரிச்சலுமாக வந்தது. அப்பாவையும் ஜெனாவையும் பாக்க நல்ல முசுப் பாத்தியாய் இருந்தது. ஜெனா என்னைக் கண்ட உடனை பாஞ்சு கொண்டு ஓடி வந்திட்டான். இனி எனக்குக் கவலையில்லை. அப்பா சைக்கிளோடை உள்ளுக்கு வந்தார். "ஜெனாவை எங்கையப்பா கண்டு பிடிச்சுக் கொண்டு வந்தனீங்கள்?" எண்டு கேட்டேன்.

அது ஒரு நல்ல முசுப்பாத்தி.

எங்கடை ஒழுங்கையாலை ஒரு வடிவான பெட்டையொண்டு போயிருக்குது. அவளைச் சுழட்டிக்கொண்டு பின்னாலை போயிருக்கிறார். அது கடைக்கார கந்தையாண்ணையின்ரை பெட்டை. அவளுக்குப் பின்னாலை போய் கந்தையாண்ணை வீட்டை போட்டான். கந்தையாண்ணைக்கு எங்கடை ஜெனாவைத் தெரியும்தானே. அவர் புடிச்சுக்கட்டி வச்சிட்டார். ஐயா வேலையாலை வரேக்கை கந்தையாண்ணை கூப்பிட்டாராம். என்ன விசயமெண்டால் ஜெனாப் பிள்ளை அவை வீட்டை நிண்டு கத்துறாராம். எங்கடை அம்மாவுக்கு ஒண்டும் தெரியாது. ஜெனாவை பிள்ளை மாதிரி வளர்த்தும் தன்ரை நாய்க்குணத்தைக் காட்டிப்போட்டுதாம் எண்டெல்லே சொன்னவா. எனக்கு சரியான கோபம் வந்திட்டுது. பிள்ளையள் லவ் பண்ணிக் கொண்டு தாய் தகப்பனுக்குத் தெரியாமல் ஓடுறேல்லையே. எங்கடை அம்மாவுக்கு விசர். காலமை அப்பா வேலைக்கு போயிடுவார். பிறகு பின்னேரம்தான் வருவார். எதுக்கும் தனிய வீட்டிலை இருந்தால்தான் தெரியும்.

முந்தியெல்லாம் எனக்கு எடுத்ததுக் கெல்லாம் கோபம்வரும். வந்தால் என்னத்தையேன் போட்டு உடைச் சாத்தான் அடங்கும். ஜெனா வந்தாப் பிறகு எனக்குக் கோபம் கூட வாறேயில்லை. அவன்ரை பகிடியளுக்கு சிரிச்சுச் சிரிச்சு கோவத்தையே மறந்திட்டன். அப்பாவுக்கு தேத்தண்ணி போடவேணும். காணாமல் போன மகனைக் கண்டு பிடிச்ச வீரத்தந்தைக்கு தேநீர் விருந்தளித்து கனம் பண்ணப்படும். டட்டாயங்.... டட்டாயங்.....

அங்கை பார், அப்பா என்னையும் ஜெனாவையும் கண்வெட்டாமல் பாத் துக்கொண்டு நிக்கிறார். எங்களைப் பற்றி ஏதோ என்னவோ யோசிக்கிறார். எனக்குத் தெரியும் என்ன யோசிக் கிறார் எண்டு. சொல்லுங்கோ பாப்பம்? டட்டாயங்......டட்டாயங்.... சொன்னவருக்குப் பரிசாக எங்களது ஜெனாவை வழங்குவேன். டட்டாயங்... டட்டாயங்.... டட்டாயங்ங்ங்.....

(யாவும் கற்பனை)

---

ஏசுவே எம்மைப்



பாருங்கள்!

பாவம் விளையும் உலகம் - மிதி
பாதம் எங்கும் கலகம்
இலாபம் மட்டும் நோக்கும் - நிலை
எம்மைக் கொட்டித் தாக்கும்.


சாத்தான் ஆட்சிப் பிடியில் - கொடு
சாபம் குண்டு வெடியில்
மேய்ப்பர் நீரும் வருக - திரு
மேனி காட்டி அருள்க.

சிலுவை ஏற்ற யேசு - மீண்டு
திரும்பி வந்து பேசும்!
நிலுவை யாகப் பாவம் - வந்து
நிலைப் பதனைப் பாரும்!

இறை குமாரா, அன்பை - எம்
இதய மேற்றிப் பண்பை
நிறை வடையச் செய்யும் - எங்கள்
நிலை யுயரச் செய்யும்.

*கி.வாயுபுத்திரன்.*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




கழுதை ஒன்று வயல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது. அருகே ஒரு சேவலும் இருந்தது. கழுதை மேயும்போது வெளியே வரும் புழுபூச்சிகளை சேவல் இரையாக்கிக் கொண்டிருந்தது.

பசியெடுத்த ஒரு சிங்கம் அந்தப் பக்கமாக இரைதேடி வந்தது. மேய்ந்து கொண்டிருந்த கழுதையைக் கண்டதும் "கொழுத்த கழுதை. நல்ல இரை" என்று எண்ணியது சிங்கம். பதுங்கிப் பதுங்கிக் கழுதையின் மேல் பாய முயன்றது.

**ஈசாப் நீதிக் கதைகள்**

சிங்கமொன்று தன் கழுதை நண்பனின் மேல் பாயமுனைவதைச் சேவல் கண்டுவிட்டது. பயத்தால் அது நடுங்கியது. கத்தமுனைந்த அதன் குரல் குளறியது. பயங்கரமாக -- கர்ணகடூரமாக -- அது கூவியது. அதுவரை அப்படிப்பட்ட ஒரு விசித்திரமான கூவலை சிங்கம் கேட்டதே இல்லை. அதனால் அது சேவலை ஏதோ வினோதமான பறவை என்று எண்ணிக்கொண்டது: திகைத்தது: பயந்தது.

பயம் தெளியாத சேவல், மறுபடி அதே விசித்திரக் குரலில் திரும்பத் திரும்பக் கூவியது. அரண்டுபோன சிங்கம் கழுதையை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தது!

தன்னுடைய கம்பீரமான தோற்றத்தைப் பார்த்துத்தான் தன்னை எதுவும் செய்யாது, பயந்துபோய் சிங்கம் ஓடுகின்றது எனறு கழுதை எண்ணிக்கொண்டது. அந்தப் பெருமையால் அதற்குக் கர்வம் தலைக்கேறிவிட்டது.

"அந்தச் சிங்கப்பயலைச் சும்மா விடக்கூடாது" என்று கூறிக்கொண்டு சிங்கத்தின் பின்னாலேயே ஓடியது.

"கழுதையாரே, சிங்கம் என்னுடைய காட்டுத்தனமான கூவலைக் கேட்டுத் தான் அரண்டு ஓடுகிறது. சிங்கத்தைத் துரத்திக்கொண்டு போய் வீணாக ஆபத்தைத் தேடிக்கொள்ளாதீர்கள்" என்று கூறியது சேவல்.

ஆனால்,கழுதை சேவலின் புத்திமதியை கேட்கவில்லை.

"சிங்கப்பயலே, எங்கே போனாலும் விடமாட்டேன்! உன்னை ஒழித்துக்கட்டி விட்டுத்தான் மறுவேலை" என்று கத்திக்கொண்டே சிங்கத்தைத் தொடர்ந்து ஓடியது.


சேவலின் கூவல் கேட்காத தொலைவுக்கு ஓடிப்போனதும் சிங்கம் திரும்பிப் பார்த்தது.பின்னாலேயே கத்திக்கொண்டு ஓடிவந்த கழுதையை இரையாக்கிக் கொண்டது.

"கழுதையாரே,கர்வம் கண்களை மறைக்க உங்கள் முடிவை நீங்களே தேடிக் கொண்டீர்களே!" என்று தன் நண்பனுக்காக வருந்தியது சேவல்.


*முட்டாள்தனமான கர்வம் பெரிய ஆபத்தில் முடியும்.*

## திருட்டு முழி முழிப்பவரை கண்டுபிடிக்க முடியுமா?

**கீழேயுள்ள படத்தில் ஒன்று தொடக்கம் 49 வரையுள்ள எண்கள் குறிக்கும் புள்ளிகளை இணைப்பதன் மூலம் திருட்டு முழியுடன் மறைந் திருப்பவர் யார் என்பதனைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.**



## ஓவியரின் குறும்பு



மேலேயுள்ள பிராணிகளின் படங்களை வரைந்த ஓவியர் அதில் தமது குறும்புப் புத்தியொன்றையும் காட்டிவிட்டார். அதனால் சில பிராணிகளின் அங்கங்கள் பொருத்தமற்று உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

## எங்கள் தோட்டம்

சின்னச் சின்ன தோட்டம்
சிறிய நல்ல தோட்டம்
வண்ணப் பூக்கள மலர்ந்திடும்
வடிவான தோட்டம்

அல்லி மலரும் காலையில்
ஆம்பல் கூம்பும் காலையில்
எங்கள் தோட்டப் பூக்கள்
எப்போதும் சிரித்திருக்கும்

சின்னத்தம்பி பார்த்திடும்
சிங்காரத் தோட்டம்
முதியோர் பார்த்து மகிழ்ந்திடும்
நேர்த்தியான தோட்டம்

சின்னத் தோட்ட மத்தியில்
சிறிய பொம்மை கட்டியே
பயிரை அழிக்கும் பறவையை
பறக்க விரட்டியடித்திடுவோம்.

*-ச.உதயணன்-*

(தரம் 7, சாவகச்சேரி இந்துகல்லூரி)

## அம்மா எம் தெய்வம்

முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில்
காணுந் தெய்வம் அம்மா
தன்னைத் தியாகஞ் செய்து எம்மைப்
பேணுந் தெய்வம் அம்மா

உதிரந் தன்னைப் பால தாக்கி
ஊட்டி வளர்ப்பாள் அம்மா.
(எம்)சதிரம் நொந்தால் தாங்கமாட்டாள்
தவித் திடுவாள் அம்மா


பஞ்சம் வந்த போதுங் கொஞ்சக்
கஞ்சி யெமக்குத் தந்து
பச்சைத் தண்ணி தான் பருகி
பாதுகாப்பாள் அம்மா

உந்தன் பிள்ளை உதவாக்கரை
என்று எவருஞ் சொன்னால்
எந்தன் மகனா இருக்கா தேயது
என்று சொல்வாள் அம்மா


ஊனம் வந்து உலகந் தள்ளி
ஒதுக்கி வைத்த போதும்
வேணும் எந்தன் பிள்ளையென்று
விரும்பி வளர்ப்பாள் அம்மா

முடி நரைத்துத் தடி பிடித்து
தளர்ந்து விழும் போதும்
(அவள்) அடி தொழுது அரவணைத்து
அன்பாய்ப் பேணுவோம் நாம்.

*-கவிமணி ஆனந்தராசா-*



## பத்து வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்




மேலே உள்ள படங்கள் இரண்டும் பார்க்க ஒரேமாதிரியாக உள்ளன. ஆனால் அவற்றில் பத்து வித்தியாசங்கள் உண்டு. அவற்றைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

( விடை XV ஆம் பக்கத்தில்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கு இல்லாத பறவை கிவி!

...றகுகளே இல்லாதது போன்று ஒரு பறவை தோற்றமளிக்கும். ...எது தெரியுமா? நியூஸிலாந்துத் தீவுகளில் காணப்படும் கிவி



(Kiwi) என்ற பறவைதான் அது.

சிறகே இல்லாதது போல் அது தோற்றமளிப்பதால் சிறகிலி என்ற பொருள்பட "ஆப்டெரிக்ஸ்" என்றும் இதனை அழைப்பர்.

சில சமயங்களில் ஒரு பிராணியில் பயனுள்ளதாயிருக் ...ஒரு பாகம் அல்லது உறுப்பு அதே பிராணியின் நெருங்கிய ...ாகிய இன் னொரு பிராணியில் பயனற்றுக் குன்றியிருக்கிறது. ...ந்த வகையில் சாதரண பறவைகளுக்கு பறக்க உதவும் ...கைகள் கிவி பறவையில் மிகச் சிறுத்து, உடம்பின் ...ளால் மூடப்பட்டு இருக் கின்றன. அவை வெளியே காணப்படு ...லை: பறப்பதற்குப் பயன் படுவதுமில்லை.

...னாலும் அந்நுண்ணிய இறக்கைகளில் புறாவின் இறக்கை ... இருப்பதுபோல் எலும்புக் கோவையும் தசைத் தொகுதியும் ...

...றப் பறவைகள் தத்தம் அலகுகளை இறக்கைக்குள் ...துக் கொண்டு உறங்குவதுபோல் கிவியும் தன் அலகை இறக்கைக்குள் வைத்துக்கொண்டு உறங்க முயல்கிறது.

இதிலிருந்து கிவி பெரிய பயனுள்ள இறக்கைகளையுடைய மரபிலே பிறந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.

ஆயினும் கிவி வசிக்கும் பாகங்களில் சமீபகாலம் வரை அதைத் தரையில் துன்புறுத்தும் பகைகளான பெரிய பிராணிகள் இருந்தது இல்லை. ஆதலால் அவற்றுக்கு பறக்கும் தேவை இல்லாமல் போயிற்று. ஆகவே படிப்படியாக அவற்றின் இறக் கைகள் சிறுத்துப் பயனற்றுப் போயிருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

ஆஸ்திரேலியாவில் "கங்காரு" காணப்படுவதால் அந்த நாட்டு மக்களை கங்காருவின் பெயரால் அழைப்பது போன்று நியூஸிலாந்து நாட்டு மக்களை "கிவி" பறவையின் பெயரால் அழைக்கின்றார்கள்.

இப்பறவை தரைக்கு அடியில் உள்ள குழிகளில் நாள் முழுவதும் வசித்து இரவில் வெளியேறி இரைதேடப் புறப்படும்.

மண்புழுக்கள், பூச்சிகள் போன்றவற்றை மோப்பம் பிடித்து தனது நீண்ட அல..த் தரையில் உள்ள வளைகளுக்குள் செலுத்தி, ..வற்றை வெளியே இழுத்து உண்ணும். சுவாசத் துவாரங்கள் அலகின் ...ல் இருப்பது இப்படி மோப்பம் பிடிக்க உதவுகின்றது. ...ருப்புக் கோழி இனத்தைக் சேர்ந்த பறவைகளில் இது ... இது ஆண்டுக்கு இரண்டு பெரிய முட்டைகள் இடும். ...ன்றும் சுமார் ஐந்து அங்குல நீளமும் மூன்று அங்குல ...ம் சுமார் ஒரு இறாத்தல் எடையும் கொண்டதாக இருக்கும். ...ர்ந்த முழுப் பறவையின் எடையில் நான்கில் ஒன்று அல்லது ... ஒன்று எடையில் முட்டைகள் அமைந்திருப்பது குறிப்பிடத்



# ...ிலடை ஜொடிகள்

...தெருவில் வண்டி ஓடுவது எதனால்?
...தெருத்திண்ணை மெழுகுவது எதனால்?

...அல்லி மலர்வது எப்படி?
...விதியை வெல்வது எப்படி?

...அமாவாசை வருவது எப்படி?
...அவமானம் ஏற்படுவது எப்படி?

...கழுகு வட்டமிடுவதேன்?
...மாரடித்து அழுவதேன்?

...தலையணை அழகாவது எப்படி?
...பால் தயிராவது எப்படி?

...ரயை கண்டு நடுங்குவதேன்?
...டப்பவன் செருப்பைக் கழற்றியதேன்?

...ூரியன் வருவதேன்?
...ூரியகாந்தி மலர்வதேன்?


...காழி உண்பது எப்படி?
...தாட்டம் பண்படுத்துவது எப்படி?

...நல்லு அரிசி ஆவது எப்படி?
...ஊசி துணியில் செல்வது எப்படி?

...நாய் ஓடுவதேன்?
...ாக்கு இனிப்பதேன்?

1) அச்சாணியால் 2) மதியால் 3) மதி...
4) பிணத்தால் 5) உறையிட்டு 6) கடிப்...
7) பொழுது புலர்வதால் 8) கொத்திக் கொத்தி
9) குத்திக் குத்தி 10) கல்கண்டு

## கட்டங்களை நிரப்புங்கள்




இந்தச் சங்கிலித்தொடர் கட்டங்களை நிரப்ப நீங்கள் சிரமப்பட வேண்டாம். மேலிருந்து கீழ் வரிக்கான குறிப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு உரிய சொற்களைக் கண்டுபிடித்து நீங்கள் நிரப்பினால் போதும். இடமிருந்து வலமாக சொற்கள் தாமாகவே பொருந்திவருவதை காண்பீர்கள்! எல்லாமே மூன்றெழுத்துச் சொற்கள்தான் என்பதை மறந்து விடாதீர்கள்.

மேலிருந்து கீழ்
(1) எங்களுடையது.
(2) தரு.
(3) சிறிய பூச்சி.
(4) தள்ளிப் போ.
(5) இராமனின் புதல்வன்.
(6) மலையின் உச்சி.
(7) பிழைத்துப் போதல்.
(8) ரூபாயில் நூறு.
(9) பெண்களின் விளையட்டு.
(10) ஒரு தானிய வகை.
(11) வகை.
(12) ஓர் ஏதனம்.
(13) மிச்சம்.
(14) வெடிக்கும்.
(15) "திடீரென" என்பதைக் குறிக்கும்.
( விடைகள் XV ஆம் பக்கத்தில்)

## கிரிக்கட் வீரர்களை தெரிகிறதா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | ஜூ | கா | ளே | ஜா | ம் |
| ர | ரா | ப் | லி | வீ | ர |
| ளி | ம் | ப | ஹீ | ட் | க் |
| கு | ச | ர் | வ | ன் | அ |
| றா | ன | ஸ் | வா | ர் | ஸா |
| லா | த் | நா | ஸ்ரீ | வோ | ர் |

இந்த அட்டவணைக்குள் இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, மேலிருந்து கீழோ, கீழிருந்து மேலோ, குறுக்காகவோ பதின் நான்கு பிரசித்திபெற்ற கிரிக்கெட் வீரர்களின் சுருக்கப் பெயர்கள் ஒளிந்துள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

-சூ.சூரியதாட்சாஜினி-
(கரணவாய் கிழக்கு.)

(விடை XV பக்கத்தில்)

## அழகு

தாய்க்கு சேயழகு
சேய்க்கு அறிவழகு
காய்க்கு கனியழகு
கனியுக்கு சுவையழகு.


வானுக்கு நிலவழகு
நிலவுக்கு ஒளியழகு
வாழ்வுக்கு உழைப்பழகு
உழைப்புக்கு உயர்வழகு

மொழிகளில் தமிழ் அழகு
தமிழுக்கு சொல்லழகு
கண்ணுக்கு மான் அழகு
...

...
(தரம் - 8, மானிப்பாய் இந்துக் கல்லூரி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவனுக்கு உதவுங்கள்!



சிக்கலில் மாட்டித் தவிக்கும் இச்சிறுவனை வலையிலிருந்து விடுவிப்பதற்கு வழிகாட்டி உதவுங்கள் பிளீஸ்........

## மாணவம் பேணிடுவோம்

அன்னையைப் போற்றி மதித்திடுவோம்
ஆசானைத் தேடிப் பணிந்திடுவோம்
இறைவனை ஏற்றி வணங்கிடுவோம்
ஈகையிற் சிறந்து உயர்ந்திடுவோம்
உண்மையை என்றும் உரைத்திடுவோம்
ஊக்கமொடு நன்றாய் உழைத்திடுவோம்
எந்தையைப் பணிந்து ஏற்றிடுவோம்
ஏழையை அன்பாய் அரவணைப்போம்
ஐயம் தெளிந்துகொண்டிடுவோம்
ஒற்றுமை பேணி வளர்ந்திடுவோம்
ஓங்கு புகழைப் பெற்றிடுவோம்
ஔதடம் தன்னை விலக்கிடுவோம்
மதிதரும் கல்வி பெற்றிடுவோம்
மாண்புறு மாணவம் பேணிடுவோம்.

- சி.சிவா -
(வட்டுக்கோட்டை)

## சோடி சேருங்கள்

கீழே எட்டுப்படங்கள் உள்ளன. இவைகளில் நான்கு படங்கள் குறிக்கும் சொற்களின் கடைசி எழுத்து மற்றைய நான்கு படங்கள் குறிக்கும் சொற்களின் முதல் எழுத்தாக அமைந்துள்ளது. அவ்வாறு அமைந்திருக்கும் படச்சோடிகள் எவை என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.




(விடை XV ஆம் பக்கத்தில்)

# நிகழ்வுகளுள்



# சில நிதர்சனங்கள்

வைகறையின் சீதளக்காற்று மேனியைச் சில்லிட வைத்தது. போர்வையை இன்னும் சற்று இறுக்கிப் போர்த்தபடி ஒருக்களித்துப் படுத்தான் அவன். விடிந்த இந்த நாள் தைப் பொங்கல் திருநாள் என்பது அவனுக்குத் தெரியாமலில்லை. ஆனாலும் அவன் மனதில் எவ்வித புது உணர்வோ உற்சாகமோ எழவில்லை. இன்றைய நிலையில் அவலங்களும் துயரங்களும் நிறைந்து, மலிந்து சுதந்திரம் அழிந்து போய்க் கிடக்கின்ற இந்த மண்ணில் இத்தகைய பொங்கல்கள்,விழாக்கள் எல்லாம் அர்த்தமற்றவையாக மட்டுமல்ல அவசியமற்றவையாகவுமே அவனுக்குப்பட்டன.

"பொங்கல் நாளும் அதுவுமாய் விடிய விடியப் போத்து மூடிக் கொண்டு...எழும்பு தம்பி.....?"

பக்கத்தில் வந்து நின்ற அம்மாவின் திருப்பள்ளியெழுச்சி போர்வையைப் பிய்த்துக்கொண்டு செவிப்பறையில் மோதி ஓய்ந்தது. இனி என்ன போராட்டம் செய்தாலும் தொடர்ந்து துயில்கொள்ளும் சுதந்திரம் அவனுக்குக் கிடைக்கப்போவதில்லை. அம்மாவின் மனையாட்சி அப்படி. போர்வையை விலக்கி சோம்பல் முறித்து எழுந்தவன் மேசையருகில் சென்று வானொலியைத் திருகினான். 'பொங்கலோ பொங்கல்' என்ற பாடல் பொங்கி வழிந்துகொண்டிருந்தது.

'உந்தப் பொங்கல் ரேடியோவிலை மட்டும்தான்...'

மனம் புழுங்க வானொலியை நிறுத்திவிட்டு முற்றத்துக்கு வருகிறான்.

நேரம் ஆறுமணியை(பழையது) அண்மித்துக்கொண்டிருந்தும் நிலம் இன்னும் இருட்டாகவே இருந்தது. கிழக்கு வானில் கூட உதயத்துக்கான வெளுப்புக்கள் எதுவும் தென்படவில்லை. அண்ணாந்து வானத்தை நோட்டமிட்டான். தமிழர்தம் இதயங்களைப்போல் வானமெங்கும் கருமேகங்கள் சூழ்ந்து கொண்டிருந்தன.

'நேற்றெல்லாம் வானம் நல்ல வெளுப்பாகத்தானே இருந்தது. அண்டைக்கு ஏன் இப்படி திடீரென்று இருண்டு போனது....தன்நிலை புரிந்தும் புரியாத தமிழனுக்கு அவன் நிலையை புரியவைக்க இயற்கை கூட இன்று மறுதலிக்கின்றதோ...'

அவன் சிந்தனை சிறகடிக்க அம்மாவின் குரல் தடுக்கின்றது.

"விடிய விடிய படுத்திருந்துபோட்டு ...பிறகு உதிலைபோய் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிக்கிறியே ...."

அவன் திரும்பினான். தலைமுழுகி புத்தாடை பூண்டு பொட்டிட்டுப் பூச்சூடி எழில் பொங்க நின்றிருந்தாள் அம்மா. அத்தோடு முற்றத்தில் மற்றுமொரு அழகான காட்சியையும் அவன் கண்டான். அழகாகக் கோலமிட்ட தரையில் கல்லடுப்பில் புதுப்பானை நெருப்பில் வெந்து கொண்டிருந்தது. அருகில் குத்துவிளக்கு, நிறைகுடம், வெற்றிலை பாக்கு, பழவகையோடு இன்னும் என்னென்னவோ.... ஊதுபத்திப் புகையில் திணறிக் கொண்டிருந்தன. இவற்றிற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் பெரிய தலைப்பாகை, இடையில் மடித்துக்கட்டிய குறிபோட்ட "இந்தியன் கிப்ஸ்" நாலு முழ புதிய வேட்டி, நெற்றி முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்ட திருநீற்றுப் பூச்சின் நடுவில் ஒரு ரூபாய் குற்றியளவிலான சந்தனப் பொட்டு, வலது கையில் புதிய அகப்பை என்பவற்றுடன் கம்பீரமாக நின்றிருந்தார் அப்பா. அழும் குழந்தையின் வாயிலிருந்து அங்கங்கு வடிவது போல் பொங்கல் பானையின் வாயிலிருந்து பால் வடிந்து கொண்டிருந்தது.

"உதிலை பொங்கல் பானையைப் பாத்துக்கொண்டு நிற்காமல் பல்லை விளக்கி குளிச்சிட்டு கிணற்றடி வாழையிலை நாலு தலைவாழை இலைத் துண்டும் வெட்டிக்கொண்டு வா..."

மீண்டும் அம்மாவின் ஆணை. மறு பேச்சின்றி அடுத்த பதினைந்து நிமிடத்தில் தலைவாழையிலைகளுடன் முற்றத்தில் அவன்.

"இஞ்சேரும் பார்த்துப் இலையை வாங்கிக் கழுவி கிழக்குப்பக்கம் பார்த்துப் போடப்பா..."

சஞ்சீவி சிறுகதை

அப்பா அவசரப்படுத்த அம்மா இயந்திரமானாள்.

அவன் கிழக்கு வானைப் பார்த்தான். வானம் இன்னமும் இருளாகவே இருந்தது. சூரியன் எழுந்ததற்கான எந்த அறிகுறிகளும் இல்லை. எல்லாம் ஆயத்தம். பொங்கலை இலையிலே படைப்பதுதான் பாக்கி. ஆனால் நிகழ்வின் கதாநாயகன் சூரியபகவானைத்தான் காணோம்.

"ம்...மணியும் ஆறரைக்கு மேலையாகிவிட்டுது...வானம் சிவக்கக்கூடக் காணன்..." கிழக்கே பார்த்தவாறு அங்கலாய்த்தார் அப்பா.

"உந்தமாதிரி இருளாகக் கிடக்கு ...சூரியன் உதிச்சாலும் எங்கை தெரியப்போகுது...? இண்டைக்கெண்டு மறைஞ்சு நிண்டு சூரியபகவானும் ஏன் இப்படிச் சோதிக்கிறானோ?"

ஆதங்கத்தோடு அம்மா அலுத்துக் கொள்கிறாள்.

'உது சோதனை இல்லையம்மா.. யோசினை. தலைகாட்டுகிறதோ விடுறதோவெண்டு. சூரியபகவான் யோசிக்கிறார்...'

அவன் சொல்லத்தான் நினைத்தான். ஆனால் வாய்திறக்கவில்லை.

"வருசத்திலை ஒருதரம் வாற தினம் ...சந்தோஷமாய் சூரியனுக்குப் பொங்கிப் படைச்சுச் சாப்பிடலாம் எண்டால்..ம்.."

அகப்பையுடன் நின்ற அப்பா அலுத்தவாறு முற்றத்தில் குந்துகின்றார்.

நேரம் கடந்துகொண்டிருந்தது. சூரியனின் சிறுபகுதியேனும் கண்ணில் தெரிவதாக இல்லை. கருமேகங்களும் கதவு திறப்பதாக இல்லை. அப்பா கிழக்கைப் பார்த்தபடி அகப்பையோடு குந்தியிருக்க... அம்மா, அப்பாவைப் பார்த்தபடி குந்தியருக்க... பொறுமை இழந்தவனாய் அவன் பொருமினான்.

"சூரியன் இண்டைக்கு கண்ணாலுங் காணமாட்டியள். எனக்குப் பசி வயித்தைக் கிள்ளுது... படையுங்கோ சாப்பிடுவம்..."

"என்ன கதை உது...பொழுதைக் காணாமல் படைக்கிறதோ...எத்தனை மணி செண்டாலும் சூரியனுக்குப் படைச்சுத்தான் சாப்பிடுகிறது...ஓ.."

அப்பாவின் ஆணித்தரமான வார்த்தைகள் அவனை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றன. மறு விநாடி அவனது கால்கள் அடுக்களையை நோக்கி விரைந்தன. தொடர்ந்து பழைய சோற்றுப் பானைக்கும் அவனுக்கும் ஒரு ஐந்துநிமிட ஒப்பந்தம். அடுக்களையை விட்டு வெளியில் வந்தான். அவன் மனமும் வயிறும் குளிர்ந்திருந்தன.

முற்றத்தில் குந்தியருந்த அம்மாவையும் அப்பாவையும் பார்த்தபோது அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. 'தலைவிதி' என்று மனதுக்குள் நினைத்தவன் சைக்கிளை எடுத்தவாறு புறப்பட்டான்.

"எங்கை தம்பி வெளிக்கிடுறாய்... கொஞ்சம் நிண்டு பொங்கல் சாப்பிட்டிட்டுப் போவன்..!"

அம்மாதான் கூறினாள்.

"இண்டைக்குச் சூரியன் தெரியப் போறதுமில்லை: நீங்கள் படைக்கப் போறதுமில்லை."

அகப்பையுடன் இருந்த அப்பா அவனை ஒருமாதிரியாகப் பார்த்தார்.

"எங்களைவிட இயற்கைக்குத்தான் மண்பற்று அதிகமெண்டு சொல்ல வேணும்.."

**கலைநேசன் சிவம்**

அவன் மீண்டும் கூறியபோது அது புரியாது அம்மாவும் அவனைப் பார்த்தாள்.

'இண்டைக்கு எவ்வளவு சனங்கள் வன்னியிலையும் வனாந்தரங்களிலையும் துன்பங்களும் சோகங்களும் மனதிலை பொங்க துடிச்சுக் கொண்டிருக்குதுகள்....இதைப் புரியாத எங்களுக்குப் புரியவைக்கத்தான் சூரிய பகவானும் மறைஞ்சு நிக்கிறான் போல...'

இப்படி அவன் கூறியிருந்தால் அகப்பையுடன் அப்பா அவனை நெருங்கியிருக்கவும் கூடும். இதனைப் புரிந்துகொண்ட அவன் மனதுக்குள் புழுங்கியபடி வீதிக்கு வந்தான்.

வழமைபோல் வீதி வெறிச்சோடியே காணப்பட்டது. முன்னைய பொங்கல் தினங்களில் என்றால் கோயிலுக்குச் செல்வோர்,உறவினர் வீடுகளுக்குச் செல்வோர்,எல்லாவற்றிற்கும் மேலாக பட்டம் பறக்க விடுவோர் என்று அந்தக் கிராமத்து வீதியெங்கும் எவ்வளவு கலகலப்பாக இருக்கும். பட்டம் என்றால் சும்மாவா? வடமராட்சிலேயே பட்டம் விடுவதில் பெயர் போனது அவனது கிராமம்தானே. பிராந்துப் பட்டம், கொக்குப்பட்டம், படலம், பாறாத்தை,பாம்பு என்று எத்தனை வகைப்பட்டங்கள் முன்பெல்லாம் இந்த நாளில் பறந்து கொண்டிருக்கும். இவற்றில் இன்னொரு விசேசம் 'போட்டிப் பட்டம்' விடுவது. போட்டியென்றால் அழகான பட்டங்களைப் பறக்க விடுவதல்ல. வானில் நீண்ட தூரத்துக்கும், உயரத்திற்கும் பறக்க விடுவது. நாச்சிமார்கோவிலடி, ரேவதிகடைச்சந்தி, வல்லைச்சந்தி போன்ற இடங்களில்தான் போட்டி நடைபெறும். மாலை ஐந்து மணியானால் இந்த இடங்களில் கிராமமே கூடிவிடும். சீனவெடிகள், சீட்டையடிப்புக்கள், கைதட்டல்கள் என்று போட்டிதொடங்கிவிட்டால் ஒரே களியாட்டமாகவே இருக்கும்."பிராந்து" வகைப் பட்டங்களே போட்டிக்கு விடுவதுண்டு. வெல்லும் பட்டங்கள் பரிசில்களைத் தட்டிச் செல்லும்.

கடந்தகால பொங்கல் களியாட்டங்களை அசைபோட்டவாறு போக்கட்டிச் [illegible] பூவரசம் பிட்டியிலிருந்து கற்கோவளம் திட்டி வரைக்கும் எவ்வளவு சிறார்களும் பெரியவர்களும் பட்டங்களோடு மல்லுக்கட்டிக் கொண்டு நிற்பார்கள். அவனும் நண்பர்களும் சிறார்களின் எத்தனை பட்டங்களை பண்டிதரின் கிணற்றுக்குள் குளிப்பாட்டி எடுத்து குறும்பு செய்திருப்பார்கள். இன்று அந்தச் சிறார்கள் எல்லாம் எங்கே? பெரியவர்கள் எங்கே? பட்டங்கள் எங்கே? சோர்வோடு நாச்சிமார்கோயில் பக்கமாக சைக்கிளை மிதிக்கின்றான். கோயில் முன்றலில் கிராமத்து இளம் பெண்கள் சிலர் அருச்சனைத் தட்டங்களோடு நிற்பது தெரிகின்றது. எதேச்சையாகத் திரும்புகிறான். குறுக்கொழுங்கையால் அவனின் மூத்த மாமாவின் மகள் மஞ்சு கையில் அருச்சனைத் தட்டோடும் மற்றும் மலர் மாலைகளோடும் வந்துகொண்டிருந்தாள்.

"..ஓ..மஞ்சு...இண்டைக்குக் கோயிலிலை, நல்ல பொங்கல் கொண்டாட்டம் போல..." அவன் கேள்வியாகக் கேட்கவில்லை...

"நாங்கள் ஒண்டும் கோயிலிலை பொங்கல் கொண்டாடப் போகேல்லை. ...வழமையாய் வெள்ளிக்கிழமையிலை நடக்கிற பூசைக்கு வழமையாய்ப் போறமாதிரித்தான் இண்டைக்கும் போறம்..."

உதட்டைச் சுழித்தவாறு மஞ்சு கூறிய பதில் அவன் நெஞ்சில் தைத்தாற்போல் இருந்தது. அத்தோடு அன்று வெள்ளிக்கிழமை என்பதும் அவன் ஞாபகத்துக்கு வந்தது. அத்தோடு மஞ்சுவின் பதிலில் பொதிந்திருந்த 'செய்தி' அவனுக்கு எதையோ புரியவைத்தது. அப்பொழுதுதான் அன்றைய செய்திப் பத்திரிகையின் ஞாபகம் வந்தது.

"ஓடர் பேப்பர்தரனே சோமண்ணை வைச்சிருப்பார்.." நினைத்தவன் சைக்கிளைத் திருப்பினான்.

"வீட்டை ஒருக்கால் எட்டிப்பார்த்திட்டு குஞ்சர்கடைக்குப் போவம்..." எண்ணியவனாக வீட்டருகில் சைக்கிளை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான். அங்கே அம்மாவும் அப்பாவும் முற்றத்தில் குந்தியபடி வானத்தைப் பார்த்தபடியே....அவன் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் 9.30. கடிகாரத்திலிருந்து கண்களை விலக்கி வானத்தைப் பார்த்தான். இன்னமும் இருட்டாகவே இருந்தது. சூரியனும் முகம் மறைந்திருந்தது. அப்பொழுது பக்கத்துவீட்டு பவளம் அக்கா வீட்டு வானொலி அலறியது அவனுக்குத் தெளிவாகவே கேட்டது.

"...பல வருடங்களுக்குப் பின் இன்று வடமராட்சி அடங்கலாக யாழ். குடா நாட்டு மக்கள் தைப்பொங்கல் விழாவினை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றனர்."

(யாவும் கற்பனை)

---

## சர்வரோக நிவாரணி தேன்!

தித்திக்கும் இனிமைக்கு உவமையாகக் கூறப்படும் தேன் பல இனிய செய்திகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மிகவும் பழமையான காலம் முதல் தேன் ஓர் ஊட்டச் சத்துமிக்க உணவாக மட்டுமன்றி பலவகைப் பிணி களைப் போக்கும் நிவாரணியாகவும் பயன்பட்டு வந்திருக்கின்றது. எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்ட தேன் பல மருத்துவப் பயன்களை அள்ளிக் கொடுக்கிறது.

**எல்லாச்சத்துக்களும் நிறைந்தது :-**

கல்சியம், சோடியம், பொட்டாசியம், இரும்பு, குளோரின், பொஸ்பரஸ், கந்தகம், அயடீன், மக்னீசியம், செம்பு, அலுமினியம், சுண்ணாம்பு போன்ற அனைத்து உலோகச் சத்துக்களும் தேனில் கலந்துள்ளன.

**நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் ஏற்படுத்தவல்லது :-**

மனிதனின் உணவில் அவசியம் இருக்கவேண்டிய விற்றமின்களான பி1,பி2,பி3,பி5,சி,ஈ,கே மற்றும் கரோட்டின் என்பன தேனில் இருப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தியை உடலில் ஏற்படுத்தி புறத்தாக்குதல்களிலிருந்து உடலைப் பாதுகாக்கிறது.

**தொற்றுநோயைத் தடுக்கவல்லது :-**

தேனில் பொட்டாசியம் கலந்துள்ளது. கிருமிகள் வளர்ச்சிக்கு இன்றியமையாத நீர்த்தன்மையை அது நம்முடைய உடலிலிருந்து உறுஞ்சிக்கொள்வதால் உடலை அண்டும் தொற்றுநோய்க் கிருமிகள் வளர்வதற்கு வழியின்றி அழிந்துவிடுகின்றன.

**சிறந்த இருமல் நிவாரணி :-**

தீராத இருமலையும் உடன் மாற்றக்கூடிய ஆற்றல் தேனுக்கு உண்டு.(ஒரு தேசிக்காயை 5 நிமிடம் கொதிநீரில் மெதுவாக வேகவைத்து இரண்டாக வெட்டிப் பிழிந்து ஒரு டம்ளரில் விடுங்கள். இரு மேசைக்கரண்டி கிளிசரினைச் சேர்த்து மிகுதியான இடத்தை தேனினால் நிரப்பி அக்கலவையை உண்டுவர தீராத இருமலும் தீரும் என்று கூறுகின்றார்கள்.)

**சிறந்த தூக்கமருந்து :-**

தூக்கமின்றிச் சிரமப்படுகிறவர்கள் இரவு படுக்கைக்குப் போகுமுன்பு 2 தேக்கரண்டி தேனை அருந்திவிட்டு உறங்கச்சென்றால் உங்களை மறந்துவிட்ட தூக்கமும் கண்களைத் தழுவிக்கொள்ளும்.

**என்றும் இளமையாக வைத்திருக்க வல்லது :-**

உடல் உறுப்புக்கள்,சுவாசம் தொடர்பான திசுக்கள் போன்றவை செயல்பட தேவையான பல தாதுப்புக்களையும் தேன் கொண்டிருப்பதால் முதியவர்கள் கூட தேன் அருந்திவந்தால் புத்துணர்ச்சியையும் புதிய பொலிவையும் பெற்றுக்கொள்கின்றனர். அப்படியானால் இளையோர்கள் என்றும் இளையோராக இருக்கலாமே!

**காயங்களைக் குணப்படுத்தவல்லது :-**

நைஜீரியாவிலுள்ள டாக்டர்கள் தேன்சிகிச்சை கொடுப்பதில் பெரும் வெற்றி கண்டிருக்கின்றார்கள் என பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது. டாக்டர் ஸ்பென்ஸர் என்பவர் 3 ஆண்டுகளுக்குள் 59 நோயாளிகளுக்கு தேனை வைத்தே சிகிச்சையளித்திருக்கின்றார். தீக்காயம்பட்டவர்கள், நீண்டகாலம் படுக்கைப்புண்களால் அவதிப்பட்டவர்கள், பலவகையான அல்ஸர்களினால் துன்பமடைந்தவர்கள் அனைவரும் இவரிடமே தேன்சிகிச்சை பெற்றுக் குணமடைந்தார்கள்.

**நீண்டகாலம் பழுதடையாமல் இருப்பது :-**

தேனில் தீங்கு பயக்கும் பக்டீரியாவை அழிக்கும் சக்தியுள்ளது. இதனால்தான் பண்டைக்காலத்தில் இறந்தவர்களின் உடலை தேனில் வைத்து நீண்ட நாள்கள் பாதுகாத்தனர். மறைந்த மாவீரன் அலெக்சாண்டருடைய உடல்கூட மத்தியகிழக்கு ஆசியாவிலிருந்து தேனில் வைத்து பாதுகாக்கப்பட்டே மாஸிடோனியாவுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

தேனை பக்டீரியாக்கள் தாக்கி எளிதில் கெடவைக்க முடியாது. எவ்வளவு காலம் சென்றாலும் இதன் ஜீவசத்துக்கள் ஒரு சிறிதும் குறைவதில்லை. கிசே என்னுமிடத்தில் உள்ள ஒரு பிரமிட்டில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வைக்கப்பட்ட தேன் கலசத்தை எடுத்துப் பார்த்தபோது தேன் கெட்டுப் போகாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாம்.

மேலைநாட்டின் தத்துவஞானி முதல் நம்நாட்டு சித்தர்வரை பயன்படுத்திப் பயனடைந்த சர்வரோக நிவாரணியாகிய தேனை நாமும் கண்டிப்பாக நித்தமும் பயன்படுத்திப் பலமடைவோம்.

*"ஒருவன் அகத்தைத் தேனினாலும்*
*புறத்தை எண்ணெயினாலும் முழுகவைத்தால்*
*நீண்டகாலம் உடல்நலத்துடன் உயிர்வாழமுடியும்"*

- தத்துவஞானி டெமாக்ரிட்டஸ் -

*தொகுப்பு:-கௌரி குணரட்ணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மொழி

## உங்கள் கவிதைகள்...

ஆணும் பெண்ணுமாய்
அகிலத்தை அகழ்ந்தெடுத்து
அணுகுண்டு அண்டிடாமல்
அடைக்கலமாய் எங்கு வைப்பீர்?

— சி. சிவா —
வட்டுக்கோட்டை.

★ ★ ★

என்னில்
விலா எலும்பு எடுத்த
பின்பும் கேட்டது
என்னில் பாதி!
கொடுத்த பின்பும்,
சுமையில்
எனக்குப் பாதி.
சிவ சிவ
நீயும் அப்படி!
நானும் அப்படி!!

— சுடலையாண்டி —

காதலின் வலிமையைக்
காட்ட எமக்கு
வேறுவழிதெரியவில்லை...

— சி. மதி —

சுமைகளும் உந்தனுக்கு
சுகமாகிப்
போனதனால்தான்...
சக்திக்கு அதிகமான
சரித்திரமாய் இன்றுநீ...!!

பொலிகையூர் சுக சிந்துதாசன்

★ ★ ★

ஏலம் போகும் ஆணும்
ஏலம் போடும் பெண்ணும்
ஏந்தும் அவனியிது
ஏது எமக்கு வாழ்வு?

— ஆ. முகுந்தன் —

★ ★ ★

அர்த்த நாரீசா
அகிலம் படும்
அவலங்களை
அடியோடு அகற்ற —

உன் கருணை
உருப்படுமா?
உன் தாண்டவம்
உயிர் கொடுக்குமா?

நாகமணி மகேந்திரலிங்கம்

★ ★ ★

பாரினில்
பாதி சுமந்தாலும்
சீதனம் உனக்கு
சிறைதான்!

— ஜெ. கவிதா —

அக்கிரமங்களையும்,
ஆக்கங்களையும்,
போராட்டங்களையும்,
பயங்களையும்
சுமந்தபடி சுற்றும்
பூமிப்பந்தை
அவனும்...
அவளும்...
அவர்களாக மாறி
ஏந்திக்
கொண்டிருக்கிறார்கள்...

— நட்ஷேத்ரா —
உடுப்பிட்டி.

★ ★ ★

மண்
பாரம் தாங்க — பெண்
பாகம் பாதி — கண்
ஈரம் தேங்க — இவள்
சோகம் மீதி.

— நிலாப்பையன் —

★ ★ ★

செய்த பாவம்
தொடர்கிறது.
பிராயச்சித்தம் தேடி
ஆதாமும் ஏவாளும்
பூமியைச் சுமந்தபடி...

— பாபா —

★ ★ ★

ஏய்! நிறுத்துங்கள்.
நீங்கள் கிரகங்களைக்
காவ முடிந்தால்......
எங்கள் சோதிடரின்
எதிர்காலம் என்னாவது?


— சாரா —

★ ★ ★

நில் மனிதனே!
நாட்டைச் சுரண்டினாய்...
நாம் பொறுத்தோம்;
இன்று
பூமியை
கவர்ந்துகொண்டு
எங்கே போகிறாய்?
நீயும் உன் மனைவியும்
சுகமாய் வாழவா?

— வ. சசிகுமார் —
சுன்னாகம் தெற்கு.

## மௌன மொழி -21



உங்கள் கவிதைக்கான எங்கள் ஓவியம் இது.

உலகத்தின் சுமைகள்
உறுத்திக் கொண்டிருந்தாலும்
உங்களின் பயணம் — என்றும்
உறுதியாயிருக்கட்டும்.

— ம. மோகன்ராஜ் —
சுச்சமோட்டை.

★ ★ ★



பாரதி கண்ட புதுமைப் பெண்ணே!
பாரினைத் தாங்கும் பங்காளியாய் — நீ
படத்தில் மட்டுமல்ல
நிஜத்திலும் வேண்டும்!

— எழுவையூர் நேசன் —

தம்பி......!
தனித்து நின்றால் — உன்
நிழலும் பாரம் — அவளுடன்
நீயும் சேர்ந்தால் — பூமி
தலையிலும் ஏறும்!

— ஊர்க்குருவி —

கண்ணினைக் காக்கும் இமைதனைப் போல காசினியில்
மண்ணினை வாழ வைக்கும் மாண்புறு பெண்ணினமே
ஆணுடன் பெண்ணும் அர்த்தநாரீஸ்வரர் போல
இணைந்து
மாண்புடன் ஞாலம்தனைக் காத்திட மனமது
மகிழ்ந்திடுமே.

— சோ. குமுதினி —

★ ★ ★

நேற்றுவரை......
நீயெனை
சுமந்து
சுழன்று வந்தாய்......
இன்றெம்மவர் கரம்
எழுவானை திசைமாற்றும்!
புதிய விடியல்கள்
அஸ்தமனத் திசைகளிலிருந்துகூட
ஆரம்பிக்கலாம் அதிசயமில்லை!

— கிராஞ்சியூரான் —

★ ★ ★

ஓசோன் படையை
கறையான் அரிக்கும்
ஆட்கொல்லி எயிட்ஸோ
உயிர்க் குருதியை
உறிஞ்சும்
கொடிய யுத்தமோ
இரத்தம் சுவைக்கும்
இரக்கமுள்ள இறைவனே!
தப்பிப் பிழைக்குமா — எம்
தாயான பூமி?

— ச. விஜே —
ஆழியவளை

ஆணும் பெண்ணுமாய்
தனித்தபோது — என்னால்
இந்த உலகில்
சுமக்கத்தான் முடிந்தது.
ஆனால்
ஆணுக்குள் பெண்ணாய்
அர்த்தநாரியானபோது
இந்த உலகையே
சுமக்க முடிகிறது

— பிரதீப் —

★ ★ ★

துயர் நிறைந்த பூமியைத் தூக்கி
தூர எறிந்துவிட்டு — இனிநாம்
செவ்வாயில் சென்று
குடியேறுவோம் வா!

— இ. தர்ஷன் —

★ ★ ★

உண்மை புரிகிறதா?
உலகைச் சுமக்கின்றது
அர்த்தநாரீஸ்வரம்!
இரண்டு கைகள்
இணைந்து கொண்டதால்
பலம் வளர்ந்தது!
மனம் நிறைந்தது!
உலகம் சுமையல்ல
உங்கள் கைகளுக்கு...

— த. தர்மதா —

★ ★ ★

உலகம் உன்னிடம்!
நாளை மலரும் நூற்றாண்டில்
என்ன சாதனை செய்யப் போகிறாய்..?

— சா. இரஞ்சினி —
மட்டுவில் வடக்கு.

★ ★ ★

யுத்த மேகங்கள்
நித்தமிங்கு குண்டுமழை
சத்தமிட்டுக் கேட்டால்
சாளரமும் உயிர்பறிக்கும்!
தீ(ர்)வுப் பொதிசுமக்க
தேடினோம் ஒருவரில்லை;
அர்த்தநாரி வடிவெடுத்து
அகிலத்தைச் சுமக்கின்ற
வித்தையொன்று தானிங்கு
வேண்டிக் கிடக்கிறது!!

— நயினை இராகுலன் —

★ ★ ★

ஆணும் பெண்ணும்
இணைந்தால்
உயிர்களை மட்டுமல்ல
உலகையும்
படைக்கலாம்

— செ. அற்புதன் —
இணுவில்.

★ ★ ★

பூமிப்பந்தில் புதைகுழி கூடி
ஆவிகள் எழுந்து அந்தரிக்கிறதோ
பாவி மனிதா பண்பினைப் பேணு
இன்றேல்,
தாவி மீண்டும் மரத்தில் ஏறு!

— மானிப்பூர் ரட்ணேஸ் —

அன்பே கிலாரி!
நான் பாதி நீ பாதியானபோது
நம் கையில் உலகம் — பின்
நான் பாதி 'மொனிக்கா'
மீதியானபோது
என் தலையில் (உ/க)லகம்!

— கிளின்ரன் —

ஆடிப்பாடி வேலை செய்தால்
அலுப்பிருக்காது;
ஆணும் பெண்ணும் சேர்ந்திருக்கச்
சுமை தெரியாது.

— ச. குணாளினி —
சங்கத்தானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தையும் தாயும்

பலமும் ஆரோக்கியமு மான குழந்தை ஒன்றையே தாய் பெற்றெடுத்து வளர்க்க விரும்புவாள். தாயின் கருப்பையில் ஒரு புள்ளி அளவாகத் தோன்றும் கரு, பத்து மாதங்களாக வளர்ந்து குழந்தையாக பிறந்து வெளி யுலகிற்கு வருகின்றது. இது முதலில் தாயிடமிருந்து பெறும்பாலையே உணவாக கக் கொண்டு வளருகின்றது. இதற்கு முக்கியமாக ஒரு தாய் மிகவும் ஆரோக்கிய மாக இருத்தல் இன்றியமை யாதது ஆகும்.

தாய் பலவீனமடைந்து இருந்தால் குழந்தையும் பல வீனமடைந்துவிடும். இத னால் குழந்தை, நோயாளி யாகித் தாய்ப்பாலை உறிஞ் சிக் குடிக்கவே பலமற்றதாகி விடும். குழந்தை பாலைப் போதியளவு குடிக்காவிட் டால் போஷாக்குக் குறைந்து வளர்ச்சி தடைப்பட்டுப் பலவீனமடைந்து விடும்.

குழந்தை பிறந்து அரை மணி நேரத்துள் குழந்தைக் குப் பால் கொடுக்க வேண் டும். தாய் தன் கைகளையும் முலைக் காம்புகளையும் கழு விய பின் தனது முதற் பாலைக் குழந்தைக்குக் கொடுக்கலாம். முதற்பால் ஒரு குழந்தைக்கு நோய் களைத் தடுக்கும சக்தியைக் கொடுக்கும். இந்த முதற் பால் குழந்தைக்கு ஏற்ற தல்ல என எண்ணுவது தவ றாகும்.

குழந்தையொன்று பெற் றுக்கொள்ளும் இயற்கை யான —போஷாக்கு நிறைந்த —சுத்தமான—செலவு அற்ற —ஒரு முக்கியஉணவு தாய்ப் பாலாகும். தாய்ப்பாலை ஒரு குழந்தைக்கு ஊட்டும் போது தாய்க்கும் சேய்க்கும் உள்ள பிணைப்பு அதிகரிக்கின்றது.

- ஏ. சி. மத்தியூஸ் -
(திட்டமிடல் அதிகாரி— சுகாதாரம், செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணம்.)

குழந்தையொன்று கருத் தரித்த நாளிலிருந்தே ஒரு தாய் பிறக்கப்போகும் தன் குழந்தைக்குப் பாலூட்ட தன்னைத் தயார் படுத்திக் கொள்ளவேண்டும்.

தாய்ப்பாலைக் கொடுக்கும் தாயிடம் பால் குறைவாகக் காணப்பட்டால் தாய்ப்பால் கொடுப்பதோடு பசுப்பாலை யும் சேர்த்துக்கொடுக்கலாம்.

குழந்தைக்கு நீர் மிகவும் அவசியமானதாகும். சுட வைத்து ஆறிய நீரே குழந் தைக்கு கொடுக்கப்பட வேண் டும். ஒரு நாளைக்கு முதல் மூன்று அல்லதுநான்குதடவை கள் நீர் கொடுக்க வேண் டும். அசுத்தமான நீரைக் குடிப்பதால் வாந்திபேதி, நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட இட முண்டு.

மூன்று மாதத்திலிருந்து மூன்று வருடங்கள் வரை வயதுடைய குழந்தைகளுக்கு பாலைத் தவிர வேறு பானங் களையும் கொடுக்கலாம். பழச்சாறு, கீரைவகை, அரி சிக் கஞ்சி என்பன கொடுக்க லாம். தக்காளி, பழச்சாறு என்பவற்றில் உயிர்ச்சத்துக் கள் உண்டு. இவை நோயைத் தடுக்கும்.

குழந்தை ஒன்றுக்கு போதியஅளவு தாய்ப்பாலும் போதிய அளவு போஷாக் கான உணவும் (உதாரண மாக சோறு கடைந்த கஞ்சி, அவித்துக் கடைந்த பருப்பு, சோயா, அரை அவியல் முட்டை) கொடுக்காவிடில் அதனுடைய உடல் வளர்ச்சி யும், அறிவு வளர்ச்சியும் குன்றிவிடும். திரிபோஷாவை

(XV ஆம் பக்கம் பார்க்க)

# இரண்டு பூசினிக்காய்

ஊர் தலையாரியிடம் ஒரு பெரிய பூசனித் தோட் டம் இருந்தது. அந்த வருஷம் நல்ல விளைச்சல். முதல் விளைஞ்ச இரண்டு பெரிய பூசனிக்காய்களை அந்தக் கிரா மத்திலுள்ள இரண்டு நல்ல மனுஷருக்கு கொடுக்க வேண்டு மென அவர் விரும்பினார்.

கிராமத்திலுள்ள உபாத்தியார்களே அந்தச் சன் மானத்துக்குப் பொருத்தமானவர் என்று அவர் நினைத் தார். காசு வாங்காமல் தொண்டு செய்யும் அவர்களுக்கு கைமாறு செய்வதற்கு அவர் அந்த உபாயத்தைக் கையாண் டார். சடையன் என்ற தனது வேலையாளை அனுப்பி தனது தோட்டத்திலுள்ள இரண்டு பெரிய பூசனிக்காய் களை பிடுங்கிக்கொண்டு வரச்சொன்னார்.



இரண்டு பூசனிக்காய்களுள்ளும் சிறிய துவாரத்தை ஏற்படுத்தி அவற்றினுள்ளே வெள்ளிக்காசுகளைப் போட்டு நிரப்பினார். ஏனென்றால் காசு என்று கொடுத்தால் உபாத்தியார் இருவரும் வாங்கமாட்டார்கள். இப்படிக் கொடுத்தால் அவர்கள் எப்படியும் வாங்கிவிடுவார்கள் என்று தலையாரி எண்ணினார்.

**யாழ்ப்பாணத்து நாட்டார் கதைகள்**

மறுநாள் காலை அவர்களைத் தமதுவீட்டுக்கு வரும்படி தலை யாரி அன்புடன் அழைத்தார். ஓர் ஆசிரியர் குறித்தநேரத் துக்குத் தலையாரி வீட்டுக்கு வந்துவிட்டார். மற்ற ஆசிரியர் அவசரமாக வெளியூர் போகவேண்டியிருந்தமையால் குறித்த நேரத்துக்கு வரமுடியவில்லை.

முதல் ஆசிரியர் தலையாரி வீட்டுக்கு போவதைக் கண்டு அந்த ஊரிலுள்ள பொன்னுச்சாமி என்ற சோம் பேறியும் அங்கே நுழைந்தார். தலையாரி ஆசிரியரை வணங் கித் தன்னுடைய தோட்டத்தில் விளைந்த பூசினிக்காயை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று இரண்டு பூசினிக்காய் களுள் ஒன்றை அன்புடன் எடுத்துக் கொடுத்தார்.

மற்றைய பூசினிக்காயைத் தனக்குத்தரும்படி பொன்னு சாமி கேட்டார். ஆசிரியருக்கு முன்னால் தனது கொடைச் சிறப்பைக் காட்டமுயன்ற தலையாரி மற்றைய பூசினிக் காயை பொன்னுசாமிக்கு கொடுத்தார்.

ஆசிரியரும் பொன்னுசாமியும் பூசினிக்காய்களுடன் தெருவில் வந்து கொண்டிருந்தனர். அவ்வழியால் வந்த ஒரு வியாபாரி பூசினிக்காய்களைத் தமக்குத் தரும்படி கேட் டான். அன்புடன் தந்த பொருளை விற்க முடியாது என்று ஆசிரியர் சொன்னார். பொன்னுசாமி தனது பூசினிக் காயைக் காசுக்கு விற்றுவிட்டான். அதனுள்ளே வெள்ளிக் காசுகள் இருப்பது பொன்னுசாமிக்கு தெரியாது!

தொகுப்பு: கலாநிதி சபா. ஜெயராசா.

# துடுப்பாட்ட....

(VI ஆம் பக்கத் தொடர்)

முதல் வீரராகவுமானார். இத்துடன் ஸிம்பாப்வே அணிக்கெதிராக அஜய் ஜடேஜாவுடன் சோடி சேர்ந்து மூன்றாவது விக் கெட் இணைப்பு ஓட்டச் சாதனையாக 275 ஓட்டங் களையும் பெற்றார். இவ் வாட்டத்தில் அஸாருதீன் ஆட்டமிழக்காமற் பெற்ற 153 ஓட்டங்கள், கபில்தேவின் 175-க்குப் பின் இந்திய வீரர் ஒருவரின் அதிக ஓட்ட எண் ணிக்கை ஆகும்.

1998 இன் ஆரம்பத்தில் டெண்டுல்கரிடமிருந்து இந் திய அணியின் தலைமைப் பதவி பறித்தெடுக்கப்பட்டு அஸாருதீனிடம் மீள வழங் கப்பட்டது. இதற்குக் கார ணம் டெண்டுல்கரின் தலை மையின் கீழ் இந்திய அணி சோபிக்காமைதான். டெண் டுல்கரின் தலைமையில் இந் தியா பல தோல்விகளைக் கண்டது. அதிலும் ஒரு நாள் போட்டிகளில் இலங்கை யிடம் இந்தியா அடுத்த டுத்து மண்கவ்வியது. முடிவு? அஸாருதீனுக்கு மீண்டும் தலைமை.

ஒரு காலத்தில் பெரிய பையன்களின் அணி என்று கேலியாகப் பேசப்பட்ட இலங்கை அணி, இந்திய அணி யைப் பல தடவை மண் கவ்வ வைத்ததென்றால்...... இலங்கை அணியின் பெரும் முன்னேற்றப் பாய்ச்சலைக் கற்பனை செய்து கொள்ள லாம்.

அவ் வகையில் இலங்கையிற் துடுப்பாட்டம் நடந்துவந்த பாதையினைத் திரும்பிப் பார்ப்போம்.

(வளரும்)

# இந்த வார இராசி..,

(IV ஆம் பக்கத் தொடர்)


செலவுகள் ஏற்படும். இட மாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் பொருள் விஷ யங்களில் அவதானமாக இருக்கவும். வெளிப் பகை களைச் சமாளிக்கலாம். உள் புகைச்சலால் பல மனத்தாக் கங்கள் வரலாம். எதிர்ப் பாலாரிடமிருந்து எதிர்ப்புக் கள் வரலாம். சளி, வாத— வாய்வுத் தொல்லை, திடீர், திடீரென பொருள் இழப்பு, மனவேதனை, யோசனை என்பன வரும். எனவே தெய்வ வழிபாடு செய்து வரவும். அதனால் மன அமைதி கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: சனி, திங்கள், வியாழன்.

★

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 89




சொற்சிலம்பம் இல. 89
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................

விலாசம்: ..............................................

..............................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி: 19 — 02 — 1999

**இடமிருந்து வலம்**

1. தேசத்தின் தலைவர். 6. குழு. 7. கட்டுமஸ் தான தன்மை. 8. ருசி. 9. தீயில் வாட்டு. 10. பிணக்குப் பண்ணுதல். 13. காயாகவும் பழமாக வும் சமையலுக்கு உதவுவது. 14. துவையல். 16. காப்புறுதி மூலம் கிடைப்பது. 17. விருந்தினன். 19. பெருமை. 21. இற. 22. மகன்.

**மேலிருந்து கீழ்**

1. நால்வர் பாடியது. 2. அத்தாட்சி கூறுபவன். 3. வலிமையான. 4. பேய். 5. வசைமாரி பொழி தல். 6. கம்பரின் மகன். 11. ஸ்நானம் செய். 12. செருக்கான தோற்றம். 14. உள்ளீடு அற்ற நெல். 15. திரைச்சீலை, 17. அன்னை. 18. வலிமை. 20. பிரி.

### சொற்சிலம்பம் — 87 விடைகள்

**இடமிருந்து வலம்**

1. நாசகன். 2. சுவாகு. 7. யமன். 8. அரசன். 9. கன்னமூலம். 11. மிடறு. 12. மித. 13. கடன். 14. பகல். 15. வாடல். 16. குறைவு. 17. தாவு. 18. முத்தம் தா. 20. பின்னை. 21. தில்.

**மேலிருந்து கீழ்**

1. நாயகன். 2. சமன். 3. கன்னமிடல். 4. சுரம். 5. வாச. 6. குன்றுதல். 8. அலறு. 10. மூடன். 12. மிகவும். 13. கடவுள். 14. பறைதல். 15. வாதாபி. 16. குத்தி. 19. தாலி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப் போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற் பரிசு: ப. சத்தியராகவன், 4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

★ இரண்டாம் பரிசு: கந்தசாமி மயூரன், தரம் 8 'ஏ' மகாஜனக் கல்லூரி, மருதனார்மடம்.

★ மூன்றாம் பரிசு: ந. கந்தையா பிள்ளை, 145, சந்நிதி வீதி, அச்சுவேலி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி யின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா: 150: 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா: 100: 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா: 50: 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 88 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிக் கூண்டில் பாரதியை நாம் நிறுத்தியது நியாயம் தானா?

தமிழர்களாகிய நாங்கள் குற்றம் கண்டுபிடித்தே புகழ் பெறுபவர்கள். எங்கள் கழுகுக் கண்கள் பாரதியிலும் பட்டுவிட்டன.

கடந்த 23-01-1999 ஆம் திகதி சஞ்சீவியிலே 'வித்துவான் பதில்கள்' பகுதியிலே ஒருவர் ''மெல்லத் தமிழினிச் சாகும் என்றாரே பாரதியார் அதுஉண்மையாகிவிடுமோ?'' என்று கேட்டிருந்தார்.

பதில் அளித்த வித்துவானும் அக்கேள்வியில் இருந்த தவறினைச் சுட்டிக்காட்டாது 'மெல்லத் தமிழ் இனிச் சாகுமா? அல்லது அச் சாகுமா என்றாரா?' என நகைச்சுவையாகவும், மூல பாடச் சிந்தனையைக் கிளறி விட்டும் தப்பிவிட்டார்.

உண்மையிலே ''மெல்லத் தமிழினிச் சாகும்'' என்று கூறியவர் பாரதியாரா?

அண்மையிலே (சென்ற ஆண்டு) நடந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய கல்லூரி ஒன்றின் முதல்வர்—தமிழ் அறிந்தவரென பலராலும் கருதப்படுபவர்—ஒருவர் கூட ''மெல்லத் தமிழினிச் சாகும் என்று பாரதி கூறினான்; அது பொய்த்துவிடும்—''என்ற வகையிலே பேசினார்.

இன்னும் இவர்போலப் பலரும் பாரதியே 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று கூறியதாகக் குறிப்பிட்டு குறிப்பிட்டுப் பாரதியைக் குற்றவாளிக் கூண் டி லே நிறுத்தி வைக்கிறார்கள்.

சென்ற நூற்றாண்டிலே இருந்த பாரதியின் பாடல்களிலே கூட, உண்மையாக மூலத்தைக் காணாத படிப்பு ஆக மாறி வருகிறது இன்றைய கல்வி.

உண்மை என்னவென்றால் பராதிக்கு முன்பிருந்த ஒருவர் ''மெல்லத்தமிழினிச் சாகும்'' என்றும் ''மேற்கு நாட்டு மொழிகளே இப்பூமியிலே ஓங்கும்'' என்றும் கூறியிருந்தார். அதை எடுத்துக் காட்டி கண்டிக்கப்போன பாரதியார் மீதே நாம் அக் குற்றத்தைச் சுமத்தி விட்டோம். நாம் மகா சாமர்த்தியவான்கள்தானே!

'தமிழ்த்தாய்' என்னும் தலைப்பில் உள்ள அப்பாடலில் உள்ள ஒரு பகுதி இது தான்;–

''புத்தம் புதிய கலைகள்
— பஞ்ச
பூதச் செயல்களின்
நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே
— அந்த
மேன்மைக் கலைகள்
தமிழினில் இல்லை
சொல்லவும் கூடுவதில்லை
— அவை
சொல்லுந் திறமை தமிழ்
மொழிக்கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்
— அந்த
மேற்கு மொழிகள்
புவிமிசை யோங்கும்

என்றந்தப் பேதை
உரைத்தான் —ஆ ...!
இந்த வசையெனக்
கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும்
— கலைச்
செல்வங்கள் யாவும்
கொணர்ந்திங்குசேர்ப்பீர்''

தமிழ்த்தாய் கூறுவது போல பாரதி பாடியுள்ள இப்பாடலில் உள்ள அந்த வரி பாரதிக்கு முன்பிருந்த ஒருவர் கூறியதே ஆகும். அதைக் காட்டுவதாக ''என்றந்தப் பேதை உரைத்தான்'' என வீராவேசத்தோடு சீறுகிறாரே பாரதி! நாம் ஏன் எங்கள் தலைமைக் கவிஞன் மீது சீறுவான்? எங்களுக்கு புதிய பாதை திறந்து விட்டவன் பாரதி. தமிழுக்கு புதுவாழ்வு அளித்தவன் அவன். அவனில் போய் இவ்வாறு ஒரு குற்றமா?

எம்மால்தான் மெல்லத் தமிழினி .....

**கரவெட்டி.** **பொ. கமலரூபன்.**

---

## 'உதயன்' - 'சஞ்சீவி' இதழ்கள் இல்லாது விட்டால்....!

யாழ். குடாநாட்டில் 1996-க்கு முன்னர் ஈழநாடு, ஈழநாதம், முரசொலி, Saturday Review, Hot Spring, உதயன்— சஞ்சீவி போன்ற பல பத்திரிகைகள் வெளிவந்தன. பல பத்திரிகைகளும் பிரசுரிக்கப்பட்ட இடத்தில் தற்பொழுது உதயன் மாத்திரமே மக்கள் சேவையிலுள்ளது. பல பத்திரிகைகள் ஆற்றிய பணியைத் தற்பொழுது உதயன் மாத்திரமே செய்கிறது.

காலத்தின் கட்டாயம் எமக்கு முக்கிய செய்திகளை அறியவேண்டிய தேவை இருக்கிறது. போர் பற்றிய செய்தி, காணாமற் போனோர் விவரம், படையினரின் ஊரடங்கு போன்ற அறிவுறுத்தல்கள், போர் பற்றிய விவரங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள் போன்றவற்றை அறிய வேண்டிய தேவையிருக்கின்றது. மற்றும் உள்ளூர் செய்திகள், நாட்டின் நிலைமை, சர்வதேச நிலைவரம் ஆகியவை பற்றியும் அறியத் தருவதோடு எமது விளம்பரங்களின் ஊடகமாகவும் ஸ்தாபனங்களின் ஆளணி வெற்றிடங்கள் போன்ற தகவல்களையும் அறியத் தருகிறது உதயன் — சஞ்சீவி.

இக்கட்டுக்கு மத்தியிலும் தளராது பத்திரிகை பிரசுரம் செய்து வரும் உதயன் நிறுவனத்தினர் மக்களின் பாராட்டுதலுக்குரியவர்களாவர். குடாநாட்டில் இத்தகைய ஒரு செய்தித்தாளைப் பிரசுரிப்பது ஓர் அரியசாதனையாகும்.

'உதயன்' இல்லாது விட்டால் எமது கதிஎன்ன? உதயன் — சஞ்சீவியை ஏசுவோர் சிந்திப்பார்களாக!

**இணுவில்.** **பாலா நீரஜா.**

# உங்கள் உள்ளத்திலிருந்து

## மங்கையர் பகுதி எங்கே?

மங்கையர் பகுதியும் சஞ்சீவியில் இடம்பெறும் என்று உறுதியளித்திருந்தீர்கள். ஆனால் நீங்கள் உறுதியளித்து பல வாரங்கள் தண்டியாகி விட்டது. இன்னும் அதனைப் காணோமே? எங்கே மங்கையர் பகுதி?

**கொக்குவில்.** **ரி. ஸ்வப்னா.**

★ ★ ★

## இதிகாசக் கதைகளைத் தொடர்ந்து பிரசுரியுங்கள்!

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பல கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாச கதைகளை சஞ்சீவியில் வாராவாரம் அங்கம் அங்கமாக வெளியிட்டால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆவன செய்வீர்களா?

**பளை.** **க. பாலசிங்கம்.**

★ ★ ★

## முற்றிலும் கணனிப்பதிப்பு; வாசகரின் எதிர்பார்ப்பு அதுவே!

பயனுள்ள பல தகவல்களை தாங்கி வரும் உதயன் — சஞ்சீவியே! பெரும் இடர்களின் மத்தியிலும் நீ மார்தட்டி உயர்ந்து நிற்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். சஞ்சீவி விலை உயர்வு வாசகர்கள் மனதைத் தளர வைக்கவில்லை. என்றாலும் உனது பதிப்பை முற்றிலும் கணனிப் பதிப்பில் பிரசுரித்தால் என்ன?

'மௌனமொழி' திறம்படப் பேசுகின்றது. 'கவிதை முற்றம்' உன் இதழுக்கு பெரிதும் சுவையூட்டுகின்றது.

மு. சிவனேசனின் 'வெள்ளைறோஜா முள், முடிவுற்றமை கவலைதான். அவர் தொடர்ந்து இப்படியான சிறு கதைகளைத் தரமாட்டாரா?

**கோண்டாவில்.** **பிருந்தா முருகையா.**

★ ★ ★

## காதல் திரைக்கு வெளியே வாருங்கள்!

''ஒழுங்கைகளில் காதலர்கள் சந்தித்துப் பேசுவது தவறா?'' என்ற சாரப்பட ''அச்சுவேலி அன்பர்'' என்ற பெயரில் ஒரு காதல் பித்தர் எழுதிய காதல் கதையைப் படித்து மிகவும் கவலையடைந்தேன்.

அன்பரே! உமது காதல் கதையைப் படித்த சின்னஞ்சிறு இளசுகளும் அட நாங்களும் காதலித்தால் என்ன? அதிலும் ஒழுங்கைகளில் மறைந்து நின்று காதலித்தால் என்ன? — என்றெண்ணி பாஷனுக்குக் காதலிக்கத் தொடங்கி விடுவார்கள் போல் உள்ளதே!

அதுமட்டுமன்றி உம்மைப் போன்ற உண்மைக் காதலர்கள் (?) பலரும் அனுபவமற்ற ஒழுங்கைகளிலிருந்து கதைப்பதை நியாயம் என்று அனுமதித்தால் அதுவே பார்க்கும் இளசுகளைத் தூண்டி அவையும் ஆர்த்த வாளியைப் பின் பற்றி ஒழுங்கைகளில் கூட வழி செய்து விடுமே!

ஏன் எமது பெற்றோர் அல்லது மூத்த சகோதரர்கள் எங்களை (காதலர்களை) ஒருவரோடொருவர் கதைக்க விடாமல் தடுக்கிறார்கள்?

இதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

தமது வாழ்வில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை — துன்பங்களை — தவறுகளை — தமது பிள்ளைகள் அல்லது சகோதரர்கள் பெற்றுவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலேயே அவர்கள் அந்தத் தடையை விதிக்கின்றார்கள். இதனைப் புரியாது தாம் எடுத்த முடிவுதான் சரி என நினைத்து தம் வழியில் சென்று படுகுழியில் விழுந்த பிற்பாடுதான் இளசுகளுக்குப் புரியும் தாம் செய்தது மிகப் பெரிய தவறென்று!

இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொரு குடும்பத்திலுமே பல பிரச்சினைகள். அத்தகைய பிரச்சினைகளுக்குரிய அடிப்படையே புரிந்துணர்வு இன்மைதான்!

புரிந்துணர்வற்ற — குடும்பப் பிரச்சினை தலைதூக்கி நிற்கும் — வீடுகளை எடுத்துப் பார்த்தால் அங்கு பிரச்சினைக்குக் காரணம் அனேகமாகக் காதலித்து மணம் செய்த மூத்த உறுப்பினர்களாகவே இருக்கும்.

ஆரம்பத்தில் தேனாய் இனித்த காதல் திருமணத்தின் பின் வேம்பாய்க் கசப்பது ஏன்? இதற்கு காரணம் இளமைத் துடிப்பின் வேகத்தில் — மனப் புரிந்துணர்வற்ற நிலையில் — ஆங்காங்கே வீதியோரங்களில் உண்மைக் காதலர்கள் எடுத்த — எதிர் காலத்தை பற்றித்திட்டமிடாத — முடிவு தான்.

எனவே வீணாக வீதியோரங்களில் பொழுதைக் கழிக்கும் காதலர்களே! அந்நேரத்தை உங்களது எதிர்காலத்துக்காக ஆக்க பூர்வமாகச் செலவிடுங்கள். அது நன்மை பயக்கும்.

**கோண்டாவில்.** **க. தமிழ்வாணி.**

★ ★ ★

## உயர்தரக் கல்வியின்பால் சற்று கவனம் செலுத்துக!

சகல வர்க்கத்தினரதும் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் விதத்தில் 'சஞ்சீவி' வெளியாவது வரவேற்கத் தக்கது மட்டுமன்றி போற்றுதற்குமுரிய விடயமாகும்.

எனினும் உயர்தர பாடசாலை மாணவர்களின் எதிர்பார்ப்புகளையும் முழுமையாக ஈடுசெய்யும் வகையில் 'சஞ்சீவி' யில் உயர்தர, சாதாரண தர கல்விசார்பான பாடங்களின் சுருக்க— விளக்கங்கள் வினாக்கள், போன்றவற்றையும் சேர்ப்பது நல்லது. அது 'சஞ்சீவியை' மேலும் பிரபலம் அடைய வைப்பதோடு உயர்தர, சாதாரண தரப் பரீட்சைகள் குறித்து ஏக்கத்துடன் இருக்கும் மாணவர்களுக்கு உன்னத வழிகாட்டியாகவும் அமையும் என்பது திண்ணம். ஆகவே அதற்குக் கணிசமான இடம் கொடுங்கள்.

**உடுப்பிட்டி.** **சா. துருபதன்.**

★ ★ ★

## வியக்க வைக்கும் வித்துவான்

பூமிக்கு ஒளி தரும் சூரியனைப்போல் எம் வாழ்வில் ஒளி தரும் 'உதயன்'—'சஞ்சீவியே'!

நீ புதுப் பொலிவோடு வருவது எமக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. கவிதை முற்றம் களிப்படையச் செய்கிறது. 23 - 01 – 1999 இல் வெளியான சிங்கை ஆரியனின் ''நவீன சகலகலாவல்லி மாலை'' அருமை. ''போதி விடுதூது''ம் சிறப்பாக இருந்தது. நல்ல கவிதைகளைக் குப்பைகள் என்று கூறுபவர்களை நினைக்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது;

கதிர்காமநாதனின் ''நீ அதுபோல் ஆகிவிடுவாய்...'' சிறுகதை அபாரம்.

பல பிரச்சினைகளின் மத்தியிலும் சஞ்சீவியும் அதன் எழுத்தாளர்களும் துணிவுடன் உண்மைகளை எடுத்துரைப்பது சஞ்சீவிக்கே உரிய ஒரு தனிச் சிறப்பாகும். வித்துவத் தன்மை நிறைந்த வித்துவானின் பதில்கள் வியக்கவைக்கின்றன.

அனைத்து வாசகர்களையும் திருப்திப்படுத்தி சிறப்பான அம்சங்களைத் தாங்கிவரும் சஞ்சீவியே! நீ என்றும் சிரஞ்சீவியாக வாழ, வளர எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**மிருசுவில்.** **கு. கார்த்திகாயினி.**

★ ★ ★

## இலக்கியப் பார்வையுடன் கவிதையைப் பாருங்கள்!

'சகலகலாவல்லி மாலை' என்ற தலைப்பில் கவிதை முற்றத்தில் வெளியான கவிதை, மதத்தை இழிவுபடுத்துவதாக உள்ளதென ஒரு வாசகர் இப்பகுதியில் கண்டனம் தெரிவித்திருந்தார்.

'சகலகலாவல்லி' என்பது தெய்வத்தின் பெயரல்ல. ஆனால் அது வினைப்பெயராகக் கலைவாணியைக் குறிக்கிறது. ஆகவே அதனைப் பயன்படுத்துவது மதத்தை இழிவுபடுத்தும் செயல் எனக் கொள்வது தவறு. மேலும் எனது கவிதையில் 'சகலகலாவல்லி' என்ற பதம் சர்வவல்லமை பொருந்தியவர் என்ற பொருளுடன் ஒருவரைக் குறிக்கிறது. எந்தத் தமிழ்த் தெய்வத்தையும் அது குறிப்பிடவில்லை.

மதத்துடன் இணைக்காது, இலக்கியப் பார்வையுடன் நோக்கினால் எனது கவிதைகள் குற்றமில்லை என்பது புரியும்.

**உரும்பிராய்.** **சிங்கை ஆரியன்.**

★ ★ ★

## நேரத்துடன் சஞ்சீவியை வெளியிட வைப்பீர்களா?

கடந்த வார சஞ்சீவியில் வெளிப்புறமும், சஞ்சிகையின் உட்புறத்தில் சில பக்கங்களும் அழகாக அச்சிடப்பட்டிருந்தன. ஆனால் ஏனைய அனைத்துப் பக்கங்களும் பழைய பல்லவிதான்.

எல்லாப் பக்கங்களையும் அழகான முறையில் அச்சிட வழி செய்வீர்களா?

கடந்த வாரம் சஞ்சீவி மிகப் பிந்தியே எமது பகுதிக்குக் கிடைத்தது. காலையில் நேரத்துடன் எமது கைகளில் அதனைத் தவழ வைப்பீர்களா?

**மறவன்புலோ.** **ஜ. ஜதுர்ஷனா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிக மயக்கம் தருவது எதுவோ? மதுவா? மாதுவா? வேறு எதுவோ?

**தொட்டிலடி. ந. பிரியா.**
● வித்துவான் ஸார்! அதிக மயக்கம் தருவது எது? மதுவா? மாதுவா? வேறு எதுவோ?
✱ இந்தக் கேள்விக்கு வள்ளுவரே தீர்ப்புச் சொல்லி விட்டார். ''உள்ளக் களிதலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு.''
— என்கின்றார் உலகப் பொது மறை தந்த செந்நாப் போதகர்.
நினைத்த அளவில் களிப்பையும், கண்ட அளவில் மகிழ்ச்சியையும் தர வல்லது காமம் — தீண்டினால்தான் இன்பம் பயக்கும் என்பதல்ல.
ஆனால் கள்ளு (அல்லது வேறு ஏதேனும் மது) அருந்தினால்தான் போதை தரும். அதை நினைத்தாலோ. கண்டாலோ — போதை பிறந்து விடுவதில்லை.
எனவே நினைத்தாலேயே 'கிக்' தர வல்லதுதானே அதிக மயக்கம் தரும் போட்டியில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட வேண்டும்!

★ ★ ★

**கட்டுடை. கே சிவன்.**
● ஸார்! காதல் கடலில் மூழ்கினீர்களா? அதில் முத்து எடுத்தீர்களா? கரை தெரிந்ததா?



✱ கடல் என்று நம்பிக் குதித்தேன். சேறு என்பது பிறகுதான் புரிந்தது. சகதியில் முத்துத் தேடியதால் பித்தாகி நிற்கிறேன்.

★ ★ ★

**ஸ்கந்தபுரம். சிவகௌரி.**
● இலட்சங்களையே இலட்சியமாகக் கொள்ளும் ஆண்களைப் பற்றி......?
✱ இலட்சங்களைக் கொண்டுவரும் இலட்சுமி, தன்னை அலட்சியப்படுத்தி நடப்பதை கண்டுகொள்ளவே மாட்டான்.

★ ★ ★

**சண்டிலிப்பாய். என் ரி. மிலன்.**
● வித்துவானே! தங்கள் திருமணம் என்ன பெற்றோர் நிச்சயித்ததா? அல்லது காதல் திருமணமா?



✱ நான் யானை ரகமாக்கும். (ஹி... ஹி... யானைதானே தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டக் கூடியது...?)

★ ★ ★

**மல்லாகம். தீ. சர்மிளா.**
● வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடு போகும் ஆண்களுக்கு நீங்கள் கூறுவது என்ன?
✱ வேலை தேடுங்கள்; பணத்தைச் சம்பாதியுங்கள். வேலை எடுக்க வாய்ப்புக் கிடைத்தது என்று எய்ட்ஸைச் சம்பாதித்து விடாதீர்கள்; அவதானமாக இருங்கள்.

★ ★ ★

**சுழிபுரம். க. முகுந்தன்.**
● வித்துவான் ஐயா! எனது மனைவி யாழ். முற்றவெளி மைதானத்துக்கு அடிக்கடி செல்கிறாள். தடுக்க ஒரு வழி கூறுங்களேன்.
✱ உங்களில்தான் ஏதோ பிழை இருக்க வேண்டும். திரு(த்/ந்)திக் கொள்க. முடியாவிட்டால், வீடியோப் படத்தில் உங்கள் மனைவி விரைவில் 'கதாநாயாகி' ஆக வரப் போகின்றாள் என்று திருப்திப் பட்டுக் கொள்ளுங்கள்!

**சண்டிலிப்பாய். என். ரி. மிலன்.**
● பெண்களை ஏன் பால் நிலவுடன் ஒப்பிடுகின்றார்கள்?
✱ பால் கெட்டுப்போகக் கூடியது. நிலவு தேய்ந்து போகக் கூடியது. அதனால்தான் என்னவோ?

★ ★ ★

**நல்லூர். கணேஸ்.**
● மனைவியின் புடைவையைத் துவைக்கும் கணவன்மாரைக் குறித்து...?



✱ மனைவிக்கு பணி(ந்து) விடை செய்யும் நம்மைப் போன்ற (அப்)பாவிப் பிறவிகள்......!

★ ★ ★

**கோப்பாய். நா. மகேந்திரலிங்கம்.**
● தாய் — தாரம் ஒப்பிடுக.
✱ தாய் - என்னைப் பெற்றவள்; தாரம்—எனக்காகப் பெற்றவள்.

★ ★ ★

**கொம்மந்தறை. அருந்தவராணி**
● சமுதாயத்தைச் சிலர் கழுதை என்கிறார்களே! உண்மையா?
✱ உண்மைதான். முன்னால் போனால் முட்டும். பின்னால் போனால் உதைக்கும். சமூகத்துடன் இணைந்து பக்கத்தில் போனால் சிக்கல் இல்லை.

## வித்துவான் பதில்கள்

**இணுவில். மெண்டிஸ்**
● பெண் என்றால் பேயும் இரங்கும் என்கிறார்களே! ஆண் என்றால் யாருமே இரங்கமாட்டார்களா?
✱ ஆண் எல்லோருக்கும் 'இறங்கி' விடுவதால், யாரும் இரங்குவதில்லைப் போலும்.

★ ★ ★

**வரணியூர். எஸ். வி. சிவராஜா.**
● வித்துவான் ஸார்! தாங்கள் யாழ். மாநகர மேயராகத் தெரிவு செய்யப்பட கனவு கண்டேன். என் கனவு பலிக்குமா?
✱ உங்கள் கனவு பலித்தால் நான் பலி என்பது மட்டும் சர்வநிச்சயம்.

★ ★ ★

**தொண்டமானாறு. எஸ். ராஜீ.**
● ஓர் ஆணின் வெற்றிக்குப் பின் ஒரு பெண் இருப்பது உண்மையா?
✱ உண்மை. அனேகமான ஆண்களின் வெ(ற்)றிக்குக் காரணம் பெண்கள்தான்.

★ ★ ★

**ஈவினை. எஸ். கிட்டு.**
● ஆண்களின் உடை அணியும் சில பெண்களைக் குறித்து...?
✱ தாங்கள் மேலே என்ற மிதப்பு.

★ ★ ★

**மல்லாகம். எம். ஆர் பாபு.**
● இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர் முரளிதரன் பற்றியும் அணித்தலைவர் ரணதுங்க குறித்தும் நீங்கள் கூறுவது...?
✱ முரளி 'சுழட்டிக்' கொடுக்க ரணதுங்க 'விழுத்துகிறார்.' அவ்வளவுதான்!

★ ★ ★

**கொக்குவில் கிழக்கு. கே.ஏ. ஞானி.**
● ஆள்கள் இல்லாத வீடுகளில் ஓடுகளைக் கழற்றும் நம்மூர் திருட்டு நிபுணர்கள் குறித்து உங்கள் கருத்து...?
✱ தோல் இருக்க சுளை விழுங்கும் இல்லாடிகள் அவர்கள். ஆள்கள் இல்லாத வீடுகளில் ஓடுகளைக் கழற்றுவது அவர்களது சாதனைக்கு முன் தூசு. இருந்து பாருங்கள். ஆள்கள் இல்லாத வீடுகளின் அத்திவாரத்தைக் கூட அடையாளம் வைக்காமல் அப்புறப்படுத்தக் கூடிய அசகாய சூரர்கள் அவர்கள். சற்று அசந்தால் உமது கௌபீனமே காணாமல் போய்விடும். பிறகு ஞானியான நீர் பழனி ஆண்டியாகக் கூட நிற்க முடியாது!

★ ★ ★

**கரவெட்டி. வீ. கிருபா.**
● ஆஸ்திரேலியாவில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் ஆட்டம் எப்படி?
✱ ஆஸ்திரேலியாவில் இலங்கை அணி ஆடியதா? விட்டு விட்டு ஓடியதாக அல்லவா நான் நினைத்துக்கொண்டு இருக்கிறேன்.

★ ★ ★

**மறவன்புலோ. ரி. மாறன்.**
● பெண்கள், தமது ஆடைகளை மாற்றுவது போல ஆண்களையும் மாற்றுகின்றார்களே. இது நியாயமா?
✱ 'துவைத்து'க் 'காயப்' போடாமல் விட்டார்களே என்று சந்தோஷப்படுங்களேன்!

★ ★ ★

**அல்வாய். ரி. தாஸ்**
● குழந்தைகள் பெற்ற பெண்கள் 'மினிஸ்கேட்' அணிந்து வீதிகளில் நடமாடுவது குறித்து......!
✱ ''செந்தமிழ் நாட்டு தமிழிச்சியே சேலை கட்ட மறந்தாயோ'' என்ற பாடல் ஞாபகத்துக்கு வருகின்றது.

★ ★ ★

**கொக்குவில் எஸ். பாலு**
● எனது தகப்பனார் கோபம் வரும்போதெல்லாம் ''உன்னைக் கழுதைக்குத்தான் கட்டி வைப்பேன்'' என்கின்றாரே...!
✱ கழுதைக்கு 'எயிட்ஸ்' வராது என்ற உண்மை அவருக்குத் தெரிந்திருக்கின்றது.

★ ★ ★

**உரும்பிராய். ச. ஜனனி.**
● வித்துவான் ஸார் ஆண்கள் காதலில் தோல்வி என்றால் தாடி வளர்க்கின்றார்கள். பெண்கள் காதலில் தோல்வி என்றால் என்ன செய்யலாம்?




✱ முழுகாமல் இருக்க வேண்டியதுதான்!

**மட்டுவில். எஸ். இரஞ்சினி.**
● பணத்துக்காக மட்டும் அன்பு 'வைப்பவர்கள்' குறித்து...?
✱ எதையோ ஒன்றை எதிர்பார்த்துத் தானே 'வைப்பை' நாடுகின்றார்கள்?

★ ★ ★


**வட்டுக்கோட்டை. ந. தர்மிலன்.**
● ஆசிரியர் சோக் (Chalk) பிடிப்பதா பிரம்பு பிடிப்பதா நல்லது...?
✱ பல ஆசிரியர்கள் தமது மாணவரின் படிப்பில் அல்லாமல் பிடிப்பில் கவனமாக இருக்கின்றார்கள் — ஷோக்காகப் பிடிப்பதில்.

★ ★ ★

**நல்லூர். யோ. கவிதா.**
● சிறைக் கூடக் கைதிகளுக்கு இம்முறை பொது மன்னிப்பு இல்லையாமே... ஏன்?
✱ குடாநாட்டின் திறந்த சிறையில் கைதிகள் எண்ணிக்கை கூடிவிட்டதாம்!

★ ★ ★

**கோப்பாய். நா. மகேந்திரலிங்கம்.**
● சிரிப்பு ஒரு 'டானிக்' என்றால் அழுகை......!



✱ 'அவன் அழும்போது பனிக்கட்டி விழுகின்றதே ஏன்?'
▲ 'அது 'டைட்டானிக்' அழுகையாம்!'

✱ ஒரு 'டைட்டானிக்!'

★ ★ ★

**அளவெட்டி. எஸ். கே. குணபாலன்.**
● அரசியலுக்கும் ஆண்டி மடத்திற்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?




✱ இரண்டுமே நாணயத்தைத் தொலைத்தவர்கள் ஒதுங்கும் இடங்கள். நாணயத்தை (பணத்தை)த் தொலைத்தவர்கள் ஆண்டி மடத்தில் ஒதுங்குவர். தமது நாணயத்தை (நேர்மையை)த் தொலைத்தவர்கள் கூத்தடிக்கும் களம் அரசியல்.

★ ★ ★

**துன்னாலை. சனற்குமார்.**
● வித்துவான் ஸார்! மண்டையைப் போடும் வயதில் மணமகளைத் தேடுபவர்களைப் பற்றி......?
✱ அதுவும் மரண தேவதையை அணைக்கும் முயற்சிதானே!

★ ★ ★


**இணுவில். அ. ஐங்கரன்**
● காதல் குற்றமா? காதலிப்பது குற்றமா?
✱ அதை நம்பி இறங்குவதுதான் குற்றம்.

★ ★ ★

**அராலி. சு. நிமலன்.**
● மனைவியை நீங்கள் வைதது உண்டா?
✱ ஆம். வித்துவாட்டி என்னை வாட்டி எடுக்கும் போது மனதுக்குள் வைதது உண்டு!

★ ★ ★

**மிருசுவில். இ. தாமரைச்செல்வி.**
● அதிரடித் துடுப்பாட்ட வீரர் சனத் ஜெயசூரியாவின் அதிரடித் திருமணம் தோல்வியில் முடிந்ததற்குக் காரணம் என்னவோ...?



✱ அதிரடியைத் தாங்க முடியாத காரணமோ என்னவோ...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

## விடைகள்

VIII, IX ஆம் பக்கங்களில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### ஓவியரின் குறும்பு

1) ஆட்டின் தலைக்கு நாயின் தலை.
2) எலிக்கு யானையின் காது.
3) ஒட்டகச் சிவிங்கிக்கு யானையின் கால்கள்.
4) பன்றிக்கு குதிரை வால்.

### பத்து வித்தியாசங்கள்

1) முகில். 2) கோபுர உச்சி. 3) கோபுர யன்னல். 4) நாயின் நிறம். 5) யானையின் வால். 6) யானையில் தொங்கவிடப்பட்ட மணி. 7) யானையின் கால். 8) கட்டட யன்னல். 9) சிறுவனின் தலை மயிர். 10) பாகனின் தலைப்பாகை.

### கட்டங்களை நிரப்புங்கள்

1) எமது. 2) மரம்.
3) தும்பி. 4) விலகு.
5) லவன். 6) குன்று.
7) பிசகு. 8) சதம்.
9) கும்பி. 10) வரகு.
11) ரகம். 12) கும்பா.
13) மிகுதி. 14) குண்டு.
15) திடும்.

### கிரிக்கெட் வீரர்களைத் தெரிகிறதா?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | ஜ | கா | ளே | ஜா | ம் |
| ர | ரா | ப் | லி | வீ | ர |
| ளி | ம் | ப | ஹீ | ட | க் |
| கு | ச | ர் | வ | ன் | அ |
| றா | ன | ஸ் | வா | ர் | ஸா |
| லா | த் | நா | ஸ்ரீ | வோ | ர் |

### சோடி சேருங்கள்

★ (1 — 5) — வாத்து, துப்பாக்கி.
★ (4 — 2) — தாத்தா, தாமரை.
★ (3 — 7) — கொக்கு, குருவி.
★ (6 — 8) — சீப்பு, புகை.

# அடையாள அட்டை...

(II ஆம் பக்கத் தொடர்)

தம் எத்தனை பயணிகள் சேர்வார்கள் என்பதனை மதிப்பிடுவதிலும் அதற்கான புள்ளி விவரங்களை அறிவதிலும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கையிலுள்ள தலைமைப் பிரதிநிதி ஆர்வமாக இருந்தார்.

அனேகமாகச் செஞ்சிலுவைக்குழு 500 பயணிகள் பிரயாணம் செய்யக்கூடிய கப்பலொன்றை வாடகைக்கு ( Charter ) அமர்த்தும் என்றும் — ஒன்றுவிட்ட அடுத்த நாள் பருத்தித்துறையிலிருந்தும் கொழும்பிலிருந்தும் கப்பல் புறப்பட வசதி செய்ய முடியும் என்றும் நம்புவதாகவும் மார்க்ஸ் ஹடோன் தமது கலந்துரையாடலின் போது அறியத்தந்தார்.

எப்போது செஞ்சிலுவைக் கப்பற் சேவை எனபது அரசாங்கம் பச்சை விளக்குக் காட்டுவதில் தான் தங்கியுள்ளது. தமிழர் விடயங்களில் சிவப்பு விளக்கு காட்டும் பாதுகாப்பு அமைச்சு இது விடயத்தில் என்ன நிலைப்பாடு எடுத்துள்ளது என்று இன்னமும் தெரியவில்லை.

குடாநாட்டு மக்களுக்கு இப்போதைக்குத் தரைப் பாதைப் போக்குவரத்து வசதி கிடைக்கக் கூடியதாக அரசின் அரசியல் காய் நகர்த்தல்கள் அமையவில்லை. அதனால் விமானச் சேவையாயினும் சரி, கப்பற் சேவையாயினும் சரி மக்கள் பாதுகாப்பாகச் செல்வதற்கு ஏற்பாடு செய்வது அரசாங்கத்தின் கடமை.

பொதுமக்கள் பயணம் செய்யும் கப்பலிலோ அல்லது விமானத்திலோ அல்லது வேறெந்த வாகனத்திலோ படையினர் சேர்ந்து பிரயாணம் செய்தால், அவை எதிர்த் தரப்பினரின் தாக்குதலுக்குரிய இலக்காக மாறலாம் என்பது சர்வதேசப் போர் விதிகளில் ஏற்கப்பட்ட ஒன்று.

இதனைத் தெரிந்து கொண்டுப மக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் துருப்புகளை ஏற்றி இறக்குவது மக்கள் பாதுகாப்பில் அரசுக்குக் கரிசனை இல்லை என்ற முடிவுக்கே இட்டுச் செல்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, யாழ்ப்பாண மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் செய்ய வந்திருக்கும் உதவிக்குக் குந்தகம் விளைவிக்காது அரசு செயற்பட வேண்டும். மக்களின் அடிப்படைச் சுதந்திரங்களில் போக்குவரத்து உரிமையும் ஒன்றாகும். இனியும் ''பாதுகாப்புக் காரணம்'' முத்திரை குத்தி உத்தேச பயணிகள் கப்பற் சேவைக்குத் தாமதமோ தடங்கலோ விளைவிக்க அரசு எண்ணலாகாது.

அத்தகைய நினைப்பு எதுவும் அரசிடம் இருந்தால், தங்கள் பாதுகாப்பில் அரசுக்கு எந்தளவு கரிசனை உண்டு என்பதனை யாழ்ப்பாண மக்கள் மிகத் தெளிவாகத் தெரிந்து கொள்வர்; புரிந்து கொள்வர். அவ்வாறு செயற்பட்டு யாழ். மக்களின் இதயங்களை வெல்ல முடியாது என்பதனை அரசு தெளிந்து கொள்ளட்டும்.

★ ★ ★

# குழந்தையும்...

(XII ஆம் பக்கத்தொடர்)

சிகிச்சை நிலைய ஆலோசனைப்படி கொடுக்கலாம்.

இரத்தவிருத்திக்குத்தேவையான இரும்புச் சத்தும் கண்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் விற்றமின் 'ஏ' சத்தும் பச்சை மரக்கறி வகை, பருப்பு, கீரை ஆகியவற்றில் உண்டு. இவை பற்கள் உறுதியாக வளருவதற்கும் உதவுகின்றன. ★

# காதல்....

(I ஆம் பக்கத் தொடர்)

என்று கூறலாமா?

இல்லை. இல்லை. காதலித்தவர் மீது வெறுப்பு வராமல் இருந்தால்தான் காதல் முழுமைபெறும். நேசித்தவரை வெறுக்கத் துவங்கும் போது, நீங்கள் நேசித்தது நாடகமென்று ஆகிறது. அது மிகப்பெரிய பொய்யென்பது உங்களுக்கே தெரிய வருகிறது. வேடதாரிகள் வாழ்க்கையில் ஜெயித்ததில்லை.

சுயநலமிகளின் காதல்தான் வெறுப்புகளில் முடியும்.

காதல் ஒரு நல்ல உணர்வு. அந்த உணர்வுக்கு பரிணாம வளர்ச்சி உண்டு. ஒரு பெண்ணை காதலித்த விஷயம் இறை உணர்வை தூண்டிவிட்டு பேரண்டப் பெருவெளியோடு தொடர்பு கொள்ள வைக்கும் விஷயமாக மாறும். இப்படி மாற வாய்ப்பிருக்கிறது.

காதல் மிக அவசியமானது. எனக்கு அதுபற்றி தெரியும். மேலும் வேறு எது பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது. ★

## பச்சைப் பொய்

செம்மணிப் புதைகுழிகள் அடுத்த மாதம் ஐந்தாம் திகதி தோண்டப்படும் என்று அரசாங்கம் திடீரென ஒரு பெரும் அறிவிப்பைக் கடந்த புதன் கிழமை வெளியிட்டது. அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சு இது சம்பந்தமாக இரண்டு பக்கச் செய்தி அறிக்கை ஒன்றை நீட்டி முழக்கி வெளியிட்டிருந்தது.

400 க்கும் மேற்பட்ட குடாநாட்டின் இளைஞர் — யுவதிகளை இராணுவத்தினர் கொன்று அவர்களின் சடலங்கள் செம்மணியில் புதைக்கப்பட்டதாக இராணுவக் கோப்ரல் சோமரட்ண ரரஜபக்ஸ நீதிமன்றத்தில் தகவல் வெளியிட்டு ஏழு மாதங்கள் கடந்த பின்பு — அரசாங்கம் திடீரென்று நித்திரையில் இருந்து விழித்தெழுந்த கும்பகர்ணன் போன்று, திடுதிடுப்பென இதுவிடயத்தில் தகவல் வெளியிட்டுள்ளது.

இவ்வருடம் ஜனவரி ஏழாம் திகதி, யாழ்ப்பாண நீதிமன்றத்தில் இரகசியப்பொலீஸார் செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தாக்கல் செய்திருந்தனர். செம்மணி விவகாரத்தில் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான ஆரம்ப நடவடிக்கை அதுவேயாகும்.

ஆனால் அப்பொழுது வாய் திறவாமல் இருந்த அரசாங்கம் இப்போது திடீரென வெளிவிவகார அமைச்சு ஊடாகச் செய்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டிருப்பது ஏன் என்பது சம்பந்தமாகப் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இந்தத் திடீர் அறிக்கை நிச்சயமாக ஒன்றுக்கு மேற்பட்ட உள் நோக்கங்களைக் கொண்டிருக்கும் என்பதில் எதுவித சந்தேகங்களுமில்லை.

இந்த நீண்ட செய்தி அறிக்கை புதன்கிழமை அன்றே உலக நாடுகளின் தலைநகரங்களுக்கு எல்லாம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும். அங்குள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் பெரும் பிரசாரமும் மேற்கொள்ளப் பட்டிருக்கும்.

அதற்கு மேலதிகமாக வடமேல் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கம் தேர்தல் வன்முறையில் ஈடுபட்டதாகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் அக்கறை இழந்துவிட்டதுஎன்ற எண்ண அலையை வெளிநாடுகளில் ஏற்படுத்தியிருந்தது. இவற்றைப் போக்கடிக்கும் நோக்குடனேயே செம்மணிதொடர்பாகத் திடீர் அறிக்கை ஒன்றைக் கொழும்பு அரசு வெளியிட்டிருக்கின்றது என ஊகிக்கலாம்.

அதுவும் வெளிநாட்டு அமைச்சின் மூலம் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தால் அது உலக நாடுகளைக் கருத்தில் கொண்டே தயாரிக்கப்பட்டது என்று கொள்ள இடமுண்டு. முறைப்படி செம்மணி சம்பந்தமான விடயத்தை நீதி அமைச்சு வெளியிட்டிருக்க வேண்டும். அது தவறினால் வழக்கைத் தாக்கல் செய்த பொலீஸார் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டிருக்கலாம்.

செம்மணிப் புதைகுழி சம்பந்தமான விசாரணையே எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நிகழவுள்ளது. ஆனால் அரசாங்கம் புதன் கிழமை வெளியிட்ட செய்தி அறிக்கையில் புதைகுழிகளை தோண்டும் வேலைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக பச்சைப் பொய் கூறியுள்ளது.

இத்தனைக்கும் இந்த வார ஆரம்பத்தில் பெய்த கடும் இரவு மழை காரணமாகச் செம்மணிப்பகுதியில் இன்னமும் தண்ணீர் தேங்கியுள்ளது.

அரசாங்கம் இந்த அறிக்கையை வெளியிடுவதற்கு மிகவும் விசேடமான உள்நோக்கம் ஒன்று இருப்பது குறித்தும் அவதானியின் மத்தியில் பேச்சடிபடுகிறது.

வடமேல் மாகாணசபைத் தேர்தலின் பின்னரும் இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது குறித்து வெளிநாடுகள் பலவும் மறுபரிசிலனை செய்யக் கூடும் என்ற அச்சம் இலங்கை அரசாங்கத்தைக் கலக்கிஉள்ளதாம்.

மேலும் ஜேர்மனியில் இருந்து இலங்கையின் மனித உரிமை பேணுதல்கள் பற்றி ஆராய்வதனையும் ஒரு பணியாகக் கொண்டு விசேட குழு ஒன்று இலங்கைக்கு வந்துள்ளது. அந்த நாட்டின் 2 நீதிபதிகளையும் 2 வழக்கறிஞர்களையும் அந்தக் குழுவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வர தமிழர்வட்டாரங்கள் ஆயத்தம் செய்துள்ளன.

எனவே அந்தக் குழுவைத் திருத்திப்படுத்தும் விதத்தில் தமிழர்கள் சம்பந்தப்பட்ட புதைகுழி விவகாரத்தை முன்னெடுப்பதாக அரசு காட்டிக் கொண்டுள்ளது.

செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்டு, புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் சடலங்களின் எச்சங்கள் பெறப்படுமாயின் — தமிழர்களின் வாழும் உரிமைகள், மனித உரிமைகள் எவ்வாறு இலங்கை அரசினால் நாசமாக்கப்படுகின்றன என்பது தெரியவந்தால் — அரசாங்கத்துக்கு வெளியுலகில் பெரும் தலைகுனிவு ஏற்படும்! ★

# பாதுகாப்பு நெருக்கடியை...

(III ஆம் பக்கத் தொடர்)

திய மார்ச் மாதம் முழுவதும் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடிக்கும். எனவே பாதுகாப்பை உறுதி செய்வதற்கு மேலதிகமாகப் பெரும் எண்ணிக்கையான பொலீஸாரையும், படையினரையும் அவர்களது யுத்த கடமைகளிலிருந்து விடுவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும், எனவே புதிய படைநகர்வுகளை மேற்கொள்ள மார்ச் மாதப் பகுதி படையினருக்குச் சாதகமாக அமையாது. எனவே தற்காப்பு நடவடிக்கைகளில் மட்டுமே அதிக கவனம் செலுத்த வேண்டியநிலை படையினருக்கு ஏற்படும்.

இம்மாத இறுதிக்குள் எங்காவது ஒரு முனையில் படையினர் சிறு நகர்வைமேற்கொள்ளக்கூடும், ஆனால் அதில் ஏற்படக்கூடிய இழப்புக்கள் அரசாங்கத்துக்கு தேர்தல் காலத்தில் பின்னடைவைக் கொடுத்துவிடலாம். எனவே மிக அவதானத்துடனேயே படையினர் அத்தகைய நகர்வை ஆரம்பிப்பர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை மாவீரர்தின சமாதான அழைப்புக்குப் பின் பெரியதாக்குதல் எதையும் இதுவரை அவர்கள் மேற்கொள்ளவில்லை. ஆனால் அவர்கள் பெரும்பாய்ச்சலுக்குத் தயாராகி வருவதாகத் தகவல்கள் மட்டும் வெளிவருகின்றன. நீண்ட காத்திருப்பை ஏற்படுத்துவதன் மூலம் படையினரின் கவனத்தை சோர்வடையச் செய்து பின் திடீரெனத் தாக்குவது புலிகளின் தந்திரமாக இருக்கலாம்.

### கடற்போக்குவரத்தை முடக்க முயற்சி

புலிகள் தங்கள் படை அணிகளை கடல்வழியாக நகர்த்துவதைத் தடுப்பதன் மூலம் அவர்களின் அடுத்த தாக்குதல் திட்டத்தைத் தாமதப் படுத்தலாம் எனப் படையினர் நம்புகின்றனர். அதற்காகவே — கடலில் — கடற்சமர்களில் கடற் படையினர்தீவிரம்காட்டுகின்றனர். அண்மையில்கடற் புலிகளின் கடற்போக்குவரத்தை கடற்படையினர் வழிமடக்கித் தாக்கிய மூன்றாவது சம்பவம் கடந்த திங்கள் அதிகாலை கச்சதீவுக்கும், நெடுந்தீவுக்கும் இடைப்பட்ட கடற் பரப்பில் இடம்பெற்றிருக்கிறது. இந்தச் சமரில் புலிகள் தமது தரப்பில் 13 போராளிகளை இழந்ததை ஊர்ஜிதம் செய்துள்ளனர்.

தென்னிந்தியாவுக்கும், தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இடையிலான புலிகளின் கப்பல் போக்குவரத்துத் தொடர்பைத் துண்டிப்பதற்காகக் கடற்படையினர் முழுமூச்சுடன் செயலில் இறங்கி இருப்பதாகவும் —

கடற்புலிகளின் 'வயர் லெஸ்' தொடர்புகளையும், நடமாட்டங்களையும் துல்லியமாகப் பதிவுசெய்யும் நவீன ராடர் வலைப் பின்னல் அமைப்பொன்றை கடற்படையினர் வடகிழக்கு மற்றும் கிழக்குக் கரையோரப் பகுதியில் அமைத்துள்ளதாகவும் —

பாதுகாப்பு விமர்சகர்கள் மூலம் தகவல் வெளியாகி உள்ளது.

கடற் புலிகளின் நடமாட்டம் தொடர்பாகக் கிடைத்த மிகத் துல்லியமான உளவுத் தகவல்களே அண்மையில் கடற்படையினர் மேற்கொண்ட வெற்றிகரமான நடவடிக்கைகளுக்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைக் காலத்தில் கடலில் கடற்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் அடுத்தடுத்து கடற்புலிகளுக்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன. இவற்றுக்குத் தக்க பதிலடி ஒன்றை விரைவிலேயே புலிகளிடமிருந்து எதிர்பார்க்கலாம்.

கடற்படையினரின் தளங்களை அல்லது குடாநாட்டுக்கான விநியோகக் கப்பல் அணிகளை இலக்கு வைத்து கடற்புலிகள் தங்கள் கைவரிசையைக் காட்டக்கூடும் என்று பாதுகாப்பு ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

### குடாநாட்டு நிலைமை

குடாநாட்டிலும் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து செல்கிறது. கைது, கடத்தல், காணாமற் போதல், மர்மக் கொலைகள் உட்பட பல மனித உரிமை மீறல் சம்பவங்களும் மலிந்து விட்டன. புலிகளின் ஊடுருவல்கள், செயற்பாடுகளை முறியடிப்பதற்காக பாதுகாப்புப் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள், ஆள்கள் திடீர் திடீரெனகாணாமற் போதல், மர்மமான கொலைகள் என்பன பொதுமக்களிடையே அச்ச உணர்வை அதிகரிக்கச் செய்து வருகின்றன.

உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் மற்றும் தமிழ்க் கட்சிகளுக்கு எதிரான தாக்குதல்களும் கடந்த சில காலங்களாக அதிகரித்துள்ளன. எங்கேயும் எந்நேரமும் எதுவும் நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவுகிறது. உள்ளூராட்சி சபைகளையும் அதன் உறுப்பினர்களையும் பாதுகாக்க இயலாத நிலையில் படையினர் உள்ளனர். ஒன்றில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் அதிகளவு படையினரை ஈடுபடுத்துதல் அல்லது உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு ஆயுதம் வழங்குதல் அல்லது அவர்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துதல் இவைகளில் ஒன்றை அல்லது அனைத்தையும் செயற்படுத்த வேண்டிய நிலை படைத்தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. இச் சூழ்நிலையில் குடாநாட்டில் இருந்து பொலீஸாரையோ படையினரையோ தேர்தல் கடமைகளுக்காக விடுவிக்க முடியாது. கிழக்கு மாகாணத்திலும் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. மட்டக்களப்பில் மின்மாற்றிகளும், தொலைபேசி பரிவர்த்தனை அமைப்புகளும் அடிக்கடி தகர்க்கப்பட்டு வருகின்றன. அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் ஊடுருவியும் புலிகள் தாககுதல்களை நடத்தி உள்ளனர். இந்நிலையில் அங்கிருந்தும் பொலிஸாரையோ, படையினரையோ வாபஸ் பெற முடியாது.

இத்தகைய இக்கட்டான பாதுகாப்பு நிலைமையின் மத்தியில் 5 மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்தி முடிக்க வேண்டி உள்ளது.

எதிர்க்கட்சி மற்றும் ஆளுங்கட்சி ஆதரவாளர்களிடையே நீறு பூத்த நெருப்பாக இருக்கும் எதிர்ப்புணர்வு இந்தத் தேர்தலில் பெரும் இரத்தக் களரிக்கு வழி வகுக்கலாம் என தெற்கில் அச்சம் நிலவுகிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தங்களையும் சமாதானங்களையும் சந்தித்த ஹுசேய்னின் 47 வருடகால ஆட்சி!

## உலக உலா

என். பி. சீலன்

ஜோர்தான் மன்னர் ஹுசேய்ன் தமது 63 ஆவது வயதில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அம்மானில் காலமானார்.

கடந்த 5 தசாப்தகால மத்திய கிழக்கு வரலாற்றில் பல யுத்தங்களையும், உள்நாட்டு நெருக்கடிகளையும், சமாதான ஒப்பந்தங்களையும் சந்தித்தவர் மன்னர் ஹுசேய்ன்.

அவரது மரணம் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் தற்போதைய முயற்சிகளுக்குப் பெரும் பின்னடைவு ஆகும்.

### புற்று நோய்

மன்னர் ஹுசேய்ன் புற்று நோய் காரணமாக அமெரிக்காவின் மாயோ மருத்துவ மனையில் சுமார் 6 மாதங்கள் சிகிச்சை பெற்று விட்டு ஜனவரி 19 ஆம் திகதி அம்மான் திரும்பினார். பின்னர் மீண்டும் சுகயீனம் அடைந்து 26 ஆம் திகதி அமெரிக்கா கொண்டு செல்லப்பட்டார்.

புற்று நோய் காரணமாக அவரது எலும்பு மச்சை மாற்றப்பட்டது. புதிய எலும்பு மச்சையை அவரது உடல் ஏற்க மறுத்தபோது அவரைக் காப்பாற்றும் முயற்சிகள் தோல்வி அடைந்தன.

### இறுதிச் சடங்கில் உலகத் தலைவர்கள்

தனது சொந்த நாட்டில் இறக்க விரும்புவதாக அவர் தெரிவித்த போது கடந்த வெள்ளிக்கிழமை அம்மான் கொண்டுவரப்பட்டார். அடுத்த இரு நாள்களில் அவரது உயிர் பிரிந்தது,

அம்மானில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இவரது இறுதிச் சடங்குகளில் 17 ஜனாதிபதிகள், 13 அரச வம்சப் பிரதிநிதிகள் உட்பட 50 நாடுகள் கலந்து கொண்டன. சர்வதேச அரங்கில் ஜோர்தானின் புகழை இது பெருமளவில் உயர்த்தி விட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு யூத தீவிரவாதி ஒருவரினால் சுட்டுக் கொல்லப்பட்ட இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ராபீனின் இறுதிச் சடங்கின் பின்னர் பெரும் எண்ணிக்கையில் உலகத் தலைவர்கள் கலந்து கொண்டது மன்னர் ஹுசேய்னின் மரணச் சடங்கில்தான்.

பிரதமர் ராபீன் 1993 இல் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத்துடன் ஒஸ்லோ, ஒப்பந்தத்திலும் —

1994 இல் ஜோர்தான் மன்னர் ஹுசேய்னுடன் இஸ்ரேல் — ஜோர்தான் சமாதான ஒப்பந்தம் ஒன்றிலும் —

கைச்சாத்திட்டு மத்திய கிழக்கு சமாதானத்தில் பெரும் பங்கு வகித்தவர்..

ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான 45 வருட கால யுத்த நிலைமையை இஸ்ரேல் — ஜோர்தான் ஒப்பந்தம் முடிவுக்கு கொண்டு வந்தது.

மேற்குக்கரை மீதான தனது சகல உரிமைகளையும் 1988 இல் ஜோர்தான் கைவிட்டு அதனை பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்திடம் அளித்தது. 5 வருடங்களின் பின்னர் ஒஸ்லோ ஒப்பந்தம் ஏற்படுவதற்கு இதுவே அடித்தளம் இட்டது என்பதில் சந்தேகம் இல்லை.

1967 இல் இடம் பெற்ற 6 நாள் யுத்தத்தில் மேற்குக் கரையையும் பழைய ஜெருஸலத்தையும் ஜோர்தான இஸ்ரேலிடம் பறி கொடுத்தது.

தற்பொழுது இஸ்ரேல் வசம் உள்ள சிரியாவின் கோலான் குன்றுகள் மேற்குக் கரையிலும் காஸாவிலும் பலஸ்தீனருக்கு சுயாட்சி அமைக்கும் நடவடிக்கைகள் ஆகியவையே எஞ்சி உள்ள பிரதான பிரச்சினைகள்.

### வைநதி ஒப்பந்தம்

மேற்குக்கரையில் இருந்து இஸ்ரேல் படைகளை வாபஸ் பெறுவதில் பிரச்சினை தோன்றிய போது கடந்த ஆண்டு ஒக்ரோபரில் செய்து கொள்ளப்பட்டதே வைநதி ஒப்பந்தம்.

இந்த ஒப்பந்தத்தில் இஸ்ரேல் பிரதமர் நெத்தன்யாகு, பலஸ்தீன தலைவர் யஸீர் அரபாத் உட்பட மன்னர் ஹுசேய்ன், பில் கிளின்ரன் ஆகியோரும் ஒப்பமிட்டனர். இந்த ஒப்பந்தம் செய்து கொள்வதில் நெருக்கடி ஏற்பட்ட போது மன்னர் ஹுசேய்னின் உதவியையே கிளின்ரன் நாடினார். சுகயீனமான நிலையிலும் மன்னர் ஹுசேய்ன் நியூயோர்க் வந்து சமரசம் செய்து வைத்தார்.

### புதிய மன்னர் அப்துல்லா

தற்போது ஜோர்[illegible] புதிய மன்னராக [illegible] ஹுசேய்னின் மூத்த புதல்வர் அப்துல்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னர் ஹுசேய்னின் இரண்டாவது மனைவியான பிரிட்டிஷ் நாட்டவரான முனாவுக்கு பிறந்தவர் அப்துல்லா.

ஜோர்தானின் முடிக்குரிய இளவரசராக கடந்த 36 வருடகாலம் இருந்தவர் ஹுசேய்னின் இளைய சகோதரர் ஹசன் (53வயது).



மன்னர் ஹுசேய்ன்

6 மாதச் சிகிச்சையின் பின்னர் மன்னர் ஹுசெய்ன் அமெரிக்காவில் இருந்து திரும்பியவுடன் முடிக்குரிய இளவரசர் பதவியில் இருந்து ஹசன் நீக்கப்பட்டு அந்தப்பதவி அப்துல்லாவுக்கு வழங்கப்பட்டது.

தற்பொழுது முடிக்குரிய இளவரசராக அறிவிக்கப்பட்டிருப்பவர் ஹுசேய்னின் 4 ஆவது மனைவியான மகாராணி நூரின் 18 வயதுப் புதல்வர் ஹம்ஷா. மகாராணி நூர் லெபனானில் பிறந்த அமெரிக்கப் பெண்.

### இரு மகாராணிகள்

ஹுசேய்னின் உறவினரான டினா என்பவரே ஹுசேய்னின் முதல் மனைவி ஆவார்.


1956 இல் மன்னர் ஹுசேய்ன் டினாவை விவாகரத்துச் செய்து கொண்டார்.

2 ஆவது மனைவி முனா 1972 முதல் ஹுசேய்னிடம் இருந்து பிரிந்து வாழ்கிறார். எனினும் ஹுசேய்னின் அரச குடும்பத்துடன் மிக நெருங்கிய தொடர்புகளை இன்றும் வைத்துள்ளார். இவரது மகனே அப்துல்லா.

மூன்றாவது மனைவியான அலியா என்பவர் 1977 இல் ஹெலிக்கொப்ரர் விபத்தில் மரணம் அடைந்து விட்டார், அலியா ஒரு பலஸ்தீன பெண்.

ஜோர்தானின் அரசமைப்புப்படி மன்னர் இறந்தால் அவரது மனைவி தொடர்ந்து மகாராணியாக இருக்கலாம்.

ஜோர்தான் தற்பொழுது இரு மகாராணிகளைக் கொண்டுள்ளது. ஒருவர் மன்னர் ஹுசேய்னின் மனைவி நூர். மற்றவர் புதிய மன்னர் அப்துல்லாவின் மனைவி ராணியா. ராணியா ஒரு பலஸ்தீனபெண். மன்னர் ஹுசேய்னுக்கு நான்கு மனைவிமார் மூலமும் 12 குழந்தைகள் உள்ளனர்.



ஜோர்தானின் புதிய மன்னர் அப்துல்லா 1993 இல் பலஸ்தீன பெண்ணான ராணியாவை திருமணம் செய்த போது எடுக்கப்பட்ட படம். 28 வயது நிரம்பிய ராணியா உலகிலேயே வயது குறைந்த மகாராணி என்ற பெருமையைப் பெறுகிறார்.

### நீண்டகாலம் ஆட்சி செய்தவர்

மத்திய கிழக்கில் நீண்ட காலம் ஆட்சி நடத்திய பெருமை மன்னர் ஹுசேய்னையே சாரும்.

1952 ஆம் ஆண்டு இவர் பதவிக்கு வந்தார். அரபு தேசிய வாதம் மத்திய கிழக்கில் உள்ள மன்னர் ஆட்சி [illegible] இருந்த காலம் அது.

1953 இல் எகிப்தில் பதவிக்கு வந்த அப்துல் நாஸார், மன்னர் ஆட்சி நாடுகளுக்கு எதிராக போர்க் கொடி தூக்கினார். எகிப்தும் சிரியாவும் ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரில் இணைந்து பெரும் சவாலாக எழுந்தன.

1958 இல் ஈராக்கில் புரட்சி வெடித்தது. அப்பொழுது ஈராக்கில் மன்னராக இருந்த 2 ஆவது பைஸல் படுகொலை செய்யப்பட்டார். ஜோர்தானிலும் குழப்பங்கள் மூண்டன.

1960 இல் மன்னர் ஹுசேய்ன் பயணம் செய்த விமானத்தை சிரியாவில் சுட்டுவீழ்த்தவும் முயற்சிக்கப்பட்டது.

எனினும் 1967 இல் மத்திய கிழக்கில் இடம்பெற்ற 6 நாள் யுத்தத்தின்போது ஜோர்தானின் பலம்வாய்ந்த படைகள் அரபு நாட்டுப் படைகளுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராக நடத்திய போர் அரபுநாடுகளுக்கும் ஜோர்தானுக்கும் இடையிலான விரிசலைக் குறைக்க உதவியது.

### உள்நாட்டு யுத்தம்

1970 இல் ஜோர்தானில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம்காரணமாக அரபு நாடுகளுக்கும் ஜோர்தானுக்கும் இடையிலான விரிசல் மீண்டும் அதிகரித்தது.

ஜோர்தானில் பலஸ்தீன விடுதலை இயக்கம் ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது பலஸ்தீன விடுதலை இயக்கப் படைகளுக்கும் ஜோர்தான் படைகளுக்கும் இடையில் போர் மூண்டது.

1971 இல் பலஸ்தீன விடுதலை இயக்கப் படைகள் ஜோர்தானில் இருந்து வெளியேற்றப்பட்டன.

ஜோர்தானில் இருந்து லெபனானுக்கும் பின்னர் டுனிசியாவுக்கும் தமது தலைமையகத்தை மாற்றிய பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத் இறுதியாக தற்போது மேற்குக் கரையிலும் காஸாவிலும் பலஸ்தீன அதிகார சபையை சமாதான ஒப்பந்த மூலம் அமைத்துள்ளார்.

1973 இல் மத்திய கிழக்கில் இடம்பெற்ற ''யொம் கிப்புர்'' யுத்தத்தின்போது சிரியாவுக்கு உதவியாக ஜோர்தான் ஒரு சிறுபடையை அனுப்பி இருந்தது. 1978 இல எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தத்தையும் மன்னர் ஹுசேய்ன் எதிர்த்தார். இவை கடும் போக்கான லிபியா, சிரியா போன்ற நாடுகளை சாந்தப் படுத்த உதவியது.

மன்னர் ஹுசேய்ன் மேற்கு நாடுகளுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருந்தார். மேற்கு நாடுகளின் உதவிகளிலேயே ஜோர்தான் பெரும் அளவு தங்கி வருகிறது.

### இயற்கை வளம் குன்றிய நாடு

ஜோர்தான் இயற்கை வளம் குன்றிய நாடு. 1967 யுத்தம், 1990-91 வளைகுடா நெருக்கடி ஆகியவை ஜோர்தானை மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளிவிட்டன.

1967 யுத்தத்தில் மேற்குக் கரையை இஸ்ரேலிடம் பறி கொடுத்ததினால் மொத்த விவசாய நிலங்களில் 50 சத வீதத்தை ஜோர்தான் இழந்தது. மேற்கு கரையில் வசித்த பெரும் எண்ணிக்கையான பலஸ்தீனர்கள் அகதிகளாக ஜோர்தான் சென்றதால் ஜோர்தானில் வேலை அற்றோர் எண்ணிக்கை 30 சத வீதத்தால் உயர்ந்தது.

வளைகுடா யுத்தத்துக்கு முன்னர் அல்அக்பா துறைமுகத்தில் இருந்து ஜோர்தானின் தரை மார்க்கமாகவே ஈராக் பொருள்களை இறக்குமதி செய்து வந்தது. இதன்மூலம் ஜோர்தானுக்கு பெருமளவு பணம் கிடைத்து வந்தது. வளைகுடா யுத்தம் இந்த போக்குவரத்துக்கு முடிவு கட்டியது ஜோர்தானுக்கு பெரிய இழப்பு ஆகும்.



மன்னர் ஹுசேய்ன் இறந்த செய்தி அறிவிக்கப்பட்டபோது, அவரது சடலம் வைக்கப்பட்டிருந்த மருத்துவ மனைக்கு வெளியே ஜோர்தானிய பெண்கள் கூடி நின்று அழும் காட்சி.

அத்துடன் குவைத் மீதான ஈராக்கிய படை எடுப்பை மன்னர் ஹுசேய்ன் கண்டிக்க மறுத்தபோது பெரும்பாலான வளைகுடா நாடுகள் தமது நாடுகளில் வேலை செய்து வந்த ஜோர்தானியர்களைத் திருப்பி அனுப்பிவிட்டன.

ஈராக்கைக் கண்டிக்கத் தவறியது அமெரிக்காவினதும் வளைகுடா நாடுகளினதும் எதிர்ப்பை ஜோர்தானுக்கு சம்பாதித்துக் கொடுத்தது.

எனினும் சகல நெருக்கடிகளையும் வெற்றிகரமாக எதிர்கொண்டது மூலம் சர்வதேச அரங்கில் ஜோர்தானுக்கு பெரும் புகழ் தேடிக் கொடுத்துள்ளார் மன்னர் ஹுசேய்ன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org